516

மறக்க முடியுமா?
டிராலி
மஸ்க்
சோப்
A.V.R.A & CO.
MADRAS & BOMBAY



OFFICE OF THE REGISTRAR OF BOOKS
21 APR 1955

பிப்ரவரி 11உ முதல்

சென்னை வெலிங்டன், பிரபாத், சரஸ்வதி மூன்று தியேட்டர்களிலும்

மற்றும் தமிழ்நாடெங்கும்

லலிதா • சகஸ்ரநாமம் • சுந்தரிபாய் • எஸ்.வி.சுப்பய்யா

வனஜா • ஆர். கணேசன் • டி. எஸ். துரைராஜ் • பி.எஸ். ஞானம் நடித்தது

டைரக்ஷன்: கொத்தமங்கலம் சுப்பு

ஸ்டுடியோ: ஜெமினி • ஜெமினி ரிலீஸ்

பிப்ரவரி 5ம் முதல்
கெயிட்டி - பிராட்வே
• சயானி •
மற்றும் தமிழ் நாடெங்கும்
பார்வர்டு ஆர்ட் பிலிம்ஸ்
நல்ல தங்கை
டைரக்ஷன் :
S.A. நடராஜ்
கதை வசனம் :
A.P. நாகராஜன் ...
ஸ்டுடியோ :
சென்ட்ரல் கோவை ...

பிப்ரவரி 1955

# குண்டூசி

பட்டை 8
ஊசி 5
பிரதி 89

ஆசிரியர் : பி. ஆர். எஸ். கோபால்

## ஆவடி காங்கிரஸ்

இருபத்தியெட்டு வருஷங்களுக்குப் பிறகு—எட்டாம் தடவையாக—காங்கிரஸ் மஹாசபையின் வைரவிழாக் கூட்டம் இவ்வருஷம் சென்னை-ஆவடியில் கோலாகலமாய் நடந்தேறியது. சாதாரண காலங்களில் பொட்டல் வெளியாய் கிடந்த இடம் காங்கிரஸ் மஹாசபை கூடிய சமயத்தில் ஒரே தலை சமுத்திரமாகக் காட்சியளித்தது.

தினம் ஆவடியில் கூடிய இரண்டு மூன்று லக்ஷம் பேர்களுக்கு உட்காரவும், தங்கவும், குடிதண்ணீர், சிற்றுண்டி, சாப்பாடு, இருப்பு முதலிய வசதிகளைச் செய்ததானது லேசான காரியமா என்ன? இருந்த போதிலும், வரவேற்புக் கமிட்டியினரும், இரயில்வே, போலீஸ் அதிகாரிகளும் நன்கு ஒத்துழைத்து காங்கிரஸை மகோன்னத வெற்றியாக நடத்தி வைத்தார்கள். ஏற்பாடுகளைப் பற்றியும்—முக்கியமாக மேடை அமைப்பு அலங்காரத்தைப் பற்றியும் நேருஜி இவ்வளவு அவ்வளவு என்றில்லாமல் புகழ்ந்திருக்கிறார். ஏற்பாடு வசதிகள் விஷயத்தில் இதற்கு முன்னர் நடந்த அத்தனை காங்கிரஸையும் ஆவடிக் காங்கிரஸ் தோற்கடித்துவிட்டது.

ஏற்பாடு வசதிகள் விஷயத்தில் மட்டுமன்றி, சரித்திர முக்கியத்துவத்திலும் ஆவடிக் காங்கிரஸ் நிகரற்று விளங்குகிறது. காங்கிரஸ் மஹா சபை தோன்றுவதற்கே சென்னை தான் காரணமாக இருந்திருக்கிறது. அதன் பிறகு, காங்கிரஸின் கை சளைத்துப்போன சமயங்களிலெல்லாம் கைகொடுத்து உதவியிருக்கிறது சென்னை. 1927-ம் ஆண்டில் நடந்த சென்னைக் காங்கிரஸில்தான் "பரிபூரண சுதந்திர"த் தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.

இத் தீர்மானம் நிறைவேற்றப் பட்ட சென்னையிலேயே, சரித்திரப் பிரசித்தியடையப்போகும் மிக முக்கியமான இன்னொரு தீர்மானத்தை ஆவடி காங்கிரஸ் நிறைவேற்றியிருக்கிறது. இந்திய சமூகம் சோஷலிஸ பொருளாதார அடிப்

படையில் வளரவேண்டும் என்பதே அது. "இந்த ஜனநாயக சோஷலிஸம் காந்திஜியின் ஸர்வோதய தத்துவங்களை ஆதரிப்பதேயன்றி எதிர்ப்பதல்ல. இதன் மூலமே நம் நாடு துரிதமாய் சுபிக்ஷமடைய முடியும்" என்று தலைவர்கள் கூறியிருக்கிறார்கள். இப்படியாக ஆவடியில் காங்கிரஸ் தன் லக்ஷியத்தை மேலும் ஒரு படி உயர்த்திக் கொண்டு விட்டது.

"காங்கிரஸ் வெறுமனே மந்திரி சபைகளை நடத்தி வைக்கும் ஒரு அரசியல் கட்சியல்ல. ஆனால், மந்திரி சபைகளை நடத்துவது அதன் மாபெரும் பொறுப்புகளில் ஒன்றே ஒன்றுதான்.

"சமூகத்தினருடன் நெருங்கி ஒத்துழைத்து, அவர்களுடைய நலன்களுக்காக சேவை செய்வதே காங்கிரஸின் முக்கியமான வேலை" என்று புதிய காங்கிரஸ் தலைவர் ஸ்ரீ. தேபர் தமது பேருரையில் அழுத்தமாகக் கூறியிருக்கிறார், இதைச் சொல்லுவதற்கு முன்னதாகவே அவர் தாமே செயலளவிலும் செய்து காட்டியிருக்கிறார். சௌராஷ்டிர பிரதம மந்திரிப் பதவியை அவர் ராஜீநாமாச் செய்து விட்டு, காங்கிரஸ் தலைமைப் பதவியை மேற்கொண்டது போற்றத் தக்கதாகும்.

காங்கிரஸின் பூரண சுதந்திர லக்ஷியம் கைகூடியதும் காங்கிரஸ்காரர்களில் அநேகர், "இனி சர்க்காரை நடத்துவதே நம் லக்ஷியம்" என்று கருதத் தொடங்கிவிட்டனர். இதன் விளைவாக, நெருங்கிய பொதுஜன உறவு விஷயத்தில் காங்கிரஸ்காரர்கள் அலக்ஷியமாக இருந்து வரத் தொடங்கினார்கள். சில காங்கிரஸ்காரர்கள் பதவியைப் பெற்றவுடன் அதை தம் சுய நலத்திற்கு பயன்படுத்திக் கொள்ளவும் துணிந்தனர். இவர்கள் செய்த துரோகமானது, காங்கிரஸ் மஹாசபையின் ஆணி வேரையே அரிக்கத் தொடங்கி விட்டது. தேர்தலில் காங்கிரஸ் சில தொகுதிகளில் தோல்வியுற்றதற்கும், சட்ட சபைகளில் அசாதாரண மெஜாரிடியுடன் விளங்குவதற்குப் பதில் ஆட்டம் தரும் மெஜாரிட்டியுடன் இருக்க வேண்டிய தானதற்கும் சில தனிப்பட்ட காங்கிரஸ் காரர்களின் துர்ச் செய்கைகளே காரணமாகும்.

இவற்றை யெல்லாம் ஆவடிக் காங்கிரஸ் விஸ்தாரமாய் பரிசீலனை செய்திருக்கிறது. ஊழல்களை யெல்லாம் ஒழிப்பதற்காகவும், காங்கிரஸின் கொள்கைகளுக்கு மாறாக நடக்கும் காங்கிரஸ்காரர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுப்பதற்காகவும் காங்கிரஸ் ஒரு நிரந்தரக் கமிட்டியை ஏற்படுத்தியிருக்கிறது.

இது சம்பந்தமாக காங்கிரஸின் விஷயாலோசனைக் கமிட்டியில் விவாதம் நடந்தபோது, "காங்கிரஸ் இதுமாதிரி தன் தவறுகளை ஒப்புக்கொண்டு தீர்மானம் நிறைவேற்றினால் அது 'வெறும் வாயை மெல்லுபவர்களுக்கு ஒரு பிடி அவல் கிடைத்தமாதிரியாகி விடும். அதன் மூலம் காங்கிரஸ் ஸ்தாபனத்தின் பலமே குன்றிவிடும்" என்றெல்லாம் சிலர் பேசினார்கள். ஆனால், பழுத்த காங்கிரஸ் தலைவர்கள், "நம் தவறுகளை ஒப்புக் கொள்ளுவது தவறே அல்ல." என்று தெரிவித்து, ஒழுங்கு நடவடிக்கை பற்றிய தீர்மானத்தை நிறைவேற்றி யிருக்கிறார்கள்.

ஒளிவு மறைவின்றி நிறைவேற்றப் பட்டிருக்கும் இத் தீர்மானம் காங்கிரஸின் நேர்மையில் மக்களுக்குப் புது நம்பிக்கை ஏற்படும்படிச் செய்திருக்கிறது. "காங்கிரஸ் ஸ்தாபனத்தை முதலில் சீர்திருத்தி அமைப்பதே என் முதல் கடமை" என்று ஸ்ரீ. தேபர் அளித்துள்ள உறுதி மக்களுக்கு மிகத் திருப்தி அளிக்கிறது.

# "மிஸ்ஸியம்மா" ஒரு நல்ல படம்

## சிறந்த நடிப்பும், ஹாஸ்யமும் நிறைந்த பொழுதுபோக்கு

நவரஸங்களில் ஒவ்வொரு ரஸத்தையும் ஒவ்வொருவர் அதிகமாய் விரும்புவார்கள். ஆனால், ஹாஸ்ய ரஸத்தை விரும்பாதவர்களே இருக்க மாட்டார்கள். இந்த ரகஸியத்தை விஜயா புரடக்ஷன்ஸார் நன்குணர்ந்திருக்கிறார்கள். முன்பு "கல்யாணம் பண்ணிப் பார்" முழு நீள ஹாஸ்யப் படத்தை வெளியிட்டு வெற்றி கண்ட அவர்கள், "மிஸ்ஸியம்மா" என்ற மற்றொரு ஹாஸ்யப் படத்தை வெளியிட்டிருக்கிறார்கள். இப்படமும் தமிழ்நாடெங்கும் நல்லாதரவு பெற்று வருகிறது. படம் ஆரம்பம் முதல் கடைசிவரையில் ஒரே தமாஷ் நிறைந்ததாயிருக்கிறது.

மேரியும் பாலுவும் இரு பி. ஏ. பட்டதாரிகள். இருவரும் வேலை கிடைக்காமல் திண்டாடுகிறார்கள். முடிவில், பத்திரிகையில் விளம்பரம் செய்யப்பட்ட ஒரு வேலையை பெறுவதற்காக அவர்கள் புருஷன் மனைவியராக நடிக்கிறார்கள். ஒரு ஜமீன்தாரின் கிராமப் பள்ளிக்கூடத்தில் இருவரும் ஆசிரியர்களாக அமருகின்றனர்.

ஜமீன்தாரின் காணமற்போன பெண்ணைக் கண்டு பிடிக்க முயன்றுகொண்டிருக்கும் துப்பறியும் ராஜு இவர்களது அந்தரங்கத்தையும் ஆராய முற்படுகிறான். இவர்கள் கணவன் மனைவி அல்ல; மேரி ஹிந்து மதத்தைச் சேர்ந்தவளே அல்ல—என்ற ரகஸியம் பல தடவை வெளியாகப் பார்க்கிறது. ஆனால், அவ்வப்போது தந்திரமாக சமாளிக்கப்பட்டு வருகிறது.

முடிவில், மேரியை காதலிக்கும்—ஆனால், அவளால் வெறுக்கப்படும்—பித்துக்குளி டேவிட் அவளைத் தேடி வருகிறான். அவன் மூலம் இவர்களது ரகஸியம் வெளியாகிறது. அதே சமயம் மேரியின் பெற்றோரும் அங்கு ஆஜராகின்றனர். மேரியின் காலிலுள்ள மச்சத்தின் மூலமும், பெற்றோர் மூலமும் அவளே ஜமீன்தாரின் காணமற்போன பெண் என்பது ருஜுவாகிறது. மேரி பாலுவின் நிஜ மனைவியாக்கப்படுகிறாள்.

கதையின் அமைப்பு கோர்வையாய்—தமாஷ் சம்பவங்கள் நிறைந்ததாய் இருக்கிறது. நம்ப முடியாத சில சம்பவங்கள் கதையில் உள்ளன. எனினும், அவை சாதுரியமாய் கையாளப்பட்டிருக்கின்றன.

டைரெக்டர் பிரஸாத் இப்படத்தின் வெற்றிக்காகப் புகழப்பட வேண்டியவரே. சாதாரண விஷயங்களைக்கூட சிரத்தையுடன் கவனித்து படத்தை உருவாக்கியிருக்கிறார்.

பாலுவாக ஜெமினி கணேசனும், மிஸ்ஸியம்மாவாக சாவித்திரியும் நடிக்கின்றனர். கணேஷின் நடிப்பு இப்படத்தில் மிக இயற்கையாக அமைந்திருக்கிறது. ஜமீன்தாரிடம் வேலைக்கு அமர்ந்தபின் அவரது நடிப்பு 'சபாஷ்' கூறும் படியாக இருக்கிறது.

சாவித்திரி தம் முந்தின படங்களை யெல்லாம்விட இதில் அதிக பாவங்களுடனும், வேஷத்திற்கு மிகப் பொருத்தமாகவும் நடித்திருக்கிறார்.

இவர்கள் பெறும் வெற்றிக்கு சிறிதும் குறைந்ததாக இல்லை தெருப்பாடகன்—பிச்சைக்காரனாகத் தோன்றும் காமெடியன் சாரங்கபாணியின் நடிப்பு. இவர், உழைப்பில்லாமல் சுலபமாக பணம் சம்பாதிக்கும் 'பிஸினஸை' நமக்குக்காட்டி வயிறு வலியெடுக்கும்படிச் சிரிக்க வைக்கிறார்—"வெள்ளையப்பனைத் தள்ளினாலல்லாது" இவரிடம் எந்த விஷயமும் நடவாது! ஜாக்கிரதை!

துப்பறியும் கோமாளியாக நடிக்கிறார் தங்கவேலு; நடிப்பும் பேச்சும் தமாஷாயிருக்கிறது. இவர் சங்கீதம் கற்றுக்கொள்ளும் காட்சி பிரமாதம்! இவரது "பிரைவேட் செகரட்டரி"யாக நடிக்கும் கருணாநிதியும் பரவாயில்லை.

டேவிட்டாக நடிக்கும் நம்பியாரின் நடிப்பு சுமாராயிருக்கிறது. ஜமீன்தார் ரங்கராவ் வழக்கம் போலவே தம் பாகத்தை நன்கு நடித்துள்ளார்.

அநேகமாக எல்லாப் படங்களிலும் "உயிரைவிட்டு" நடிக்கும் வழக்கமுள்ள துரைசாமி இதில் "உயிரைவிடாமலே" நடித்திருப்பது ஒரு விசேஷம்.

நல்லது கெட்டது தெரியாத பேதைச் சிறுமியாக நன்கு நடித்திருக்கிறார் ஜமுனா. மற்றவர்களும் கூடியவரையில் பொருத்தமாகவே நடித்திருக்கிறார்கள்.

[தொடர்ச்சி 51-ம் பக்கத்தில்]

பாரத நாட்டின் முன்னேற்றம் மற்றும் சுபீட்சத்திற்கு

இவற்றில் முதலீடு செய்யுங்கள்

# சிறு சேமிப்புத் திட்டம்

**உங்கள் சேமிப்புமூலம் கிடைக்கும் நிச்சய அனுகூலங்கள் :**

உங்கள் நாட்டுக்கு

- வாழ்க்கைத் தர உயர்வு
- அதிக சிறப்புள்ள சமூக சேவைகள்
- பொருளாதாரம் மற்றும் தொழில் அபிவிருத்தி

உங்களுக்கு

- ஒரு பத்திரமான முதலீடு
- ஒரு கணிசமான வட்டி விகிதம்
- வருமான வரி கழிவின்றி கிடைக்கும்

நாட்டுக்கு சுபீட்சம்—உங்களுக்கு பாதுகாப்பு

**உங்கள் சேமிப்புகளை இவ்வுத்தரவாதம் பெற்ற செக்யூரிடிகளில் முதலீடு செய்யுங்கள்**

| | |
|---|---|
| 12 வருட நேஷனல் ஸேவிங்ஸ் சர்டிபிகேட்டுகள் | கெடு பூர்த்தியானபோது வருடம் 1-க்கு 4·16 சதவிகிதம் வட்டி பெறுவது. ரூ. 5 முதல் ரூ. 5,000 வரை மதிப்புகளில் கிடைக்கும். தனி நபர் ரூ. 25,000க்கு மேற்படாத அளவிற்கு வாங்கலாம். |
| 10 வருட டிரெஷரி ஸேவிங்ஸ் டிபாஸிட் சர்டிபிகேட்டுகள் | ஆண்டுதோறும் 3½ சதவிகித வட்டி வழங்கப்படும். ரூ. 100ன் மடங்குகளில் ரூ. 25,000 வரை மதிப்புகளில் கிடைக்கும். தனி நபர் 25,000க்கு மேற்படாத அளவிற்கு வாங்க முடியும். |
| 10 வருட நேஷனல் பிளான் சர்டிபிகேட்டுகள் | கெடு பூர்த்தியாகும்போது வருடம் 1-க்கு 4½ சதவிகித வட்டி பெறும் ரூ. 25, ரூ. 50, 100 & ரூ. 500 மதிப்புகளில் கிடைக்கும். தனி நபர் உயர்ந்த பக்ஷம் ரூ. 1,000 வரை வாங்கலாம். |
| போஸ்டாபீஸ் ஸேவிங்ஸ் பாங்க் அகௌண்ட்ஸ் | டிபாசிட் இருப்புத் தொகையின் பேரில் ரூ. 10,000 வரை 2 சதவிகித வட்டியும், அதற்கு மேல் ரூ. 15,000 வரை 1½ சதவிகித வட்டியும், சேர்க்கப்படும். |

**15 வருட ஆன்னியுடி சர்டிபிகேட்டுகள்**

| | |
|---|---|
| வெளியீடு விலைகள் ரூ. 3,500, ரூ. 7,000 ரூ. 14,000 மற்றும் ரூ. 28,000. தனி நபர் ரூ. 28,000 வரை வாங்கலாம். | 3½ சதவிகித தொடர் வட்டி சேர்த்து பிரதி மாதமும் சம தவணைகளாக மொத்தம் 15 வருட காலத்தில் திருப்பிக கொடுக்கப் படுகிறது. |

இதர விவரங்களுக்கும், மற்றும் இம் முதலீடுகளைக் குறித்த விதிகளுக்கும் ஸிம்லாவிலிருக்கும் நேஷனல் சேவிங்ஸ் கமிஷனருக்கோ அல்லது உங்கள் ராஜ்யத்தைச் சேர்ந்த ரீஜனல் நேஷனல் சேவிங்ஸ் ஆபீஸருக்கோ எழுதி விசாரிக்கவும்.

# இந்தியாவின் எதிர்காலத்தில் முதலீடு செய்க

"நா செல்லலு"
அமர்நாத், சூர்யகலா

நம் பரத நாட்டியக் கலை இருக்கிறதே. இதன் புகழ் உலகமெங்கும் வியாபித்திருக்கிறது. இக்கலையில் சாஸ்திர ரீதியான அமைப்பையும், சிறப்பையும் அறிந்த பல கலைஞர்கள் இந்தியாவின் பல பாகங்களிலிருந்தும், ஏன், வெளி நாடுகளிலிருந்துங்கூட—தமிழ் நாட்டிற்கு வந்து தங்கி. இக்கலையில் பயிற்சி பெற்றுச் செல்லுகிறார்கள். இவ்விதம் பரத நாட்டியத்தின் காந்த சக்தியால் கவர்ந்திழுக்கப்பட்டு காகிநாடாவிலிருந்து சென்னைக்கு வந்து சேர்ந்தவரே "ஜாதகம்" புகழ் சூர்யகலா. பரத நாட்டியம் கற்றுக்கொண்டு விட்டபின் ஒருவரால் சும்மா இருக்க முடியுமா; அல்லது சும்மா இருக்கத்தான் விடுவார்களா நம் படமுதலாளிகள்? சூர்யகலா வெறும் நடன நக்ஷத்திரமாக இருந்து விடாமல் சினிமா நக்ஷத்திரமாகவும் ஆகிவிட்டார்.

காகிநாடாவில் வியாபார வட்டாரத்தில் எஸ். ஆர். ராமி ரெட்டி என்ற பெயரை அறியாதவர்கள் இருக்கமாட்டார்கள், "ஓ, தெரியுமே! பிரபல தேங்காய் வியாபாரி ராமி ரெட்டி தானே" என்று சட்டென பதில் கிடைக்கும். தேங்காய் தவிர. அவர்

# சூர்ய கலா

## வாழ்க்கை வர்ணனை

மற்றும் பல வியாபாரங்களிலும் ஈடுபட்டிருக்கிருர்.

இந்த ராமிரெட்டிக்கும், நரஸாபுரம் சுபத்திரம்மாவுக்கும் ஏக புத்திரியாகப் பிறந்தவரே சினிமா வானில் பிரகாசிக்கத் தொடங்கி யிருக்கும் சூர்யகலா. ஒரு பணக்காரக் குடும்பத்தில்—அதுவும் ஏக புத்திரியாகப் பிறந்துவிட்டால் கேட்க வேண்டுமா? பெற்ருேர்களால் ரொம்பவும் செல்வமாக வளர்க்கப்படலானுர் அவர்.

சூர்யகலா சிறு வயதிலேயே காக்கிநாடாவில் உள்ள பள்ளிக்கூடமொன்றில் சேர்க்கப்பட்டார். ஆனல் சூர்யகலாவிடம் அதற்கு முன்பே குடிகொண்டிருந்த விளையாட்டுத் தனங்களும், குறும்புத்தனங்களும் படிப்பிற்கு இடமளிக்க மறுத்துவிட்டன. அதனல் சுமார் ஐந்து வருஷ காலம் படிப்பு அவரிடம் படாதபாடு பட்டது.

படிப்பிற்கு சூர்யகலா பிரிவுபசாரத்தை நடத்துவதா; அல்லது படிப்பே அவருக்குப் பிரிவுபசாரம் நடத்துவதா என்ற நிலைமை ஏற்பட்ட சமயத்தில் தான் சூர்யகலாவுக்கு நடனத்தில் மோஹம் ஏற்பட்டது. சாதாரணமாகவே அவருக்குப் படிப்பில் சுவாரஸ்யம் ஏற்படவில்லை; இப்பொழுதோ அவரது 'கவனம் நடனத்தில் திரும்பிவிட்டது. இதுமட்டுமா; சினிமா போஸ்டர்களைப் பார்க்கும் போதெல்லாம் 'தாமும் ஒரு பிரபல நக்ஷத்திரம் ஆகிவிடவேண்டும்' என்ற ஒரு ஆசையும் அவர் மனதில் குடிபுகுந்து விட்டது. பிறகு கேட்பானேன்; படிப்பை முதல் பாரத்துடன் நிறுத்திவிட்டு சூர்யகலா நடனம் பயிலத் தொடங்கினர். உள்ளூர் நடன ஆசிரியர் ஒருவர் அவருக்கு குருவாக அமைந்தார்.

சூர்யகலா ஒரு வியாபாரியின் மகள் அல்லவா; அதனல் நடனம் பயின்ற படியே ஆங்காங்கே மேடையில் ஆடிப் புகழ்சேகரிக்கவும் தொடங்கிவிட்டார். பெற்ருேர் அவரது ஆட்டத்தைக் கண்டு குதூகலித்தனர்.

கொஞ்ச காலம் சென்றதும், 'தாம் கற்றுக் கொண்டிருக்கும் நடனம் ஒன்றும் பிரமாதம் இல்லை' என்ற எண்ணம் சூர்யகலாவின் மனதில் ஏற்பட்டது. கூடவே, 'சென்னைக்குச் சென்று பிரபல நட்டுவனரிடம் பரதம் பயின்று மேடையில் பிரமாதமாய் ஆடவேண்டும்' என்ற அவா அவர் மனதில் வேருன்றியது. அந்த நிமிஷம் முதல் அவர் பெற்ருேரை நச்சரிக்கத் தொடங்கினர்.

பெற்ருேர் முதலில் இது கேட்டுமலைத்தனர். ஒரு பக்கம் செல்லப் பெண்ணின்

விருப்பத்திற்கு மறுப்புக்கூற விரும்பவில்லை. இன்னெரு பக்கமோ, இதற்காக சென்னைக்குப் போய்விட்டால் தம் வியாபாரம் கெட்டுவிடுமே என்ற கவலை. முடிவில் "தாயாரும், பெண்ணும் மட்டும் சென்னைக்குச் செல்லுவது; தகப்பனர் உள்ளூரிலேயே தனியாக இருப்பது" என்று முடிவு செய்யப்பட்டது. இதற்கிணங்க, 1949ம் வருஷத்தில் சூர்யகலா தம் பெற்றேருடன் சென்னைக்கு வந்து சேர்ந்தார். யாரிடம் சூர்யாவுக்கு நடன சிக்ஷை ஏற்பாடு செய்யலாம் என்பது பற்றி

"ஜாதகம்" தெலுங்குப் படத்தில்.

"நா செல்லலு" படத்தில் ஜி. வரலக்ஷ்மியும், சூர்யகலாவும்.

ராமிரெட்டி நடிகர் ரஞ்சனிடம் ஆலோசனை கேட்டார். அவர் பிரபல நடன ஆசிரியர் காஞ்சீவரம் எல்லப்ப நட்டுவனரின் பெயரைக் குறிப்பிட்டார். ராமிரெட்டி எல்லப்பாவைச் சந்தித்து, சிக்ஷைக்கு ஏற்பாடு செய்து விட்டு, தாம் மட்டும் ஊர் திரும்பினர்.

எந்த ஒரு விஷயத்தையும் ஒருவர் மிக விரும்பிக் கற்கத் தொடங்கினல் துரிதமான பலன் கிடைப்பது சகஜந்தானே. சூர்யகலாவின் நடன விஷயமும் இப்படித்தான். கற்றுக்கொள்ள வேண்டும் என்ற ஆர்வமும்; பிரபலம் அடைவதற்கான நல்ல சூசனைகளும் அவரிடம் நிறைந்திருப்பதை அறிந்த எல்லப்பா அவருக்கு பிரத்தியேக சிரத்தையுடன் பயிற்சி அளித்து,

''ஜாதகம்'' தமிழ்ப் படத்தில்.

சுமார் ஒன்றரை வருஷத்திற்குள்ளாகவே சூர்யாவை அரங்கேற்றுவதற்குத் தயாராக்கி விட்டார்.

சூர்யகலாவின் அரங்கேற்றல் 1951ம் வருஷம் அக்டோபர் மாதத்தில் விஜயவாடா ஈஸ்வர மஹாலில் கோலாகலமாய் நடைபெற்றது. அன்றைய தினம் அதே மேடையில் பிரபல சங்கீத டைரெக்டரான ராஜேஸ்வர ராவும், பிரபல பின்னணிப் பாடகியான ''ஜிக்கி''யும் கச்சேரி செய்தார்கள்.

சாதாரணமாக, அரங்கேற்றல் கச்சேரிகளில், ஆடுபவரிடம் சபைக்கூச்சமும், அதன் விளைவாக ஆட்டத்தில் குறைபாடுகளும் தென்படுவது சகஜம். ஆனல், அன்று சூர்யகலா அபாரமாக ஆடினராம். அதுஅரங்கேற்றல் கச்சேரி போல இல்லாமல் ஒரு அனுபவசாலியின் கச்சேரி போலவே இருந்ததாம்.

கூட்டம் ஏராளமாயிருந்தும் கூச்சம் இன்றி ஆடியதை மெச்சி, அன்று அவருக்கு ஒரு வெள்ளிக் கோப்பை பரிசளிக்கப்பட்டது. அது மட்டுமல்ல; ''சூர்யகலா'' என்ற அழகிய பெயரும் அவருக்கு அரங்கேற்றத்தின்போதுதான் கிடைத்தது. அவருடைய உண்மைப் பெயர் சூர்யகுமாரி என்பது. ஆனல் சூர்யகுமாரி என்ற பெயருடன் முன்னதாகவே ஒரு நடிகை பிரபலமாயுள்ளதால், பெயர்மாருட்ட:

சூர்ய கலாவின் தகப்பனர் ராமிரெட்டி வியாபாரத்தில் மிக வெற்றி பெற்றவர் என்று சொன்னேனல்லவா. அவர் இந்த வெற்றிக்கான ரகஸியத்தை மனைவி சுபத்திரம்மா விடமிருந்தே கற்றுக்கொண்டிருப்பார் என்று நினைக்கிறேன்! பாருங்களேன், "சூர்ய கலாவின் நடனப் பயிற்சிக்கா

"அந்த நாளி"ல் சம்பந்தமும், சூர்யகலாவும்.

"ஜாதகம்"

ஏற்படக்கூடாது என்ற காரணத்தினுல், அவரது ஆசிரியர் எல்லப்பா "சூர்ய கலா" என்ற பெயரை இட்டு அரங்கேற்ற நோட்டீஸ்களை அச்சடிக்கச் செய்தார். ஆசிரியரின் ஆசியுடன் அளிக்கப்பட்ட இப்பெயர் அதி **சீக்கிரத்திலேயே அதிருஷ்டப்** பெயராக மாறிவிட்டது. ஆச்சரியப்படத் தக்கதல்லவே.

அரங்கேற்றலுக்கு சில தினங்களுக்குப் பிறகு, காக்கிநாடா பி. ஆர். காலேஜில் சூர்யகலாவின் நடனக் கச்சேரி நடந்தது. இக் கச்சேரியிலும் அவர் நன்கு ஆடி நல்ல பெயரெடுத்தார். 1952ம் வருஷ இறுதியில் சென்னையில் நடந்த பார்க்பேர் கண்காட்சியில்சூர்ய கலாவின் நடனக் கச்சேரி (சென்னையில் முதன் முதலாக) நிகழ்ந்தது. இந்தக் கச்சேரியை, கூடியிருந்த ரஸிகர்கள் பாராட்டினர்களாம். கண்காட்சியினர் அவருக்கு ஒரு வெள்ளிக் கோப்பையைப் பரிசாக அளித்திருக்கிருர்கள்.

கவே சென்னைக்கு வந்தோம். பெண் கற்றுக் கொள்ளுகிருள்; ஆடுகிருள். ஆனல், நம் பொழுதென்னவோ வீணுகத்தானே போய்க் கொண்டிருக்கிறது. இந்த நேரத்தில் எதையேனும் நாம செய்தால், பொழுது போக்கிற்குப் 'பொழுது போக்கு; செலவுக்கும் பணம்" —இதுமாதிரி சுபத்திரம்மாவுக்குதோன்றியதாம. "என்ன செய்யலாம்" என்று அவர் யோசித்தபோது, சினிமா அவர் முன்வந்து நின்றது. உடனே அவர் பட முதலாளினி கண்ணும்பாவைச் சந்தித்தார். அவர் இவருக்கு தம் "சௌதாமினி" படத்தில் ஒரு ஆயர் குல ஸ்திரீயின் வேஷத்தை கொடுத்து உதவினர்.

[தொடர்ச்சி 81ம் பக்கத்தில்]





## எந்த அளவில், எந்த மோஸ்தரில் எந்த வடிவத்தில் வேண்டுமானாலும்

# டன்லபில்லோ

## மெத்தைகளே சரியானவை

டன்லபில்லோ நீடித்தசௌகரியம் தருவது; உங்கள் பர்னிச்சர்களுக்கு ஒருமுறை இவற்றை வாங்கி விட்டால் நீண்ட காலம் நிலைத்து விளங்கும்.

டன்லபில்லோ கைவசமுள்ளதும் புதிதுமான பர்னிச்சர்களுக்கு ஏற்ற வகையில் வெட்டித்திருந்தியமைக்கக் கூடியது.

டன்லபில்லோ மெத்தைகளுக்கு இப்பொழுதோ பிற்பாடோ உங்கள் விருப்பத்தை அனுசரித்து எந்த நிறத்திலும் சுலபமாக வெளியுறைகள் செய்து போடலாம்.

டன்லபில்லோ மெத்தைகளில் எச்சமயத்திலும் தொய்வு அல்லது முண்டு முடிச்சு ஏற்படாது.

டன்லபில்லோ அதன் அழகிய தோற்றத்திலும் நேர்த்தியான கோடுகளாலும் பர்னிச்சர்களுக்கே ஒரு அலாதியான சோபைத் தருகின்றது.

# டன்லபில்லோ

லெடெக்ஸ் நுரைத் தயாரிப்புகளில் முதன்மையானது—மிகச் சிறந்ததுங்கூட.

DPX 70 TM

# சென்னை சினிமா

## சிறந்த



சினிமா பரிசளிப்பு விழாவில் வாஸன் பேசுகிறார்

சினிமா ரஸிகர்கள் சங்கத்தின் சார்பில் சிறந்த தமிழ், தெலுங்குப் படங்களுக்கும், தமிழ், தெலுங்கு நடிகர்களுக்கும பரிசளிப்பு விழா செயின்ட் மேரீஸ் ஹாலில் சென்ற மாதம் 7-ம் தேதி நடைபெற்றது. இவ்விழாவிற்கு சென்னை கவர்னர் ஸ்ரீபிரகாசா தலைமை வகித்தார். குமாரி பூமா, ஸ்ரீ. கிருஷ்ணன் பிரார்த்தனை கீதத்துடன் விழா ஆரம்பமாகியது.

சினிமா ரஸிகர்கள் சங்கத்தின் தலைவர் வி. ஸி. கோபாலரத்னம் எல்லோரையும் வரவேற்றார். இச் சங்கம் ஆரம்பிக்கப்பட்ட நோக்கத்தை எடுத்துரைத்தார். அங்கீகரிக்கப்பட்ட பிலிம்கள் பற்றி பிரஸ்தாபிக்கையில், அவை சிறந்தவை என்பதில் அபிப்பிராய பேதம் இருக்க இடமில்லை என்றும், துரதிருஷ்டவசமாக அவை இப்பொழுது தியேட்டர்களில் திரையிடப்படுவதில்லை என்றும், சுப்ரீம் கோர்ட் தீர்ப்பை அனுசரித்து இரு தரப்பிலும் பேச்சு நடத்தி இப் படங்களை ரஸிகர்களுக்குத திரையிடும்படியும் கேட்டுக் கொண்டார். காரியதரிசி இ. பி. சாமுவேல் அறிக்கையை வாசித்தார். பின்பு கவர்னர் பரிசுகளை வழங்கினார். ஜெமினி அதிபர் எஸ். எஸ். வாஸனுக்கு 1953-ம் வருஷத்திய "ஔவையார்" தமிழ்ப் படத்திற்கு பரிசளிக்கப்பட்டது. சிறந்த தெலுங்கு நடிகர் என நாகேஸ்வர ராவுக்கும், சிறந்த தமிழ் நடிகை என சாவித்திரிக்கும் பரிசளிக்கப்பட்டது.

சிறந்த தெலுங்குப் படமான "தேவதாஸ்" உற்பத்தியாளர் டி. எல். நாராயணராவுக்கும், சிறந்த தமிழ் நடிகர் டி. கே. ஷண்முகத்திற்கும், சிறந்த தெலுங்கு நடிகை ஸ்ரீமதி பானுமதிக்கும் பரிசுகள் அறிவிக்கப்பட்டன. அவர்கள் வராததால் முறையே நாகேஸ்வர ராவ், டி. கே. முத்துசாமி, குமாரி ராஜம் ஆகியோர் பெற்றுக் கொண்டனர்.

"ஔவையார்" படத்திற்கு பரிசு வழங்கியதற்காக வாஸன் நன்றி தெரிவித்தார். அவர் பேசுகையில், அங்கீகரிக்கப்பட்ட பிலிம்களை, மத்ய சர்க்கார் இலவசமாகக் கொடுப்பதாயிருந்தால், அவற்றைத் தியேட்டர்களில் திரையிடத் தயாராக இருப்பதாக கூறினார். செய்திக் கதிர்களும், டாகுமென்டரிப் படங்களும் சிறந்த அறிவைப் பரப்புவதாக இருப்பதாகவும், அவைகளைத் திரையிடத் தயாரென்றும, ஆனால் அதற்கான செலவை ஏற்கும்படி செய்து சர்க்கார் பிலிம் தொழிலுக்கு



சிறந்த நக்ஷத்திரங்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள பிரபல நடிகர் நாகேஸ்வரராவும், பிரபல நடிகை சாவித்திரியும்.

# கவர்னர் தலைமையில் பரிசளிப்பு விழா

## படங்களுக்கும் நக்ஷத்திரங்களுக்கும் பரிசு

தண்டனை விதிப்பதுதான் வருந்தத்தக்கது என்றும் கூறினார். சிறந்த படங்கள் யாவை என்பதைக் குறிக்க சில யோசக்கியதாம்சங்களைக் குறிப்பிடுமாறு யோசனை தெரிவித்தார். திரளான ஜனங்கள் செல்வதை மட்டும் வைத்துப் படங்களை மதிப்பிடவேண்டியது ஏற்பட்டு விடும் என்றும், ஆகவே கலை, கலாசார, சரித்திர, தொழில் நுணுக்கம் நிரம்பிய அம்சங்களைக் குறிப்பிடலாம் என்றும் கூறினார். சமீப காலத்தில் பிலிம்களின் முக்கியத்துவம் அதிகரித்திருக்கிறதென்றும், தனிப்பட்ட சங்கங்கள் மட்டுமின்றி ராஷ்டிரபதியும் பரிசுகளை வழங்கி வருகிறார் என்றும் கூறினார். பிலிம்கள்பற்றி ஆக்கமான யோசனைகளைத் தாம் வரவேற்பதாகத் தெரிவித்தார். ஆனால், தங்கள் பிரச்னைகளையும், சிறிது அனுதாபத்துடன் கவனிக்கும்படி கேட்டுக்கொண்டார். பரிசளிப்பு மூலம் இவ்விதம் அனுதாபம் காட்டப்படுவதற்கு சந்தோஷம் தெரிவித்தார். "அநேக படங்கள் தரமுள்ளவையல்ல என்று குறை கூறப்படுகிறது. வாழ்க்கையின் எல்லாத்துறையிலும் உள்ளது சினிமாத் தொழிலிலும் இருப்பது சகஜம்" என்று வாஸன் கூறினார். 36 கோடி ஜனத்தொகையுள்ள இந்தியாவில் 3000 தியேட்டர்களே இருப்பதாகவும், இங்கு கலாசாரத்திற்கும் இதிகாசத்திற்கும் மற்றும் கதைகளுக்கும் குறைவு கிடையாது என்றும் கூறினார். நல்ல பிலிம்களை ரஸிக்கும் திறமை ஜனங்களுக்கு உண்டு என்றும், எனினும் இன்னும் இத் தொழில் முன்னணியில் இல்லையென்றும் பிலிம் தொழிலில் இந்தியா முதல் ஸ்தானத்தை அடையும் காலம் வரும் என்றும் குறிப்பிட்டார். நம் நாட்டில் பத்து லக்ஷம் பேருக்கு சுமார் 8 சினிமாத் தியேட்டர்கள் தான் இருப்பதாகவும், அயல் நாடுகளில் 100 முதல் 150 தியேட்டர்கள் விகிதம் இருப்பதாகவும், பிரான்ஸில் 250 விகிதம் இருப்பதாகவும் கூறினார். மேலும் பேசுகையில் ராஜ்ய சர்க்கார் அதிக வரி விதிப்பதாகவும் இது வேறு எந்த நாட்டிலுமே கிடையாதென்றும் கூறினார். இந்தியாவில் இவ்வரி விதிப்பது உள்நாட்டு பிலிம்கள் மீது விதிக்கப்படும் வரியாகும் என்றும், மற்ற நாடுகளில் அயல்நாட்டுப் பிலிம்கள் அதிகம் திரையிடப் படுவதாகவும், ஆகவே, அவற்றிற்காக வரி விதிக்கப்படுவதாகும் என்றும் கூறினார். இத்தொழிலில்

# ...இது செய்தி

## நாடகம் மூலம் சர்க்கார் பிரசாரம்

நாடகம், சங்கீதம் ஆகிய கலை நிகழ்ச்சிகள் மூலம் ஐந்தாண்டு திட்ட வேலைகளின் முக்யத்துவத்தை கிராம மக்களிடையே பிரபலப்படுத்த சர்க்கார் உத்தேசித்திருக்கின்றனர். வட இந்தியாவில் பல இடங்களில் "நமது கிராமம்" என்னும் நாடகம் ஹிந்தியில் நடத்தப்பட்டிருக்கிறது. அதை தென்னிந்தியாவிலும் பிரதேச மொழிகளில் நடத்த உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. இந்நாடகத்தை நடிக்க முன்வரும் நாடகக் கோஷ்டிகளுக்கு போக்குவரத்து போன்ற செலவுகளுக்கு பண உதவி அளிக்கப்படும். திட்டத்தின் விவரங்கள், உண்மைகள், முன்னேற்றம் ஆகியவைகளைக் கதா காலக்ஷேபம் மூலமும் எடுத்துரைக்க திட்டமிடப்பட்டிருக்கிறது. கதா காலக்ஷேபம் நடத்த முன்வரும் கோஷ்டியின் செலவுக்கு ஒரு மாதத்திற்கு இவ்வளவு என்று மொத்தமாக மான்யம் அளிக்கப்படும் என்று தெரிகிறது.

## சங்கீத நடனப் பயிற்சி

ராஜ்யத்திலுள்ள 30,000 போலீஸ் கான்ஸ்டேபிள்களையும் கலாசார மனப்பான்மை கொண்டவர்களாக ஆக்குவதற்காக, பீஹார் போலீஸ் இலாகா ஒரு திட்டத்தை ஆரம்பித்திருக்கிறது. இது அவர்களிடையே தேசாபிமானத்தையும் சர்க்காரிடம் விசுவாசத்தையும் உண்டுபண்ணும் என்பது இலாகாவின் அபிப்பிராயம்: நடனம், நாடகம், சங்கீதம், மற்றும் இதர கலைகளில் இவர்கள் அக்கறை எடுத்துக் கொள்ளவும் இவர்களில் பலருக்கு பயிற்சி அளிக்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

## காங்கிரஸ் பொருட் காட்சி

தேனாம்பேட்டை காங்கிரஸ் மைதானத்தில் அமைக்கப் பட்டுள்ள காங்கிரஸ் பொருட் காட்சியை கவர்னர்

---

(முன் பக்கத் தொடர்ச்சி)

அதிக அனுபவம் இல்லாதவர்கள் இறங்குவது பற்றியும் பிரஸ்தாபித்தார். இதனுல் இத்தொழிலில் சீர்குலைவு ஏற்பட்டிருப்பதாகக் கூறினர்.

அங்கீகரிக்கப்பட்ட பிலிம்கள் பற்றிக் குறிப்பிடுகையில், இவற்றின் மதிப்பை யாரும் ஆட்சேபிக்க வில்லை யென்றும் இவை கல்வி அறிவு புகட்டுவதாக இருக்கின்றன என்றும், ஆனல், இத்தொழிலில் உள்ளவர்களிடம் இதற்காக சர்க்கார் பணம் வசூலிப்பது குறித்துத்தான் வருந்துவதாகவும் கூறினர். 'இந்தப் பிலிம்களைத் தயாரிப்பதற்கான செலவுகளை ஏற்றுக் கொள்ளும்படி எங்களைக் கட்டாயப்படுத்த முடியாது' என்ருர். இப்படங்களை இலவசமாகக் கொடுத்தால் திரையிடத் தயாரென்றும், தாங்கள் கூறுவது சரி என்பதை நிரூபிப்பதற்காகத்தான் சுப்ரீம் கோர்ட்டிற்குச் சென்றதாகவும் கூறினர் வாஸன்.

நாகேஸ்வர ராவ் தெலுங்கில் பேசுகையில், தம்மை கௌரவித்ததற்கு வந்தனம் தெரிவித்தார். சாவித்திரி தமிழில் பேசினர். தமிழர்களின் தாராள மனப்பான்மையினுல் தமக்குப் பரிசு கிடைத்திருக்கிறது என்றும், தாம் தொடர்ந்து நன்கு நடித்து அவர்களுக்குத் திருப்தியளிக்க முயற்சிப்பதாகவும் கூறினர்.

கவர்னர் ஸ்ரீ. ஸ்ரீபிரகாசா பேசுகையில் சினிமாத் தொழில் துறையில் உள்ளவர்களின் பொறுப்பை வற்புறுத்தினர். அவைகளை பலர் பார்ப்பதாகவும், ஆகவே, நன்மை தீமைகளை நன்கு தெரிந்து கொள்ளும்படி செய்வது அவர்களுடைய பொறுப்பாகும் என்று கூறினர். அறிவை விலாசப்படுத்தும் சாதனமாகவும் சினிமா அமைந்திருக்கிறது என்றும், பொழுதுபோக்கு அளிப்பதுடன் இதையும் கவனிக்க வேண்டும் என்று வலியுறுத்தினர்.

ஸ்ரீ பிரகாசா சென்ற மாதம் 12ம் தேதி மாலை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் "நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் என்னென்ன நடக்கிற தென்பதை இப்பொருட் காட்சி சிறிய அளவில் எடுத்துக் காட்டும்" என்று கூறினார். 30 ஏக்கர் நிலத்தில் அமைந்துள்ள "இப் பொருட் காட்சி இந்தியாவிலேயே மிகப் பெரியதென்று நினைக்கிறேன். மக்களின் ஐக்கிய முயற்சி நம்மை க்ஷேம நல சமுதாயத்தை நோக்கி அழைத்துச் செல்கிறது என்பதை இப் பொருட் காட்சி நிரூபிக்கும்" என்று கவர்னர் குறிப்பிட்டார். விழாவில் பல பிரமுகர்கள் உள்பட ஏராளமான மக்கள் கலந்து கொண்டனர்.

### கவர்னர் அங்கீகாரம்

சென்னை சட்டசபையில் நிறைவேறிய சென்னை நாடக கட்டுப்பாடு சட்டத்திற்கும் தமாஷா வரிச் சட்ட திருத்தத்திற்கும் கவர்னர் அங்கீகாரம் அளித்துவிட்டார்.

### குழந்தைகள் பிலிம் விழா

கலாசார பிலிம் சொஸைட்டி ஆதரவில் நடத்தப்பட்ட மூன்றாவது குழந்தைகள் பிலிம் விழா சென்ற மாதம் 9-ம் தேதி புதுடில்லியில் பூர்த்தி அடைந்தது. குழந்தைகளுக்கு ஒரு ரஷ்ய கார்ட்டூன் படம் அன்று காட்டப்பட்டது. ஏராள குழந்தைகள் உற்சாகத்தோடு பார்த்தனர். விழாவில் யூனியன் செய்தி—ஒலிபரப்பு இலாகா மந்திரி டாக்டர் கேஸ்கர் பேசுகையில், குழந்தைகள் படங்களை எவ்வளவு சீக்கிரத்தில் தயாரிக்க முடியுமோ அவ்வளவு சீக்கிரத்தில் தயாரிக்க சர்க்கார் விரும்புவதாகவும், இந்த வேலையை குழந்தைகள் பிலிம் சொஸைட்டி சீக்கிரத்திலே மேற்கொள்ளும் என்றும் தெரிவித்தார். சொஸைட்டிக்கு வேண்டிய பண உதவியை சர்க்கார் வழங்குமென்றும், குழந்தைகள் க்ஷேம நலத்தில் அக்கறை கொண்டுள்ள கலாசார ஸ்தாபனங்களும் பண உதவி செய்ய வேண்டுமென்றார். இது சம்பந்தமாக ராஜ்ய சர்க்கார்களின் உதவியும் நாடப்பட்டிருப்பதாகச் சொன்னார்.



சந்திரிகா புரடக்ஷன்ஸின் "அவனே கடவுள்" தமிழ்ப் பட ஷூட்டிங் ஆரம்ப விழாவின் போது எடுக்கப்பட்ட படம் இது. டைரெக்டர் எஸ். கே. வாசகம், நடிகர் கே. ஆர். ராமசாமி, பட முதலாளி பி. ஸி. ராஜ் ஆகியோரை மேலே நாம் காணலாம்.

பிரபல நாட்டிய நடிகை தாரா சௌத்ரிக்கு ரஷ்ய சர்க்கார் "அகோன்யாக்" என்ற ஒரு சஞ்சிகையின் பிரதியை அவருடைய நாட்டியத்தைப் பாராட்டும் வகையில் ஞாபகார்த்தப் பரிசாக அனுப்பியுள்ளனர். தாரா சௌத்ரி சமீபத்தில் இந்திய கலாசார கோஷ்டியில் ஒருவராக ரஷ்யாவுக்குச் சென்றிருந்தார். அவர் நாட்டியமாடும் பாவனையில் ஒரு படத்தை அப் பத்திரிகை முதல் பக்கத்தில் பிரசுரித்திருக்கிறது. இப்பத்திரிகை மாதா மாதம் 3 கோடி செலவாகிறதாம். இப்பத்திரிகைப் பிரதி மாஸ்கோவில் உள்ள இந்திய ஸ்தானீகர் மூலமாக இந்தியாவுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

### யுவராஜா ஜெமினி விஜயம்

காஷ்மீர் யுவராஜா கரன்ஸிங் யுவராணியுடன் டிஸம்பர் மாத இறுதியில்

ஜெமினி ஸ்டுடியோவுக்கு விஜயம் செய்தார். யுவராஜாவும், யுவராணியும் ஸ்டுடியோவின் பல்வேறு பிரிவுகளைச் சுற்றிப் பார்த்தனர். "வள்ளியின் செல்வனி"ன் சில காட்சிகளையும் அவர்கள் பார்த்தார்கள். பம்பாய் முதன் மந்திரி மொரார்ஜி தேசாய் சென்ற மாதம் 18ம் தேதி பிற்பகல் ஜெமினி ஸ்டுடியோவிற்கு விஜயம் செய்தார். எஸ். எஸ். வாஸன் அவரை வரவேற்றார். சிறிது நேர சம்பாஷணைக்குப் பிறகு ஸ்டுடியோவின் பல பிரிவுகளுக்கு அவர் அழைத்துச் செல்லப்பட்டார். யுனைடெட் பிலிம் ஆர்டிஸ்டின் "வள்ளியின் செல்வன்" படப் பிடிப்பையும் தேசாய் சிறிது நேரம் பார்த்தார். ஸ்டுடியோவில் சுமார் 45 நிமிஷங்களுக்கு தேசாய் தங்கியிருந்தார்.

## ஆண்டு விழா

நவாப் டி. எஸ். ராஜமாணிக்கத்தின் மதுரை தேவி பால விநோத சங்கீத சபையின் இருபத்திரண்டாவது ஆண்டு பூர்த்தியாகி, இருபத்தி மூன்றாவது ஆண்டு ஆரம்ப விழா வழக்கம்போல் சென்ற மாதம் 5-ம் தேதி விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. தேவி சபை நீடித்து வாழவேண்டுமெனப் பல தேசத் தலைவர்களிடமிருந்தும், நண்பர்களிடமிருந்தும், நாடகக் கலைஞர்களிடமிருந்தும் ஆசிச் செய்திகள் வந்து குவிந்தன. பல்லாயிரக் கணக்கான ஏழை மக்களுக்கு சென்ட்ரல் ஸ்டேஷனுக்கு அருகாமையில் உள்ள ராஜா ஸர். ராமசாமி முதலியார் சத்திரத்திலும், வடபழனி ஆண்டவர் சந்நிதியிலும் அன்னதானம் செய்யப்பட்டது. அன்றைய இரண்டு நாடகங்களுக்கும் விஜயம் செய்த ஆயிரக்கணக்கான மக்களுக்கு சந்தன புஷ்ப தாம்பூலாதிகள் வழங்கப்பட்டன.

## இந்திய பிலிம் தொழிலின் முக்கியத்துவம்

லண்டனிலுள்ள இந்திய பிலிம் சொஸைட்டி தலைவர் வி. கே. கிருஷ்ண மேனனுக்கு தென்னிந்திய பிலிம் வர்த்தக சபை சார்பிலும், தென்னிந்திய சினிமாப் பட ஸ்டுடியோக்கள் சங்கம் சார்பிலும் சென்ற மாதம் 13-ம் தேதி மாலை "ஜெமினி ஸ்டுடியோவில்" ஒரு வரவேற்பளிக்கப் பட்டது. கிருஷ்ண மேனன் பேசுகையில், ஒரு க்ஷேம நல ராஜ்யத்தில், பிலிம் தொழிலின் பல வகைப்பட்ட உபயோகங்களை வற்புறுத்தினார். இந்திய பிலிம் சம்மேளனத் தலைவர் எஸ். எஸ். வாஸன் வரவேற்பளித்துப் பேசுகையில், பல துறைகளில் மேனனின் சேவைகளை சிலாகித்துக் கூறினார். லண்டனில் இந்தியப் படங்களை நன்கு அறிமுகப்படுத்தி இந்தியப் படங்களுக்குப் புகழ் வாங்கித் தந்த இவரது உயரிய சேவைக்கு, இந்திய பிலிம் தொழில் கடமைப் பட்டிருக்கிறதென்றார் மேனன். லண்டனில் இந்திய ஹை கமிஷனராக இருந்தபோது இந்திய பிலிம் சொஸைட்டியை ஸ்தாபித்தார். இந்தியப் படங்களின் சாதனையை பற்றி, பிரிட்டிஷ் மக்கள் நன்கு தெரிந்து கொள்ள இந்த சொஸைட்டி பெரிதும் உதவியது என்றார்.

வி. கே. கிருஷ்ணமேனன் பேசுகையில் சொன்னதாவது: உலக நாடுகளில் சிறந்த ஜனநாயக நாடாக விளங்கும் இந்தியாவில், கல்வியைப் பரப்ப ஒரு சிறந்த சாதனமாக பிலிம் தொழிலைக் கருதவேண்டும். பிலிம் தொழில் ஒரு சமூகப் பணியையும் செய்கிறது. ஓய்வை நாடி வருவோருக்கு ஓய்வையும், அமைதியையும தருகிறது. பேசும் படங்கள் இந்தியாவில் தோன்றி 25 வருஷங்களே ஆனாலும், உற்பத்தி அளவில், முதன்மை ஸ்தானம் வகிக்கும் தொழில்களில் இதுவும் ஒன்றாகும். படங்களின் தர விஷயத்திலும். இந்த முன்னேற்றம் வேலையில்லாத் திண்டாட்டத்தைக் குறைப்பதிலும் பிலிம் தொழில் உதவி செய்வதாக இருக்கிறது. அடுத்த ஐந்தாண்டு திட்டத்தில் ஏராளமான பேர்களுக்கு வேலை தேடித் தரவேண்டியிருக்கிறது. இந்த விஷயத்தில் இந்திய சினிமாத் தொழில் பிரதான பாகத்தை ஏற்கவேண்டும். அமெரிக்க பிலிம் தொழிலில் உள்ள பல பிரிவுகளில் ஒவ்வொரு பிரிவிலும் உள்ளவரைச் சார்ந்த 10 பேர்களுக்கு வேலை கிடைக்க வழி இருப்பதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. இது இந்தியாவிலும் நடைபெற்று வருவதே. இந்தியாவை ஐக்கியப் படுத்த சினிமாத் தொழிலும் முக்கியமானதாகும் என்றார்.

## காந்தி அரங்கு

சைத்ரிகர்கள் பாலு சகோதரர்களின் காந்திஜி அரங்கை தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் ஸ்ரீ. பி. கக்கன்

ஜனவரி மாதம் 18-ம் தேதி மாலை தேனாம்பேட்டை காங்கிரஸ் பொருட் காட்சியில் திறந்து வைத்தார். இந்த விழாவுக்கு பண்டிட் வி. நடேசன் தலைமை வகித்தார்.

## புதுப் படங்கள்

திருச்சிராப்பள்ளியில் புதிதாக ஆரம்பிக்கப் பட்டுள்ள ஸ்ரீ கோமதி ராணி பிக்சர்ஸார் "மிஸ்டர் சந்தோஷம்" என்ற படத்தைத தயாரிக்கப் போகிறுர்களாம். இப்படத்தை ராஜ் குமார் என்பவர் டைரெக்ட் செய்வா ரென்றும், பல புதிய முகங்கள் இப் படத்தில் நடிப்பார்க ளென்றும் தெரி கிறது.

சென்னை, சந்திரிகா புரொடக்ஷன் ஸார் தங்களது முதல் படமாக "அவனே கடவுளா"த் தயாரிக்கப் போகிறுர் களாம். இப்படத்தின் ஆரம்ப முகூர்த்த விழா சென்ற மாதம் 13ம் தேதி, பிலிம் ஸென்டர் ஸ்டுடியோவில் 'லோட்டஸ் போட்டி' அதிபர் ஸ்ரீ. ராமஸ்வாமி நாடார் தலைமையில் நடைபெற்றது. இப் படத்தை எஸ். கே. வாசகம் டைரெக்ட் செய்கிறுர்.

விக்ரம் புரொடக்ஷன்ஸார், அடுத்த படி "தெனுலி ராமகிருஷ்ணு" என்ற கதையை தமிழ், தெலுங்கு, கன்னடம், ஆகிய மூன்று பாஷைகளில் படமாக்கப் போகிறுர்களாம். பி. எஸ். ரங்கா டைரெக்ட் செய்யவிருக்கும் இப்படங்களில் பிரபல நக்ஷத்திரங்கள் நடிக்கக்கூடும்.

சென்னையில், புதிதாகத் தோன்றியுள்ள குடந்தை பிலிம்ஸார், சென்ற மாதம் 14ம் தேதி "பண்பு" என்ற தங்களது படத்திற்கான ஆரம்ப பூஜையை நடத்தி ஞர்கள். கே. கே. பாலன் என்பவர் கதை-வசனம் எழுதியுள்ளார். இப் படத்தை ஒய். வி. ராவ் டைரெக்ட் செய்வாராம்.

காளி பில்ம்ஸ் என்ற படக் கம்பெனியார் "துருவா" என்ற படத்தைத் தயாரிக்கப் போவதாக அறிவித்துள்ளனர். எஸ். டி. எஸ். யோகியும், எஸ். வி. சகஸ்ரநாமமும் கூட்டாகச் சேர்ந்து செய்யும் முயற்சி இது.

டைரெக்டர் டி. வி. கிருஷ்ணஸ்வாமி யின் முயற்சியில் முளைத்துள்ளது "ஸ்ரீ ஜயஸ்ரீ பிக்சர்ஸ்" என்ற படத் தயாரிப் புக் கம்பெனி. இவர்கள் "ஜயஸ்ரீ" என்ற படத்தைத் தயாரிக்கப் போகின் றனர். படத்தின் கதை-வசனத்தை சாண்டில்யனும், பாட்டுகளை ஆத்ம நாதனும் எழுதுவார்கள். ஆர். கணேஷ், குமாரி தங்கமணி, பிரண்ட் ராமசாமி, டி. பி. முத்துலக்ஷ்மி ஆகியோர் இப் படத்தில் நடிப்பார்கள். டி. வி. கிருஷ்ணசாமிதான் இந்தப் படத்தின் டைரெக்டர்.

சென்னை, பாரகன் பிக்சர்ஸார், "நான் பெற்ற செல்வம்" என்ற தமிழ் சமூகப் படத்தைத் தயாரிக்கப் போகிறுர்கள். இதற்கான ஆரம்ப பூஜையை சென்ற மாதம் 28ம் தேதி கோவை, சென்ட்ரல் ஸ்டுடியோவில் அவர்கள் நடத்தி யிருககிறுர்கள்.

## பத்திரிகைக் காட்சிகள்

கிருஷ்ணு பிக்சர்ஸாரின் "காவேரி" தமிழ்ப் படத்தின் பத்திரிகைக் காட்சி சென்ற மாதம் 12ம் தேதி, கிருஷ்ணு டாக்கிஸில் நடைபெற்றது. இப்படம் அன்று முதல் தமிழ் நாடு முழுவதிலும் திரையிடப் பட்டுள்ளது.

**வி. கே. கிருஷ்ண மேனன் ஜெமினி ஸ்டுடியோவுக்கு விஜயம் செய்தபோது எடுத்த படம் இது. பக்கத்தில் இருப் பவர் ஜெமினி அதிபர் வாஸன்**

# சென்னை மேடையில் சென்ற மாதம்

ஊக்கமுள்ள சில இளைஞர்கள் ஒன்று சேர்ந்து "நாடகக் கலைஞர்கள் கழகம்" என்ற ஒன்றை சென்ற மாதம் 13-ம் தேதி ஆரம்பித்திருக்கிறார்கள். இதற்கு ஆர்வம் நிறைந்த எஸ். வி. எஸ் மணியன் தலைவர். ஏ. வி. சுப்ர மண்யம் சழகத்தைத் திறந்து வைத்தார். பட முதலாளி--டைரெக்டர் டி. எல். நாராயணு அன்று நடந்த 'பெரிய இடத்து விஷயம்' என்ற நாடகத்திற்குத் தலைமை வகித்தார். மா. ரா. இந்த நாடகத்தை எழுதி டைரெக்ட் செய்து, நடிக்கவும் செய்தார். அவரது நடிப்பும், வசனங்களை உணர்ச்சியுடன் பேசும் திறனும் வெகு சிறப்பாக அமைந்து விட்டன. பைத்தியக்காரனுக நடித்த பொழுது அவர் நடிப்பு உச்ச நிலையை அடைந்துவிட்டது. வில்லனுக நடித்த சௌந்தரராஜனின் தோற்றமும் விஷமப் பார்வையும் 'அவர் வாழ்க்கையிலும் ஒரு வில்லனே' என்று எண்ணும் படி செய்து விட்டன. சாந்தியாக நடித்த சந்திரா தன் பாத்திரமறிந்து, நடித்தார். மல்லியாக நடித்த ஏ. எல். சகுந்தலா 'தான் ஒரு நல்ல நடிகை' என்பதை நிரூபித்துக் கொண்டாள். கிராமத்தான்களாக நடித்த நாகேஸ்வரனும், நாகராஜ ராவும் கதையை விளக்கும் வகையில் ஹாஸ்ய ரஸம் ததும்ப நடித்தது நாடகத்திற்கு சோபையை அளித்தது. கதாநாயகனுக நடித்த சுவாமிநாதனின் நடிப்பும் நன்ருகவே இருந்தது. கதைக் கட்டுக்கோப்பு நன்ருகவே இருந்த போதிலும் வேண்டாத விஷயங்களை சில இடங்களில் புகுத்தி இருந்தார்கள். 'காணி நிலம் வேண்டும்' பாட்டைப் பாடிய ராஜலக்ஷ்மி இனிமையாய் பாடியது போலவே, பாவபூர்வமாக அபிநயம் பிடித்தாள் குமாரி வசந்தா எனும் சிறுமி. ஹிந்தி மெட்டுக்களை காப்பியடிக்காமல், கர்நாடக சங்கீதத்தில் புதுமெருகுடன் பாட்டுகள் அமைக்கப்பட்டிருந்தன. பின்னணியில் பாடிய சரோஜாவும் பிரேமாவும் நன்கு பாடினர்.

ஆற்றல் மிகுந்த இந்த கோஷ்டிக்கு இந்த நாடகம் ஒரு நல்ல வெற்றியே.

தோட்டக்கார விஸ்வநாதனுல் எழுதப்பட்ட புது நாடகமான "ராஜா" சென்ற மாதம் 14ம் தேதி அரங்கேறியது. சுகுண விலாஸ சபையின் ஆதரவில் அவர்களது நாடக சபையின் திறந்த வெளித் தியேட்டரில் இது நடைபெற்றது. இந்த நாடகத்தில் வாதிராஜ், மாலி முதலியோர் பங்கெடுத்துக் கொண்டனர்.

விவேகானந்தா கல்லூரியின், பைன் ஆர்ட்ஸ் சங்கத்தினர் சென்ற மாதம் ஒரு நாடக விழாவை நடத்தினுர்கள். அதை முன்னிட்டு 13ம் தேதி முதல் 16ம் தேதி முடிய நான்கு நாட்களிலும் முறையே 'ஹாம்லெட்' (ஆங்கிலம்), 'மைதிலி' (தமிழ்), 'குமாஸ்தா' (தெலுங்கு), 'ரத்னவளி' (சம்ஸ்கிருதம்) ஆகிய நாடகங்களைத் தங்களது கல்லூரியின் திறந்த வெளித் தியேட்டரில் நடித்தார்கள்.

ஸ்ரீ திருவட்டீஸ்வரர் சபையின் ஆதரவில் சென்ற மாதம் 23ம் தேதி 'நகைப் பெட்டி" என்ற நாடகம் நடைபெற்றது. ஏ. ஸி. ஸ்ரீநிவாசனுல் எழுதப்பட்ட இந்த நாடகத்தை 'ஸ்டேஜ் ஸ்டார்ஸ் ஸிண்டிகேட்' என்ற ஸ்தாபன நடிகர்கள் நடித்தார்கள்.

இயல் இசை நாடக மன்றத்தினர் சுதந்திர தினத்தன்று "தந்தி" என்ற நாடகத்தை ஆர். ஆர். சபாவில் நடித்தனர். எஸ். ஸி. ராஜகோபாலன் என்பவர் எழுதிய நாடகம் இது.

'பெரம்பூர் அமெச்சூர்ஸ்' என்ற அமெச்சூர் நாடக சபை ஒன்று சென்ற மாதம் 29ம் தேதி பெரம்பூரில் ஆரம்பமாயிற்று. மந்திரி எம். பக்தவத்ஸலம் இதை ஆரம்பித்து வைத்தார். "நாடோடி"யும், "குமுதம்" ஆசிரியர் எஸ். ஏ. பி. அண்ணுமலையும் அன்று பேசினுர்கள். சங்கத்தின் அங்கத்தினர்கள் "சுல்தான் பேட்டை சப்-அஸிஸ்டென்ட் மாஜிஸ்டிரேட்" என்ற நாடகத்தை நடித்தார்கள்.

"வள்ளியின்
செல்வனி"ல்

வனஜா

சூர்யகலா



நீங்கள் இன்று

உங்கள் பற்களை

# மக்ளீன்

செய்தீர்களா?

ஆம்! நான் இன்று என் பற்களை மக்ளீன்ஸ் பற்பசையைக் கொண்டு சுத்தம் செய்தேன். வசீகரம் வாய்ந்த புன்னகைக்கு ஆரோக்கியமான பற்கள் அத்தியாவசியம். ஆகையால்தான் நான் பிரதி தினமும் இரு முறை எனது பற்களை மக்ளீன்ஸ் பெராக்ஸைட் பற்பசையைக் கொண்டு சுத்தம் செய்கிறேன். மக்ளீன்ஸிலுள்ள ஒரு தனிப்பட்ட பொருள் பற்களின் மேல் படிந்துள்ள ஊத்தையை நீக்கி பற்களுக்கு இயற்கையாக இருக்கும் வெண்மையையும், ஒளியையும் தருகிறது. அதிக வெண்மையான பற்கள், கெட்டியான ஈறு மற்றும் நறுமணமுள்ள சுவாசத்திற்கு மக்ளீன்ஸ் பற்பசையையே உபயோகியுங்கள்.

"...மக்ளீன்ஸ் பற்பசை இப்பொழுது கடைகளில் விற்கப்படும் எல்லா ரகங்களைவிட மிக உயர்ந்தது."

க்ளோரோபில் சேர்ந்தும் கிடைக்கும்

MTY-39-TAM

# ஷீலா ரமணி

## காற்றினிலே நக்ஷத்திரப் பேட்டி

ஒரு இசைத்தட்டு ஒலிக்கிறது:—

"உங்கள் இரு இருதயங்களையும் ஒன்ருக்கிக் கொள்ளுங்கள், பிரியமாயிருங்கள்."

(ஷீலா ரமணி வருகிருர்.)

(பாடல் சப்தம் தணிந்து கேட்கிறது.)

ஷீ:—வணக்கம், பால்ராஜ் சாகிப். தூங்குகிறீர்களா, பாட்டை ரஸிக்கிறீர்களா?

பா (திடுக்கிட்டவர் போல்) :—வந்துவிட்டீர்களா, ஷீலாஜி. நமஸ்தே. நீங்கள் வரும் வரையில் பொழுது போவதற்காகப் பாட்டுக் கேட்டுக்கொண்டிருந்தேன்.

ஷீலா:—ஆனல் இதுதான் உங்களுக்குக் கிடைத்ததோ! எனக்கு இதைக் கேட்டு அலுத்துவிட்டது.

பா:—உங்கள் பாட்டைக் கேட்டுக்கொண்டு இருந்ததில் எனக்கு நேரம் சென்றதே தெரியவில்லை. (என்று கவிதையாகச் சொன்னர்). ஆனல் நீங்கள் என்னுடைய கவிதைத் திறனை மெச்சுவதாகத் தோன்றவில்லை.

ஷீ:—கவிதையை விடுங்கள்! பாட்டையும் நிறுத்துங்கள். நாம் சிறிது பேசலாம்.

பா:—என் விருப்பமும் அதுதான். உங்களுக்கு அவகாசமிருந்து என்னுடன் பேசுவதற்கு இங்கு வருவீர்கள் என்றுதான் நம்பிக்கையுடன் இவ்வளவு நேரம் இங்கு காத்துக் கொண்டிருக்கிறேன்.

ஷீ:—உம், ஆரம்பியுங்கள்.

பா:—"உங்கள் இரு மனதையும் ஒரு மனப்படுத்திக் கொண்டு" மேலே பேசுங்கள்.

ஷீ (சிரித்துக்கொண்டு): —பேஷ்! என்ன அருமையான யோசனை!

பா:—நிஜமாகவா? உங்களுக்குக் கிடைத்துள்ள சிறிது அவகாசத்தையும் வீணை சமாசாரங்களைப் பேசிக் கழிக்க மாட்டேன்.

ஷீ:—ருசிகரமான விஷயங்களைப் பற்றி இனிமேல் நாம் பேசுவோம்.

பா:—உங்களுடைய வாழ்க்கையைப் பற்றி நாம் பேசுவோம். நமக்கு இனிமையான தகவல்கள் இருக்கும். உங்களைப்போன்ற முதல்தர நடிகையின் வாழ்க்கை நிச்சயமாக ருசிகரமான சம்பவங்கள் நிறைந்ததாக இருக்கும்.

ஷீ:—மேலே கேளுங்கள், பால்ராஜ். திரையில் காணப்படும் கதைகளைப் போன்று ஒருநடிகையின் வாழ்க்கையில் இனிமையும், புதுமையும் இருக்குமென்று நீங்கள் நினைத்தால், நீங்கள் மிகவும் தவருக எதிர்பார்க்கிறீர்கள்.

பா:—அல்ல, நான் ஒரு நடிகையின் வாழ்க்கை மிகவும் சந்தோஷகரமானது என்று எண்ணவில்லை. ஆனல், வழக்கத்துக்கு மாறுபட்டதாக உள்ளது.

ஷீ (சிரித்துக்கொண்டு) :—நீங்கள் சினிமா நக்ஷத்திரங்கள் பணத்தில் புரளுகின்றனர் என்று எண்ணினல், அது முற்றிலும் தவறு. அவர்களது வாழ்க்கையும் மற்ற மனிதர்களுடையதைப் போலவே இருக்கிறது. சந்தோஷம் சிறிது காலமும், சில காலம் துக்கமாகவும்—அத்துடன் கதை முடிகிறது.

பா:—நீங்கள் வாழ்நாட்களின் பூராக் கதையையும் ஓரிரு வார்த்தைகளில் அடக்கிவிட்டீர்களே!—நீங்கள் தத்துவ சாஸ்திரம் படித்தீர்களோ?

ஷீ:—தத்துவ ஞானமில்லை; ஆனல் எனக்கு எப்பொழுதும் இலக்கியங்களில் ஈடுபாடுண்டு.

பா:—உங்களுக்கு மிகவும் பிடித்தமான இலக்கிய ஆசிரியர்கள் யார்?

ஷீ:—இப்பொழுது நான் விரும்பிப் படிப்பது அநேகமாக கொலை, களவு நிறைந்த துப்பறியும் நவீனங்களே!

பா:—நல்ல காலம்! நீங்கள் ஒருவரையும் கொலை செய்யச் சதி செய்யவில்லையே?

ஷீ:—பயப்பட வேண்டாம். அப்படி இருந்தாலும், உங்களுக்கு ஒரு நாளும் துன்பம் செய்யமாட்டேன்.

பா:—நான் பயப்படவே இல்லை. நான் என்ன சொல்ல வந்தேனென்

ருல் உங்களுக்கு எப்பொழுதும் அப்பேற்பட்ட எண்ணம் ஏற்பட அவசியமிருக்கக்கூடாது என்றுதான்! ஒரு கவி சொன்னதுபோல்:—"என்னைக் கொலை செய்ய வந்திருந்தால் கத்தியைக் கீழே போட்டுவிடுங்கள். உங்களுடைய பார்வையே என்னைக் கொன்றுவிடும்."

ஷீ:—நீங்கள் மேற்கோள் சொல்வதில் நல்ல கெட்டிக்காரராயிருக்கிறீர்கள்?

பா:—நீங்கள் மிகவும் நல்லவராக இருக்கிறீர்கள். துப்பறியும் நவீனங்களைத் தவிர வேறு என்ன என்ன நீங்கள் படிக்கிறீர்கள்?

ஷீ:—இப்பொழுது அவ்வளவாக இல்லை. ஆனால் சின்ன வயதில் சார்லஸ் டிக்கன்ஸ், அலெக்ஸான்டர் டூமாஸ் போன்றவர்களின் நாவல்கள் நிறையப் படித்திருக்கிறேன். எனக்கு அப்பொழுது 13 வயது.

பா:—அது எந்த வருஷம்?

ஷீ (யோசித்துவிட்டு):—1944.

பா:—அதாவது, நீங்கள் 1931ல் பிறந்தீர்கள்.

ஷீ:—கணக்கில் புலியாக இருக்கிறீரே! மேலும் புத்திசாலியாகவும் இருக்கிறீர்.

பா:—எப்படி?

ஷீ:—சுற்றுவழியில் தந்திரமாக என் பிறந்த வருஷத்தைத் தெரிந்து கொண்டு விட்டீர்களே? நீங்கள் நேரிடையாக என்னைக் கேட்டிருந்தால் நான் சொல்லமாட்டேன் என்பது போல் கேட்டீர்களோ?

பா:— நான் அவ்வாறு ஒரு பொழுதும் எண்ணவில்லை? ஆனால், நமது சினிமா நக்ஷத்திரங்கள் தங்கள் வயதைப் பொறுத்த விஷயங்களை வெளியிடுவதை விரும்பவில்லை என்பதை நீங்கள் ஒப்புக்கொள்வீர்கள்.

ஷீ:—அது சரிதான். இது விஷயத்தில் எனக்கு அவ்வாறு ஒன்றும் கிடையாது. எப்படியோ, உங்களுக்கு வருஷம் தெரியும், நானே இப்பொழுது தேதியையும் மாதத்தையும் சொல்லிவிடுகிறேன்.—ஏப்ரல் 2, 1931.

பா:—ஒரு நாள் முன்னதாகப் பிறக்காததில் எவ்வளவு அதிர்ஷ்டம் செய்தீர்கள்? எவ்வளவு துரதிருஷ்டமாக அது இருந்திருக்கும் என்று நினைத்துப் பாருங்கள்.

ஷீ:—ஏன் அப்படிக் கூறுகிறீர்கள்?

"அனார்க்கலி" தெலுங்குப் படத்தில் அஞ்சலி தேவியின் தோற்றம் இது. இப் படம் தமிழிலும் தயாரிக்கப்படப் போகிறதாம்.

பா:—எனக்குத் தெரிந்த அளவு உங்களுக்கும் தெரியும்?

ஷீ:—ஓகோ! எப்ரல் முதல் தேதி என்கிறீர்களோ? அதை ஞாபகப்படுத்தியதில் நீங்கள் கெட்டிக்காரர்தான்.

[ஏப்ரல் முதல் தேதி "ஏப்ரல் முட்டாள் தினம்(April Fool's Day)"என்று கொண்டாடுவது நேயர்களுக்கு நினைவிருக்கும்.]

பா:—பிறந்தவுடன் நீங்கள் எப்படி இருந்தீர்கள்?

ஷீ:—ஏன்! மற்ற குழந்தைகளைப் போல்தான் ஏழு பவுண்டு கனம் இருந்தேன். சொல்லக் கேட்டிருக்கிறேன்.

பா:—சரிதான்! வாழ்க்கையின் ஆரம்பமே நன்கு பலமுடன் இருந்தது என்று தெரிகிறது. "நல்ல பலன் தரும் செடி மிருதுவானதும் பளபளப்புமான தளிருடன் காணப்படும்" என்பதுபோல்! அண்ணன் தங்கைகள் உண்டா?

ஷீ:—இரு சகோதரர்களும் ஒரு சகோதரியும் உண்டு.

பா:—இரு சகோதரிகளுக்கு-இரு சகோதரர்கள். நல்ல விகிதம். உங்கள் பால்யப் பருவத்தைப்பற்றி ஏதாவது சொல்லுங்கள்!

ஷீ:—எனக்கு அந்த நாட்கள் புதிராகவே இருக்கின்றன!

பா:—இப்பொழுதுதான் புதிராக இருக்கிறீர்கள்! அந்த நாட்களிலும் அவ்வாறே என்பது வேடிக்கையாக இருக்கிறது.

ஷீ:—பால்ராஜ், நான் சின்னக் குழந்தையாக இருந்த நாட்களைப்பற்றி எனக்கு ஒன்றும் ஞாபகமில்லை என்றுதான் சொல்கிறேன். என்னுடைய தாயாரைக் கேளுங்கள். எனக்குத் தெரிந்தது, நான் கராச்சியில் பிறந்தேன் என்பதுதான். என் தந்தை காட்டிலாகாவில் பம்பாயில் இருந்தார். அவருக்கு அடிக்கடி ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு மாற்றல் ஏற்படும். நாங்களும் அவருடன் போய்க் கொண்டிருப்போம்.

பா:—நீங்கள் ரொம்பப் பிரயாணம் செய்திருக்க வேண்டும். அப்பொழுது நடந்த ருசிமிகுந்த சம்பவம் ஏதாவது ஞாபகம் வந்தால் சொல்லுங்கள்.

ஷீ:—ஆம். ஞாபகமிருக்கிறது. ஒரு சமயம் நாங்கள் பம்பாயிலிருந்து பூனுவுக்குப் போய்க்கொண்டிருந்தோம். எங்கள் பெட்டியில் (Compartment) ஒரு போரா முஸ்லீம் கனவான் (Bohra Muslim) பிரயாணம் செய்து கொண்டிருந்தார். அவருடைய தலைப்பாகை எனக்குப் பார்க்க வேடிக்கையாக இருந்தது. ரயில் வண்டி ஒரு கணவாய்க்குள் நுழைந்தவுடன் விளக்குகள் போடப்பட்டன. அந்த வெளிச்சத்தில் அவருடைய குல்லாயிலுள்ள ஜரிகை வேலைப்பாடுகள் திடீரென்று அழகாய் பளிச்சென்று மின்னின. அதைப் பார்த்து அது வேண்டுமென்று நான் பிடிவாதம் பிடித்து அழ ஆரம்பித்தது எனக்கு ஞாபகமிருக்கிறது. என் பெற்றோர் என்னை சமாதானப்படுத்த முடியாமல் அந்தக் கனவானை "சிறிது நேரம் என் குழந்தை வைத்துக் கொண்டிருக்க உங்கள் குல்லாயைக் கொடுங்கள்" என்று கேட்கும்படியாயிற்றும்.

பா:—அதிலிருந்து உங்களுக்கு ஒரு பிடிவாத குணம் இருக்கிறது என்பது தெரிகிறது.

ஷீ:—பிடிவாதம் அல்ல நண்பரே, ஆனால் நான் நல்ல தீர்மான புத்தியுடையவள் என்பது.

பா:—சரி, நீங்கள் அவ்வாறு சொல்லிக்கொள்ள விரும்பினால் அப்படியே இருக்கட்டும். அந்தச் சிறு பிராயத்திற்குப் பிறகு........

ஷீ:-எனக்குப் பத்துவயதானபொழுது எங்கள் குடும்பம் லாகூருக்குப் போயிற்று. அங்கு நான் ஸர் கங்காராம் பெண்கள் பள்ளிக்கூடத்தின் மூலம் எனது மெட்ரிகுலேஷன் பரிக்ஷையில் தேறினேன். சில மார்க்குகள் குறைவினால் எனக்கு முதல் வகுப்பு கிடைக்கவில்லை.

பா:—சில மார்க்குகள் வித்தியாசத்தால் முதல் வகுப்பைத் தவறவிடுவது எவ்வளவு ஏமாற்றத்தைத் தரும் என்பது எனக்கு நன்கு தெரியும். உண்மையில், முதல் வகுப்போ அல்லது இரண்டாவதோ எதுவானாலும் படவுலகில் எல்லாம் ஒன்றே.

ஷீ:—அது ரொம்ப சரியானதே! ஆனால் நீங்கள் சொன்ன ஏமாற்றம் அந்த சமயம் மிகவும் உண்மையாக இருந்தது. எப்படியோ, நான் பம்பாயில் இண்டர் மீடியேட் பாஸ் செய்தேன். டெல்லிக்குச் சென்று இந்திரப்பிரஸ்தக் கல்லூரியில் சேர்ந்து பீ. ஏ. பட்டம் பெறப் படித்தேன்.

பா:—இந்தியாவின் மேற்கு பாகம் பூராவும் நீங்கள் சுற்றி யிருக்கிறீர்கள் போல் தெரிகிறது. உங்களுக்கு மிகவும் பிடித்தமான நகரம் எது?

ஷீ:—டெல்லி.

பா:—ஏன்?

ஷீ:—ஏனெனில் என்னுடைய சிறிய வயதையும், பருவ வயதையும் அங்குதான் கழித்தேன். கவலையற்றதும், பயமற்றதுமான சந்தோஷம் நிறைந்த டில்லியில் கழித்த அந்த நாட்கள் என் மனத்தில் ஒரு உற்சாகத்தைத் தருகின்றன.

பா:—டெல்லியில் இருந்தபொழுது படிப்பைத் தவிர வேறு எந்த விஷயங்களில் நீங்கள் சிரத்தையா யிருந்தீர்கள்?

ஷீ:—அடிக்கடி அமெச்சூர் நாடகங்களிலும், ஆல் இந்தியா ரேடியோ நாடகங்களிலும் பங்கு கொள்வதுண்டு.

பா:—சினிமாப் பார்ப்பதில் ஆசை உண்டா?

ஷீ:—ஆம், எனக்கு உண்டு. என்னுடைய 12வது வயதில் முதல் முதல் ஒரு ஆங்கிலப்படம் பார்த்தேன். நான் முதல் முதல் பார்த்த இந்தியப் படம் "புகார்".

பா:—வீட்டில் சகோதர சகோதரிகளுடன் ஒத்துப் பழகியதுண்டா?

ஷீ:—நான்தான் மூத்தவள். மேலும் நான் தான் மிகவும் பலமற்றவள். அதனால் தான் நான் சும்மாயிருந்தேன். சிறுவர்களை அதிகாரம் செய்வதற்குப் பதில் அவர்களிடம் நான் பணிந்து வந்தேன். ஆனால் பின்னால் நான் ஒரு துடுக்குள்ளவளாக மாறினேன். நிறையப் பொழுதை மரம் ஏறுவதிலும், ஜன்னல் கதவுகளை உடைப்பதிலும். இது போன்ற விஷமங்களிலும் கழித்தேன். இந்த வழிகளிலிருந்து என்னைத் திருப்புவதில் என் பெற்றோர் மிகவும் பாடுபட்டனர். ஆனால் நான் ஒரு சர்வாதிகாரியாகவே இருந்து வந்தேன்.

பா:—உங்களுடைய அந்த சர்வாதிகார நாளிலிருந்து ஏதாவது ஒரு அனுபவம் கூறுங்கள்.

ஷீ:—ஒரு சமயம் என்னுடைய பிறந்த நாள் விருந்துக்கு என் சிநேகிதி ஒருத்தி வர மறுத்துவிட்டாள். நான் மிகவும் கோபமாயிருந்தேன். ஏனெனில் அவளுடைய பிறந்த தினத்திற்கு நான் ஒரு சிறந்த பரிசு கொடுத்தேன். எனக்குப் பரிசு தரமாட்டேன் என்று அவள் சொல்வதை நான் எவ்வாறு சகித்துக் கொள்வேன். அவளுக்குச் சரியான பூசை கொடுத்தேன். அது அவளை விருந்துக்கு வரும்படி வைத்தது.

பா:—உண்மையிலேயே நீங்கள் கொடூரமான சர்வாதிகாரிதான். நான் சற்று விலகியே இருக்கிறேன். அதாவது, அந்த நாட்களில் உங்கள் நண்பர்களை உதைப்பதே உங்கள் முக்கிய வேலையாக இருந்தது!

ஷீ:—அது என் நடவடிக்கையின் ஒரு சிறு பகுதியே. எங்கள் மொட்டை மாடியில் அடிக்கடி நாடகங்களும், கேளிக்கைகளும் ஏற்பாடு செய்து வந்தேன். எல்லா விஷயங்களையும் நானே


நீண்டு பெருகும் கூந்தலுக்கு
கேசவர்த்தினி ஒன்றே

கேசவர்த்தினி

கொண்டு சுண்டைத் தீருங்கள். இனி கூந்தல் உதிரவேண்டாம். தலை அரிப்பும் இனி வேண்டாம். அகால நரை தாமதிக்கட்டும். நரைக்கு என்ன அவசரம்?

வாடின கூந்தல்
கேசவர்த்தினியின்

உதவியால் புத்துயிர் பெற்று விளங்கட்டும்.

ஷாம்புவினால் தலை சுத்தமாகவும், பரிமளமுள்ளதாகவும் ஆகட்டும். கேசவர்த்தினி அணா 14; ஷாம்பூ அணா 14; தபால் செலவு வேறு. எங்கும் கிடைக்கும்.

கேசவர்த்தினி ப்ராடக்ட்ஸ் :: கோயமுத்தூர்

கவனித்து வந்தேன். அந்தக் காட்சிகளுக்கு டிக்கட்டுகள் உண்டு. நானே டிக்கட்டுகளைச் செய்தேன்; விற்றேன். நான் படித்த ஹாஸ்ய நாடகங்களை நடிப்பேன்.

பா:—ஆரம்பத்திலிருந்தே நாடகங்களில் ஆர்வமிருந்ததா? ஒருகால் ஒரு கவி சொன்னதுபோல்:—"என் குணம் இளமையிலிருந்தே பலவிதமாக இருந்தது." அப்படியா?

ஷி:—நடிப்புத்தன்மை நல்லது பால்ராஜ். ஆனல் என் முக்கிய விருப்பம், பி. ஏ. பட்டம் பெற்ற பிறகு அமெரிக்கா செல்ல வேண்டுமென்பதே. நான் வேண்டிய முயற்சிகளை யெல்லாம் செய்தேன. ஆனல் என் தகப்பனர் அனுமதியளிக்கவில்லை. எனக்கு அமெரிக்கா செல்ல அனுமதியளிக்காவிடில் நான் சினிமாவில் சேருவதாக அவரிடம் சொன்னேன்.

பா:—அந்த மற்றொரு யோசனைக்கு அவர் ஒப்புக்கொண்டே இருக்கமாட்டார்.

ஷி:—எனக்கு ஹிந்தியே தெரியாது. ஆகையால் என் தீர்மானத்தைக கண்டு என் உறவினர்கள் சிரித்தனர். கேலி செய்வதுபோல் என்னை, 'ஹிந்தி தெரியாத நான் கதாநாயகியாக எப்படி நடிக்கமுடியும்' என்று அவர்கள் கேட்டனர். இது என்னை ஹிந்தியை நன்கு கற்றுக் கொள்வதில் தீவிரமாக முனைய விரதம் எடுத்துக் கொள்ளச செய்தது. அதனல் நான் ஹிநதி-பேச்சு கற்றுக் கொடுக்க ஒரு உபாத்தியாயரை நியமித்துக் கொண்டேன். சீக்கிரமே எவ்வாறு ஹிந்தி பேசுவது என்பதை அவர்களுக்குக் காண்பித்தேன்.

பா:—உங்களுக்கு என் மரியாதையைச் செலுத்துகிறேன. இப்பொழுது நீங்கள் ஹிந்தி நன்கு எழுதப படிக்கக் கூடுமா?

ஷி:—எனக்து ஹிந்தி பேசத்தான் தெரியும்.

பா:—ஷீலாஜி, நீங்கள் எப்படிப் படங்களில் நடிக்க ஆரம்பித்தீர்கள்.

ஷி:—எனது மாமா பிலம்ஸ்தானின் படங்களை விநியோகிக்கும் ஒரு விநியோகஸ்தர். அவர் மூலம் பிலம்ஸ்தானில் சேர்ந்தேன். அங்கு ஒரு நிரந்தர நடிகையாக ஒப்பந்தம் செய்யப் பட்டேன். டி. டி. காச்யப்பால் டைரெக்ட் செய்யப்பட்ட ஒரு படத்தில் தான் முதல் முதல் நான் காமிராவின் முன் தோன்றினேன்.

பா:—முதன் முதல் காமிராவின் முன்னல் நடித்தபோது கூச்சப்பட்டீர்களா?

ஷி:—உண்மையில் நான் கூச்சப்பட்டேன், நாளடைவில் சரிப்பட்டுவிட்டது.

பா:—அந்தப் படத்தில் உங்கள் பாகத்தைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்.

ஷி:—படத்தைப் பார்த்த பொழுது படவுலகிலிருந்து விலகிவிடலாமா என்று எண்ணும் அளவுக்கு ஏமாந்து விட்டேன. அப்பொழுதுதான் டைரெக்டர் வி. ஷாந்தாராம அவருடைய "தீன் பத்தி சார் ரஸ்தா" (மூன்று விளக்குகளும் நான்கு சாலைகளும்) என்ற படத்தில் நடிக்க என்னை ஒப்பந்தம் செய்ய நேரிட்டது.

பா:—அதில் நீங்கள் நன்கு நடித்திருக்கவேண்டும். ஏனெனில் இப்பொழுது நீங்கள், ஆரம்பத்திலிருந்த பயம், வெட்கம் முதலியனவற்றை வென்றுவிட்டீர்களே.

ஷி:—உண்மையில் இப்படத்தில் என்னல் மிகவும் சுலபமாக நடிக்க முடிந்தது.

பா:—ஷாந்தாராமின் கீழ் வேலை பார்ப்பதில் உங்களுக்கு ஏற்பட்ட அனுபவங்களைப பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

ஷி:—என்னல் பலவற்றைக் கற்க முடிந்தது. அவர் ஒரு சிறந்த டைரெக்டர். அதைத் தவிர அவர் நிறைந்த மனித சுபாவம் படைத்தவர்.

பா:—ஷீலாஜி. "டாக்ஸி டிரைவர்" என்ற படத்தைப் பற்றியும், "உன் இரு மனதையும் ஒருமைப்படுத்து" என்ற பாட்டைப் பற்றியும், அதில் இளமை, அழகு இவை இரண்டின் பிரதிபலிப்பான ஷீலாரமணியின் சிரிப்பும், குதூகலமும், நிறைந்த நடிப்பைப் பற்றியும் பேசுவோம்.

ஷி:—நிறுத்துங்கள், நிறுத்துங்கள் பால்ராஜ். நீங்கள மறுபடியும் கவிதையில் இறங்காதீர்கள்.

பா:—நான் என்ன செய்வது! எனக்கும் ஒரு இருதயம் இருக்கிறதல்லவா? உங்கள் "டாக்ஸி டிரைவர்" படத்தைப் பற்றி உங்கள் கருத்து என்னவோ?

ஷி:—ஆனல், அந்தப் பெருமை

**ஆறே வயதில் அரங்கேறிய பேபி லலிதா வயதில் சிறியவளேயாயினும் தன் நடனக் கச்சேரிகள் மூலம் பணம் திரட்டிப் பொதுப் பணிகளுக்கு உதவும் பெரும் சேவையில் ஈடுபட்டிருக்கிருள். ''சண்டிராணி'' ''பரிவர்த்தனே'' ஆகிய படங்களில் அவளுடைய நடனத்தை நீங்கள் பார்க்கலாம்.**

---

அதன் டைரெக்டர் சேத்தன் ஆனந்தைச சேரவேணடியது. என்னுடைய நடிப்பு எந்த விதத்திலாவது உயர்நது இருந்தால அது முற்றிலும அவருடைய சலியா உழைப்பிஞலும், கணகாணிப்பிஞலும தான்.

பா:—கண்ணல் பார்ப்பதனலேயே விஷயத்தை அறியும் ஆற்றலும், கலேயில் சிரத்தையும் உள்ள இந்தியாவிலுள்ள சில சிறந்த டைரெகடர்களில் சேத்தன் ஆனந்தும் ஒருவர் என்பது சந்தேகமல்ல. நீங்கள் நடிக்கும் வரப் போகும் படஙகள் எவை?

ஷீ:—"கலாகர்", "கமண்டி", "நௌகரி" இவைகளில் முன்பிருந்ததைவிட என்னிடம் சில அபிவிருத்திகளே நீங்கள் காண முடியும்.

பா:—உங்களேப் போன்ற படித்தவரும், பொறுபபை உணந்தவருமான ஒரு நடிகையிடமிருந்து அவ்விதமான அபிவிருத்திகள் எதிர்பார்க்கக் கூடியதுதான். ஏன் நீங்கள் இவ்வாறு பல படங்களில் ஒரே சமயத்தில் நடித்து வருகிறீர்கள்?

ஷீ:—இது ஒரு சின்ன சமாசாரம். சினிமா, மற்ற தொழில்களேப் போன்று, ஒரு வர்த்தக பேரம். உங்களுடைய படம் நல்ல வெற்றியடைந்தால உங்களுக்கு நல்ல கிராக்கி ஏற்படும். படம் தோல்வியுற்ருல், அந்த நக்ஷத்திரம் அத்துடன் மறைந்ததுதான். ஆகையால் புத்திசாலியான காரியம் ஒரே சமயத்தில் பல படங்களில் நடித்தால் ஏதோ ஒன்றிரண்டாவது வெற்றியடையாதா என்பதுதான்.

பா:—நீங்கள் நிச்சயமாக வருமுன் காப்பவரே. இம்மாதிரியான முன் யோசனே வியாபார விஷயங்களில தேவையானதும் நல்லதும்தான். உங்களுக்கு எந்த விதமான பாத்திரம் பிடிக்கிறது?

ஷீ:—நடிப்பும், உணர்ச்சிகளும் நிரம்பிய கதாபாதத்ரமாக நடிப்பதையே நான் விரும்புகிறேன்.

பா:—நீங்கள் நடித்திருக்கும் இளம் படாடோபமான கதாநாயகிகளாய் நடிப்பதை விரும்பவில்லேயா?

ஷீ:—சோக ரஸமான பாகத்தில் நடிப்பதில் சந்தோஷம் நிறைந்த பாகங்களில் நடிப்பதைக் காட்டிலும் மனதுக்கு ஆறுதல் ஏற்படுகிறது என்பதை நீங்கள் அறியவில்லே.

பா:—ஆனல், அது அன்பின் அறிகுறி.

ஷீ:—ஆம்.

பா:—இந்த எண்ணங்கள் உங்களே நடிக்க ஆரம்பித்ததிலிருந்தே துன்புறுத்தியதுண்டோ?

ஷீ:—இல்லே, அது சுமாராக ஆறு வருஷமாக இருக்கிறது.

பா:—காதலில் ஈடுபடுவது எவ்வாறு இருக்கிறது?

ஷீ:—அது ஒரு தனியான உணர்ச்சியுடையதாயுள்ளது. ரொம்பவும் புதுமையானது.

பா:—அப்பேற்பட்ட அதிருஷ்ட புருஷர் யார்?

ஷீ:—அவருடைய பெயரை அதற்குள் சொல்ல முடியாது.

பா:—அவர் பம்பாயிலிருக்கிருரோ?

ஷீ:—இல்லே இல்லே, அவர் தற்பொழுது டெல்லியில் இருக்கிருர்.

அனைவரும் விரும்புவது

மைதீன்

புகையிலை

E.S. மைதீன் & கோ.

கும்பகோணம்

Phone: 41. Grams: MYDEENCO.


பா:—அதுதான் நீங்கள் டெல்லியை அவ்வளவு விரும்புகிறீர்கள். எப்பொழுது கல்யாணம்?

ஷீ:—அடுத்த வருஷக் கடைசியில்.

பா:—திருமணத்திற்குப் பிறகு உங்களுக்காக ஏதாவது திட்டங்கள் போட்டிருக்கிறீர்களா?

ஷீ:—சுமாராக ஒரு டஜன் குழந்தைகள் உற்பத்தி செய்ய திட்டம் வகுத்திருக்கிறேன். ஏனெனில் வீட்டில் எப்போதும் குஷியும் கும்மாளமுமாக இருக்குமல்லவா?

பா:—ஒரு பட்டாளம். ஆனல் அது, நிச்சயமாக, நீங்கள் தீர்மானிக்கவேண்டியதுதான். சினிமா சம்பந்தமானவைகள் பற்றிக் கேட்டேன். கல்யாணத்திற்குப் பின் சினிமாவில் நடிக்கப் போகிறீர்களா?

ஷீ:—ஆஹா, ஏன் இல்லை.

பா:—உங்கள் கணவன் சம்மதிக்காவிட்டால்?

ஷீ:—இது விஷயங்களில் அவருக்கு ஆக்ஷேபணைகள் இல்லை.

பா:—இப்பொழுது இல்லாமல் இருக்கலாம். ஆனல், விவாஹத்திற்குப் பிறகு அப்படி ஏற்பட்டால்?

ஷீ:—பால்ராஜ், உங்களைவிட அவரைப் பற்றி எனக்கு நிரம்பத் தெரியும்.

பா:—நான் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். உங்கள் கல்யாணத்தைக் கொண்டாட ஒரு இசைத்தட்டு வைக்கட்டுமா?

(ஷெஹ்னய் வாத்திய இசைத்தட்டு ஒலிக்கிறது.)

ஞாபகமிருக்கட்டும், உங்கள் கல்யாணத்திற்கு என்னை அழைக்க மறந்து விடவேண்டாம்.

ஷீ:—நீங்கள் வருவீர்களானல் எனக்கு மிகுந்த சந்தோஷம்.

பா:—நான் நிச்சயமாக வருவேன், உங்கள் பால்ய சிநேகிதையைப்போல் அடி வாங்காமலிருக்க நிச்சயமாயிருக்க என்னுடன் ஒரு வெகுமதி கொண்டு வரவும் மறக்கமாட்டேன்.

(இருவரும் சிரிக்கிருர்கள். இசைத்தட்டு ஒலி உரக்கக் கேட்கிறது.)

**[நீங்கள் மேலே வாசித்தது. பிரபலமான லிப்டன் டீ கம்பெனியாரது ஏற்பாட்டின் பேரில் ரேடியோ ஸிலோன் மூலம் ஒலி பரப்பப்பட்ட நக்ஷத்திரப் பேட்டியாகும்]**

இம்மாதம் வெளிவர விருக்கும் படங்களில் ஜெமினி வெளியீடான "வள்ளியின் செல்வன்" தமிழ்ப் படமும் ஒன்றாகும். ஒரு செல்வக் குடும்பத்தையும், ஒரு ஏழைக் குடும்பத்தையும் பற்றிதான "வள்ளியின் செல்வன்" கதை, "மக்கட் செல்வமே மதிப்புமிக்க செல்வம்" என்பதை விளக்குவதாகும். முந்தின குடும்பத்தில் செல்வம் நிறைந்திருந்தும் குழந்தை இல்லாத குறை மட்டும் பெரும் குறையாக இருக்கிறது. ஆனால், ஏழைக் குடும்பத்திலோ செல்வமில்லை யெனினும், சீக்கிரமே ஒரு குழந்தை பிறக்க இருக்கிறது. இந்த நிலையில் ஏழைக் குடும்பத் தலைவன் பணக்காரக் குடும்பத்தினரின் மனத்துயரை நீக்க எவ்வாறு உதவுகிறான் என்பதை விளக்குகிறது இக் கதை. பிறருக்காக இந்த ஏழை செய்யும் மகத்தான தியாகம், அன்பு, கடமை, நண்பருக்கு அளித்த வாக்குறுதியை நிறைவேற்றிவிட்டு அவன் படும் மனத்துயரம், இவையெல்லாம் படத்தில் தத்ரூபமாய் சித்திரிக்கப்பட்டிருக்கின்றனவாம்.

யுனைடெட் பிலிம் ஆர்ட்ஸ்

# வள்ளியின் செல்வன்

ஜெமினி ரிலீஸ்

சுப்பய்யா

லலிதா

வனஜா



சகஸ்ரநாமம்

துரைராஜ

ஆர். கணேஷ்



ஜெமினி வெளியீடான இப்படம் யுனைட்டெட் பிலிம் ஆர்ட்ஸின ரால் ஜெமினி ஸ்டுடியோவில் தயாரிக்கப் பட்டதாகும். இப் படத்தை கொத்தமங்கலம் சுப்பு டைரெக்ட் செய்திருக்கிறார். லலிதா, வனஜா, சுந்தரிபாய், ஜெமினி கணேஷ், சகஸ்ரநாமம், துரை ராஜ், சுப்பய்யா போன்ற நக்ஷத்திரங்கள் இப் படத்தில் அற்புதமாய் நடித்திருக்கிறார்களாம். பிப்ரவரி மாதம் 11ந் தேதியன்று இப் படம் தென்னாடெங்கும் வெளிவர விருக்கிறது. சென்னையில் வெலிங்டன், பிரபாத், சரஸ்வதி ஆகிய மூன்று தியேட்டர்களில் இந்தப் படம் ஏக காலத்தில் வெளிவர விருக்கின்றது.

யுனைடெட் பிலிம் ஆர்ட்ஸ்

வள்ளியின் செல்வன்

## இது கவர்ச்சிகரமாக இருக்க வேண்டிய சமயம்

மணமிக்க புதிய

# ஆப்கான் ஸ்னே

பெண்மையின் அழகை பாதுகாப்பதுடன் அதிகரிக்கச் செய்கிறது . .

சருமத்தை நாள் முழுவதும் மழமழப்பாகவும் மிருதுவாகவும் வைக்கிறது......

**அப்கான் ஸ்னே**

பாடன்வாலா

# குண்டூசியைக் கேளுங்கள்

[சினிமா, நாடகம், நடனம், சங்கீதம் ஆகிய கலைகள் சம்பந்தமாக உங்களுக்குள்ள சந்தேகங்களைத் தீர்ப்பதற்கே இந்தப் பகுதி ஏற்பட்டிருக்கிறது. யாருடைய மனமும் நோகாதபடி தமாஷாகப் பதில் அளித்து, மேற்சொன்ன கலைகளைச் சீர்திருத்துவதே என்னுடைய நோக்கமாகும்.]

**எம். டி. எஸ். ராஜா (சென்னை-6.)**

**ஏ. பி. நாகராஜன் அவர்களின் விலாஸத்தைத் தெரிவிக்கவும்.**

ஏ. பி. நாகராஜன் C/o எம். ஏ. வி. பிக்சர்ஸ், ஸென்ட்ரல் ஸ்டுடியோ, கோயமுத்தூர்—என்பது அவருடைய தற்போதைய விலாஸம்.

**ஏ. டி. பாண்டியன் (இலங்கை)**

**மு. கருணாநிதி எதுவரையில் படித்தவர்?**

அவர் எஸ். எஸ். எல். ஸி யில் தேறியவர் என்று அறிகிறேன்.

**டி. கே. கந்தசாமி (திருச்செங்கோடு)**

**"கனவு" படத்தில் நாடோடி நடனம் ஆடும் பெண்மணியின் பெயர் என்ன?**

குமாரி பாரதி.

**வி. எம். சக்ரபாணி (சேலம்)**

**"பெண்" தமிழ்ப் படத்தில் மேடம் க்யூரி டான்ஸ் முடிந்தவுடன் மேடையில் ஏறி அவரது நடனத்தைப்பற்றி சவாலாகப் பேசும் நபர் யார்?**

இந்த சவால் பேர்வழி எஸ். வி. வெங்கட்டராமன்.

**பி. திரியம்பகம் (ராஜ்கோட்)**

**ஜெமினி முன்பு வெளியிட்ட "பால நாகம்மா" படத்தில் பால நாகம்மாவாக நடித்தவர் யார் என்பதைத் தெரிவிக்கவும்.**

திரையுலகிலிருந்து மாயமாய் மறைந்து போயுள்ள பிரபல காஞ்சன மாலாதான் அந்தப் பாத்திரமாக நடித்தவர்.

**பி. கே. ஐயன் (குருவாடி)**

**என் நண்பன் பிரபல நடிகை ஸ்ரீமதி...... யை மணந்து கொள்ளாமல் நிறுத்துவதில்லை என்ற வைராக்கியத்துடன் உண்ணாவிரதம் தொடங்கியிருக்கிறார்!**

வேடிக்கையாக இருக்கிறதே! உம் நண்பருக்குப் பதில் அந்த நடிகையல்லவா உண்ணாவிரதம் இருக்கவேண்டும்—பருமனைக் குறைத்துக் கொள்ளுவதற்கு! ஆனால் ஒன்று; இதுபோல் அநேக ரஸிகர்கள் உண்ணாவிரதம் இருக்கத் தொடங்கி விட்டால், ஒரு சாதகம் ஏற்படலாம். "சினிமாத் தொழில் மூலம் சர்க்காருக்கு ஏராள வருமானம் கிடைக்கிறது; ஆதலால், சலுகைகள் காட்ட வேண்டும்" என்று பட முதலாளிகள் கேட்கும் பல்லவியுடன் "சினிமா நக்ஷத்திரங்கள் காரணமாக, அநேக ரஸிகர்கள் உண்ணாவிரதமிருக்கிறார்கள். அதன் மூலம் உணவுப் பிரச்னை ஓரளவு குறைகிறது" என்ற அனுபல்லவியையும் சேர்த்துக் கொள்ளலாமல்லவா?

**டி. எஸ். ஹநுமந்தராவ் (தஞ்சாவூர்)**

**"எதிர்பாராதது" படத்தில் காட்டப்படும் திருச்செந்தூர் சுப்ரமண்ய சுவாமி, திருப்பதி வெங்கடாஜலபதி, பண்டரிபுர பண்டரிநாதர் ஆகியவை மூல விக்ரகங்களை நேராகப் படம் பிடிக்கப்பட்டவையா?**

இல்லை: ஸ்டுடியோவில் அதுபோல் விக்ரகங்களைச் செய்து படமெடுக்கப்பட்டவையே. கோயில் அதிகாரிகள் அனுமதி அளித்தால்கூட கேமிரா, மின்சார விளக்குகள் இவைகளை கோயில்களுக்குள் கொண்டுபோய் படமெடுப்பதற்கு சௌகரியப்படாது.

**ஏ. சங்கரன் (பாப்பாநாடு)**

**யூ. ஆர். ஜீவரத்தினம் தற்போது என்ன செய்து கொண்டிருக்கிறார்?**

கச்சேரிக்கு 'சான்ஸ்' கிடைக்கும் போது போகிருர். மற்ற நேரங்களில் தம் புத்திரி, கணவன், இவர்களுடன் பொழுதைப் போக்கி வருகிருர்.

**கே. கே. வேணு நாயுடு (கள்ளக்குறிச்சி)**

**எம். எம் மாரியப்பா நடித்த "கலியுகம்" முடிவடைந்து விட்டதா? எப்பொழுது வெளி வரும்?**

இந்தப் படம் தயாராகி, ஓடி—எல்லாம் முடிவடைந்து விட்டது!

**டி. என். தாமோதரன் (தஞ்சாவூர்)**

**"கல்கி" அவர்கள் "டப்பா சங்கீத"த்தை தமிழ்ப் படங்களிலிருந்து ஒழிப்பதற்கு அரும்பாடு பட்டிருக்கிருர். "கல்கி" ஆதரவாளர்கள் இவ்விஷயத்தில் அவரைப் பின்பற்ற வேண்டியது கடமை அல்லவா? தாங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்?**

நான் செய்யப் போவதை விட ரஸிகர்கள் செய்யப் போவதே முக்கியமாகும். டப்பா சங்கீதம் அடங்கிய படங்களை டப்பாக்களை விட்டு எடுக்க முடியாமல் செய்வது அவர்கள் கையிலேயே இருக்கிறது.

**பி. குருசாமி (திரிகோணமலை)**

**கே. மாலதி, கே. சாவித்திரியின் சகோதரியா?**

இல்லை. ஆனல் மாலதியின் சகோதரி யொருவர் சினிமாவில் நடித்துள்ளது உண்மையே.

**ஆர். எஸ். சுஷில் குமார் தாரா (மாயனூர்)**

**சென்னையில் உள்ள எந்த ஸ்டுடியோ அல்லது கம்பெனியில் சினிமாவில் நடிப்பதற்குப் புதிதாக ஆட்களைச் சேர்க்கிருர்கள்?**

பிரபலம் ஆகாத பழைய முகங்களையே புது "முகங்களாக" நடிக்கச் செய்வதிலே பட முதலாளிகள் ஈடுபட்டிருக்கிருர்கள். உண்மையில், சினிமாவில் ஈடுபட்டுள்ள அநேக முகங்களுக்கே வேலையில்லை. வேலை உள்ளவர்களுக்குகோ கூலி கிடைப்பதில்லை;

சென்னை நகரத்திற்கு டிஸ்ட்ரிபியூட்டர்கள்: சுராஜ் ஏஜன்ஸ்ஸ், 18, ராயப்பேட்டை ஹைரோடு, சென்னை—14. கோயமுத்தூர், பாலக்காடு, நீலகிரிக்கு சோல் ஏஜண்டுகள்; **B. பால பட்டாபி செட்டியார்,** (1933-ல் ஸ்தாபிக்கப்பட்டது) **கோயமுத்தூர்.**

கூலி பெற்றவர்களுக்கோ புகழ் கிடைப்பதில்லை.

**கே. எஸ். சீதாராமன் (பரமத்து)**

**லலிதா பத்மினி முதன் முதலில் பாத்திரமேற்று நடித்த படம் எது?**

"பிரஸன்ன" மலையாளப் படம்தான் அவர்கள் நடித்த முதல் படம்.

**பி. செல்லக்கன் நாடார் (சங்கனசேரி)**

**எஸ். எஸ். கொக்கோ இறந்த பின் ஸ்டன்ட் படங்களே தயாரிப்பதில்லையே? ஏன்?**

முன்பெல்லாம் நடிக, நடிகைகள் 'ஸ்டன்ட்' செய்தார்கள். ஆனால், இப்பொழுதோ அந்தத் தாவல், தலை கீழ் விழுதல், மூக்கை உடைத்துக் கொள்ளுதல் போன்ற அபாயகரமான வேலைகளையெல்லாம் படம் தயாரிக்கும் போது பட முதலாளிகளே செய்து வருகின்றனர்! இந்த செம்மறிக் கூட்டத்தினர் இப்பொழுது சமூகப் படத் தயாரிப்பில ஈடுபட்டிருக்கின்றனர். யார் கண்டது; திடீரென்று இவர்கள் எல்லோருமே ஒரு நாள் "ஸ்டன்ட்" படங்களைத் தயாரிக்க முற்பட்டு விட்டால் அது ஆச்சரியப்படக் கூடியதேயில்லை.

விஜயா புரடக்ஷன்ஸ்வெளியிட்டுள்ள "மிஸ்ஸி அம்மா" படத்தில் மேரி மாதாவாகக் காட்சியளிக்கிருர் சாவித்திரி.

**சாவித்திரி (மயிலாப்பூர்)**

**சில சினிமா நடிகைகள் வெளியே வரும் போது பாவாடை தாவணி அணிந்து, இரட்டைப் பின்னல் போட்டுக் கொண்டு சிறு பெண்களைப் போலக் காட்சியளிப்பதேன்?**

எல்லாம் பிறரது கவனத்தைக் கவருவதற்காகத்தான்!

**பி. எம். ஓ. (காஞ்சிபுரம்)**

**க...க...கா...காதலிக்காக...க....க...கஷாயம் சாப்பிடும் ஜெ...ஜெ...ஜெமினி கணேசனுக்கு...கல்யாணம் ஆகிவிட்டதா?**

அ....அ....ஆ....ஆகிவிட்டது!

**எம். அப்துல் சுபான் (திருச்சி)**

**ஒரு நடிகை கதா நாயகனேடு நடிக்கும் போது அவள் மனம் எதை நாடும்?**

அந்தரங்கமான பல உணர்ச்சிகளை நாடும் அவளது மனம்.

**ஆர். என். நாரப்பன் (கந்தசாமிபுரம்)**

**லலிதா, பத்மினி, பானுமதி, பி. எஸ். சரோஜா, மாதுரி தேவி—இவர்களில் நடிப்பிலும் அழகிலும் சிறந்தவர் யார்?**

நடிப்பில் பானுமதி; அழகில் பத்மினி,

**எஸ். ஸி. லிங்கசாமி (செம்படபாளையம்)**

**எம். ஜீ. ராமச்சந்திரனுக்கு விவாஹம் ஆகிவிட்டதா? குழந்தைகள் உண்டா?**

பல வருஷங்களுக்கு முன்பே ஆகிவிட்டது. ஆனல், குழந்தைகள் கிடையாது.

**சி. சுப்ரமண்யம் (கொழும்பு)**

**'டி. ஆர். ராஜகுமாரியின் தந்தையும் காலமானர், தாயும் சமீபத்தில் காலமாகிவிட்டார்' என்று ஒரு பத்திரிகையில் படித்தேன்.**

ஆகவே, ராஜகுமாரியும், அவரது சகோதரர் ராமச்சந்திரனும் தற்போது யாருடைய பாதுகாப்பில் இருக்கின்றனர்.

அவர்கள் பச்சைக் குழந்தைகளா என்ன, நீர் இப்படிக் கவலைப்படுவதற்கு? அவர்கள்தான் பிறரைப் பாதுகாக்கும் வயதை அடைந்திருக்கிருர்களே.

**டி. ஜே. பிரான்ஸிஸ் (கொழும்பு)**

**''துளி விஷம்'' படத்தில் சிவாஜி கணேசன் ஒரு பெண்ணைக் காதலித்துவிட்டு, அதே பெண்ணைக் கொலை செய்கிருரே? அவருக்கு ஏன் ஒருதண்டனையும் கொடுக்கப்படவில்லை?**

கதைக் கொலை, பேச்சுக் கொலை, சங்கீதக் கொலை, நடனக் கொலை போன்ற —சினிமா உலகக் கொலைகளில் இதுவும் ஒன்று! இந்தக் கொலைகளுக்காக வெல்லாம் மரண தண்டனை விதிக்க முற்பட்டால் இந்தியாவின் ஜனத்தொகை பிரச்னை ஓரளவு தீர்ந்து போகும்!

**எஸ். ஷண்முகம் (நல்லிபள்ளி)**

**''தேவதாஸ்'' புகழ் சாவித்திரியை என் நண்பன் திருமணம் செய்துகொள்ள முடியுமா?**

அடப் பாவமே! சில தினங்களுக்கு முன்பே கேட்டிருக்கக் கூடாதா? சமீபத்தில்தானே அவரை ஜெமினி கணேசன் ''மிஸ்ஸியம்மா''வாக்கி கல்யாணம் செய்துகொண்டார்!

**கே. ஸி. கே. (கும்பகோணம்)**

**சுலபமாகப் புகழ் பெறுவதற்கு சிறந்த வழி எது?**

தன்னம்பிக்கையோடு இடைவிடாமல் உழைத்தால் புகழ் சுலபமாகக் கிடைக்கும்!

**''தமிழரசி'' (தென்காசி)**

**பி. எஸ். சரோஜாவின் விலாஸம் என்ன? கடிதம் எழுதினுல் பதில் எழுதும் நல்ல குணம் அவரிடம் உண்டா? வாழ்க்கை வர்ணனையை எப்பொழுது வெளியிடுவீர்கள்?**

வர்ணனை முன்பே வெளியாகிவிட்டது. கடிதம் எழுதிப் போடும். 'வேண்டியவர்'களிடம் கேட்டு, அவர்கள் சம்மதம் தெரிவித்தால் அவர் பதில் எழுதினுலும் எழுதக்கூடும். விலாஸம்: 23 வெங்கடநாராயண ரோடு, தி. நகர் சென்னை-17.

**எஸ். வளையாபதி (செருவாமணி)**

**அறிஞர்கள், கலைஞர்கள், இவர்களெல்லாம் கதை, வசனம் எழுதுகிருர்களே? எல்லாம் சொந்தக் கதைகளா? சொந்த வசனங்களா?**

எந்த ஒரு எழுத்தில் ஆரம்பிக்கிறீரோ அதே எழுத்தில் ஐந்தாறு நிமிஷம் பேசக்கூடிய வகையில்—அர்த்தம் அனர்த்தமாயிருந்தாலும் பரவாயில்லை!—வசனம் எழுதக் கற்றுக்கொண்டால் நீர் சினிமா வசனகர்த்தா ஆகிவிடலாம். ஹிந்தி, ஆங்கிலக் கதைகள் இருக்கவே இருக்கின்றன. இல்லையென்ருல் பழைய புராணக் கதைகளையே சமூகக் கதைகளாக மாற்றினுல் தீர்ந்தது!

**சி. மாணிக்கம் (பத்தனை)**

**''நாம் இருவர்'' படத்தில் ''காந்தி மஹான்'', ''கருணுமூர்த்தி காந்தி மஹாத்மா'' என்ற பாட்டுகளைப் பாடியவர் யார்?**

இவை எம். எஸ். ராஜேஸ்வரியால் பாடப்பட்டவை.

**ஆர். கிருஷ்ணசாமி (மண்டியா)**

**இந்தியாவில் தயாராகும் வர்ணப் படங்கள் ஷூட்டிங் நடக்கும் போதே வர்ணப் படமாகத் தயாரிக்கப் படுகின்றனவா? அல்லது ஷூட்டிங் ஆனபின் வர்ணப் படமாக ஆக்கப்படுகின்றனவா?**

வர்ணப் படமாகத் தயாரிப்பதற்கு ஏராளமான செலவாகும். மேலும், வர்ணப் படத்தைக் கண்டுபிடித்தவர்கள் அதன் ரகஸியத்தைத் தங்கள் உரிமையாகவே வைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆதலால், ஹாலிவுட்டில்கூட வர்ணப்படங்கள், ஒரு நூதனமுறையில் முதலில் தயாரிக்கப்பட்டு, பிறகே வர்ணப் படங்களாக்கப்படுகின்றன.

**ஸி. நூர்முகம்மது (பொள்ளாச்சி)**

**சுமார் 15 வருஷங்களுக்கு முன் "கம்பர்" என்ற பெயரில் ஒரு படம் வெளியாகி யிருக்கிறதா? அதில் சிறுகளத்தூர் சாமா கம்பராக நடித்திருக்கிறாரா?**

"கம்பர்" என்ற படம் வெளி வந்திருக்கிறது. அதில் கம்பராக நடித்தவர் எஸ். வி. சுப்பய்யா பாகவதர். ஆனால், சாமா கம்பராக நடித்துப் புகழ் பெற்றது "அம்பிகாபதி" படத்தில்.

**மிஸஸ் சுப்ரமணியன் (மைலாப்பூர்)**

**சொந்தக் குரலில் பாடக் கூடியவர்களுக்குக் கூட ஏன் இரவல் குரல் பெறப்படுகிறது?**

'செலவழிக்கும் பணத்தைப் பலருக்குப்பகிர்ந்து கொடுக்க வேண்டும்' என்ற சோஷலிஸ மனப்பான்மை யொன்றும் நம் பட முதலாளிகளுக்குக் கிடையாது. "சில நடிக நடிகைகள் பாடும் திறமையைப் பெற்றிருக்கின்றனர். ஆனால், அவர்களது பாட்டு பிரபல பின்னணிப் பாடகிகள் அவ்வளவு பொதுஜன ஆதரவைப் பெறக்கூடியவையாய் இல்லை" என்று பட முதலாளிகள் கருதுகிறார்கள் போலும்.

**எழில் (தேவகோட்டை)**

**இறைவனைப்பற்றிய உணர்ச்சி ஏற்படுவது இன்ப நேரத்திலா? அல்லது துன்ப நேரத்திலா?**

இன்பம், துன்பம் இரண்டும் எல்லை மீறிவிடும்போது இறைவனைப்பற்றிய உணர்ச்சி நீங்கிவிடக்கூடும்.

* * *

**"யாமறிந்த மொழிகளிலே" என்று ஏன் பாரதியார் பாடினார்? "யான் அறிந்த மொழிகளிலே" என்று தானே பாடியிருக்க வேண்டும்?**

அரசர்கள், பத்திரிகாசிரியர்கள், கவிஞர்கள் ஆகியோருக்கு பன்மை நிலையில் பேசும் உரிமை உண்டு. மேலும், பாரதியார் இந்த அபிப்பிராயத்தை தம் அபிப்பிராயமாக மட்டும் வெளியிடாமல், 'தமிழன் ஒவ்வொருவனுடைய அபிப்பிராயமும் இது' என்பதை வற்புறுத்திக் கூறுவதற்காகவும் இவ்வாறு எழுதியிருக்கக்கூடும்.

**ஈயானஸ் பிரிமுகே (பாண்டிச்சேரி)**

**ஜெமினியின் "கட்ட பொம்மன்" படத்தில் யார் யார் நடிக்கிறார்கள்?**

இன்னும் நடிக, நடிகைகள் தேர்ந்தெடுக்கும் கட்டத்தை அவர்கள் அடையவில்லை.

**கே. பி. திம்மு ரெட்டியார் (செம்ம புதூர்)**

**அசோகா புரடக்ஷன்ஸாரின் "பத்மினி" படம் தயாரித்து முடிந்துவிட்டதா?**

அநேகமாய் முடிந்துவிட்டதாக அறிகிறேன்.

**வி. எஸ். மணி (விஷ்ணுபுரம்)**

**நாகேஸ்வர ராவ், நம்பியார், முக்கமாலா இம் மூவரில் கத்திச் சண்டை யிடுவதில் சிறந்தவர் யார்?**

பேனா முனையில் சந்தேகங்களைத் தீர்ப்பதிலே தேர்ந்தவன் நான். ஆனால்,

மாதர் விஷயம் "முடியுமென்றால் படியாது : படியுமென்றால் முடியாது" என்பதை ஜெமினி கணேசன் பாட்டின்மூலம் விளக்குகிறார் "மிஸ்ஸி அம்மா" தமிழ்ப் படத்தில்.

''அடடா, என்ன அருமையான பாட்டு! இன்றைக்கு எனக்கு பெரிய வேட்டை தான்'' என்கிறார் '' மிஸ்ஸி அம்மா''வில் தெருப் பாடகராய் நடிக்கும் சாரங்கபாணி.

---

அடேயப்பா, கத்தி முனையை நினைத்தாலே, பயமா யிருக்கிறது!

**டி. தேவராஜன் (நெல்லிக்குப்பம்)**

''சொர்க்க வாசல்'', ''ஔவையார்'' இவ்விரண்டிலும் எது சிறந்த படம்? எது பொது மக்களின் அதிக ஆதரவைப் பெற்ற படம்?

சந்தேக மன்னயில ''ஔவையார்'' படம் தான்.

**நா. உஷா தேவி (பெங்களூர்)**

சாவித்திரியின் விலாஸத்தைத் தெரிவிக்கவும்.

ஆற்காடு முதலியார் தெரு, தியாகராய நகர், சென்னை-17.

**ஆர். காஜி (கொழும்பு)**

சிவாஜி கணேசன் ஒரு ஸ்டுடியோ கட்டியிருப்பதாகக் கேள்விப் படுகிறேன். இது உண்மைதானா ?

'' கருப்பு அரிசி காக்காய் ஆயிற்று '' என்ற பழமொழி கணேசன் விஷயத்தில் பூரணமாகப பலித்திருப்பது ஆச்சரியப்படத் தக்கதேயல்ல! அவர், 'ஒரு படக் கமபெனியை ஆரம்பிக்கலாமா' என்று வெறுமனே யோசித்தார். அது 'ஸ்டுடியோவை ஆரம்பித்திருக்கும்' அளவிற்கு வதந்தியாகி விட்டது!

**சிவசுப்ரமணியம்**
**(பெரியநாயக்கன்பாளையம்)**

டி. ஆர். ராஜகுமாரிக்கு இன்னும் விவாகம் ஆகாமல இருககும் மர்மம் என்ன ?

பெரும் பெயருடைய ஊரில் வசிக்கிறீர்; அப்பன், பிள்ளை, இருவருடைய பெயரையும் சேர்ந்தாற்போல் வைத்துக் கொண்டிருக்கிறீர்; இந்தச் சின்ன விஷயம் உமககுத் தெரியவில்லையா! '' கலியாணம் பணணிக்கொள்ள வேண்டியது அத்தியாவசம்'' என்று ராஜகுமாரிக்கு தோன்றாததே காரணம்.

**கே. ஞானம்பாள் (குண்டக்கல்)**

வயது 16 ஆன ஒரு பெண்மணி சினிமாவில் நடிக்க விரும்புகிறாள். பார்வைக்கு அவள் பானுமதிபோல இருப்பாள். அவள் சினிமாவில் சேருவதற்கு வழி சொல்லவும்.

ரயில் மார்க்கமாக சென்னையை அடைவதுதான் **சுலபமான வழி** என்று தோன்றுகிறது! பானுமதி போன்ற முக பாவம் இருந்தால் மட்டும் போதாது; அவரைப்போல திடீரென்று புகழ் பெருவதற்கான யோக பாவம் இருக்கிறதா என்பதை ஒன்றுக்கு ஒன்பது ஜோதிடர்களிடம் தெரிந்து கொண்டு பிறகு பிரயாணத்தைத் தொடங்கச் சொல்லுங்கள், அந்தப் பெண்மணியிடம். பூமியிலிருந்து தோண்டி எடுக்கப்படும் வைரம் எல்லாமே அரசர் முடியை அலங்கரிக்கும் பாக்கியத்தைப் பெறுவதில்லை என்பது ஞாபகமிருக்கட்டும்.

**எஸ். பாலசுப்ரமணியன்**
**(நரசிங்கன்பேட்டை)**

ஸ்ரீமதி..............................வாழ்க்கை வர்ணனையில் அவரது தந்தையின் பெயரைக் குறிப்பிட மறந்து விட்டீர்களே. இப்பொழுதாவது தெரிவியும்.

இது மாதிரி தர்ம சங்கடமான கேள்விகளைக் கேட்காமலிருப்பதற்கு நீர் இனியாவது தெரிந்து கொள்ள வேண்டும்! அந்த நடிகை சொல்லியிருந்தால், நானா எழுதாமல் விடுபவன்?

சமீப காலமாக சினிமா உலகில் சம்பந்தப்பட்டவர்கள் பற்றிய எந்தச் செய்தியுமே எனக்கு அத்தகைய ஒரு மகிழ்ச்சியை அளித்ததில்லை. எனக்கு மட்டும் என்ன? ஆயிரக்கணக்கான ரஸிகர்களுக்கும் அப்படித்தான். ஆம், முன்னணி நக்ஷத்திரம் சிவாஜி கணேசனைப் பற்றிய செய்தியைத்தான் சொல்லுகிறேன். சிவாஜி கணேசனைக் குறித்து எனக்கு வெகு நாட்களாகவே ஒரு குறை இருந்து வந்தது. 'இவ்வளவு ஒரு நல்ல நடிகர் ஒரு குறிப்பிட்ட கட்சியின் வலையில் சிக்கிக் கொண்டு தவிக்கிருரே' என்பதுதான் அந்தக் குறை. அப்பொழுதெல்லாம் என் மனம், "இவர் மட்டும் திரும்பிப் பார்த்து சரியான பாதையில் நடந்து கொண்டாராைல் எவ்வளவு மேலாக இருக்கலாம்' என்று அங்கலாய்க்கும். சிவாஜி கணேசனின் திருப்பதி விஜயம் என்னைத் திருப்திப்படுத்தி விட்டது. மனப்பூர்வமாக, "சபாஷ் சிவாஜி!" எனப் பாராட்டி என் மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

* * *

கணேசன் நெற்றியிலே பட்டை பட்டையாக விபூதியும், கலையாகக் குங்குமமும் துலங்க மெய்ம் மறந்து ஏழுமலையானை வணங்கியிருக்கிருர். அத்துடன் நிற்காமல் தமக்கு தெய்வ நம்பிக்கை உண்டு என்றும், தாம் ஒரு ஆஸ்திகன் என்றும் பட்டவர்த்தனமாகப் பத்திரிகை நிருபர்களிடம் கூறியிருக்கிருர். சமயம் கிடைக்கும் போதெல்லாம் குடும்பத்துடன் திருப்பதிக்குப் போகத் தீர்மானித்திருப்பதாகவும் சொல்லியிருக்கிருர். கணேசன், இப்பொழுதுள்ள மன நிலையில், கொஞ்ச காலம் படவுலகை மறந்து க்ஷேத்திராடனம் கிளம்பிப் போனுல்கூட நான் ஆச்சரியப்பட மாட்டேன். ஆவடி காங்கிரஸ் விழாவில் தூய கதராடையில் கலந்து கொண்டார். தாம்பல வருஷங்களாகவே கதர் அணிவதாகக் கூறியிருக்கிருர். இவை யெல்லாம் ரஸிகர்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும்.

சிவாஜி கணேசனின் இந்த திடீர்த் தீர்மானம் பற்றி, குறிப்பிட்ட சிலர் அவர் அசட்டுத்தனமாக நடந்து கொண்டு விட்டதாக நினைக்கக் கூடும். பாவம், அவர்களுக்கு இது பேரிடியாக இருந்திருக்கும். "சிவாஜி எங்கள் கட்சி" என்று வீண் தம்பட்டம் அடித்துக் கொண்டவர்களுக்கு இந்த 'ஷாக்' பெருத்த ஏமாற்றத்தையும் அதன் விளைவாகக் கடும் கோபத்தையும் ஏற்படுத்தியிருக்கலாம். இதனுல் சிவாஜி கணேசன் சிலரது அதிருப்திக்கு ஆளாவதுடன் சிலரது ஆதரவையும் இழக்க நேரிடலாம். ஆனுல், அவர் அதற்காகக் கலங்கத் தேவையேயில்லை. ஏனெனில், அப்படிப்பட்டவர்களின் தொகையைப் போன்று பன்மடங்கு அதிகமானவர்களின் பாராட்டுதல்களுக்கு அவர் இப்போது ஆளாகியிருக்கிருர் தமது மனமாறுதல் மூலம்-என்பதற்காக அவர் மிகுந்த சந்தோஷம் அடைய வேண்டும்.

* * *

ஒரு நடிகரோ, வசன-கர்த்தாவோ குறிப்பிட்ட எந்த ஒரு கட்சியில் பற்றுதல் உள்ளவராக இருந்தாலும் எனக்கு அக்கறையில்லை. அதை யாரும் தடுக்க முடியாது. அது அவர்கள் பிறப்பு உரிமை. ஆனுல், அவர்கள் தங்களுக்கு அக்கட்சி மீதுள்ள பற்றுதலைக் கலை உலகில் புகுத்தி, அல்லது அதைப் புகுத்தி அதன் மூலம் பெயரும் பொருளும் திரட்ட அதை ஒரு யுக்தியாகக் கையாண்டு கலையின் பெயருக்கு இழுக்கு ஏற்படுத்துவதுதான் எனக்குப் பிடிக்கவில்லை. தினசரி ஆயிரம் கூட்டங்களில் பேசட்டும்; எத்தனை மஹாநாடுகளில் வேண்டுமானுலும் கலந்து கொள்ளட்டும். ஆனுல், நாடகம் சினிமா இவைகளில் நுழைந்து குட்டை குழப்ப வேண்டாம் என்று தான் அவர்களை வேண்டிக் கொள்கிறேன்.

இந்தக் கடவுளை நினைத்தால் எனக்கு "ஐயோ பாவம்" என்றுதான் பச்சாத்தாபம் ஏற்படுகிறது. காரணம், அவர் இந்த சினிமா உலகில் படும் பாடுதான். முன்னெல்லாம் தங்கள் படம் வெற்றிபெற கடவுள்களைக் 'கதாநாயகர்களாகக் கொண்ட (அதாவது-புராணக் கதைகள்) கதைகளையே படமாக்கி வந்தார்கள். ஆனால், இப்பொழுதும் அதே கடவுளைத் தங்கள் படங்களில் 'வாங்கு வாங்கு என்று வாங்கி' படத்தை வெற்றிப் படமாக்க வழி பார்க்கிறார்கள். அந்த வேலை பலிக்காது என்பதைப் பல படங்கள் அவர்களுக்குப் பாடம் கற்பித்தும் அவர்கள் விடுவதாக இல்லை. அவர்களது தலைவரே சமீபத்தில் மலேயாவில், "கடவுள் இல்லை என்று சொன்னது யார்? அப்படிச் சொல்கிறவன் தமிழனே இல்லை" என்று முழக்கம் செய்திருக்கிறார். மற்றொருவரோ, "சிவன் தான் எங்கள் கடவுள்; ராமன் அல்ல" என்று கர்ஜித்திருக்கிறார். அவர்களே இப்படிக் கடவுள் மீது மனம் இரங்கி, இறங்கி வரும் போது கட்சியிலுள்ள சிலர் இன்னும் திரையுலகில் கடவுள் நிந்தனையை நிறுத்தாமல் செய்து வருகின்றனர் என்பதை நினைத்தால் வருத்தப்படாமல் என்ன செய்வது?

* * *

இப்படியாகக் 'கட்சி கட்டிக்கொண்டு' கிளம்பியிருக்கிறார்கள் சிலர். அவர்களில் ஒருவரான. "கடவுள் பெயரைச் சொல்லி சமூகத்தை ஏமாற்றுகிறார்களே" என்று 'ரத்தக் கண்ணீர்'—அது முதலைக் கண்ணீர்தான்—வடிக்கும் நடிகரான ஒரு ஆசாமியைப் பற்றி இங்கே சொல்லாமல் மேலே போக என் மனம் இடம் தரவில்லை. 'சமூகத்தைச் சீர்திருத்த' என்ற போர்வையில் இவர் நாடகம் ஆடுவதெல்லாம் சுய

தமிழ்நாடு ஏஜண்டுகள் :—சீதாராமா ஜெனரல் ஸ்டோர்ஸ், மேலகோபுர வாசல், மதுரை

நலத்திற்காகத்தான்; பணம் சம்பாதித்துக் குவிக்கத்தான் என்பது அவரது கடந்துபோன வாழ்க்கைச் சரிதையின் ஏடுகளைப் புரட்டிப் பார்த்தால் வெட்ட வெளிச்சமாகத் தெரியும். அவர் அதை ஒரு நாளும் திரும்பிப் பார்த்துத் திருந்தப் போவதில்லை. நான் திரும்பிப் பார்த்து நேயர்களுக்குச் சொல்லாமல் விடப் போவதுமில்லை.

* * *

ஒரு நகரில் போய் தம் கோஷ்டியுடன் நாடகம் நடத்துவார் இவர். நாடகத்திற்கு சுமாரான வசூலும் இருக்கும். ஊரிலுள்ள மளிகைக்கடை முதல் ஜவுளிக் கடைவரை ஏமாந்த இடங்களி லெல்லாம் கொடுத்த மட்டும் கடன் வாங்குவார். திடீரென்று ஒரு நாள், கையில் சேர்ந்ததை சுருட்டிக் கொண்டு, அந்தர்த்தானமாகி விடுவார். கடன் கொடுத்தவர்களுக்கு மிஞ்சுவதெல்லாம் தியேட்டரில் அவர் விட்டுப் போயிருக்கும்-ஒட்டுப்போட்ட திரைச் சீலைதான். சில சமயங்களில் பெரிய மனது பண்ணி சக நடிகர் நடிகைகளையும் அழைத்துக் கொண்டு மறைவார்; பல சமயங்களில் அவர்களையும் நடுத் தெருவில் நிறுத்திவிட்டுத் தான் போவார். இப்படியாக எவ்வளவோ நகரங்களில் பன்முறையும் கண்டிராக்டர்களிடமும் பொது மக்களிடமும் 'லக்ஷ்மிகாநதன்' வேலையைக் காண்பித்துத் திருவிளையாடல்களைப் புரிந்திருக்கிறார் அவர். இதெல்லாம் அவரது பூர்வாசிரமத்தில்!

* * *

ஒரு சமயம் இவர் தஞ்சையில் செய்த ஒரு வேலையையும் சொல்லி விடுகிறேன். இன்று பிரபலமாகி விட்டிருக்கும் ஒரு சினிமா வசனகர்த்தா அன்று இந்த 'லக்ஷ்மிகாந்தன்' நடிகரின் தயவை நாடவேண்டி யிருந்தது. அவருக்கு ஒரு நாடகம் எழுதிக் கொடுத்தார் வசன கர்த்தா. அந்த நாடகத்திலே வசன கர்த்தாவும் ஒரு சிறு பாகத்தில் நடிக்க, தஞ்சையில் அந்த நாடக அரங்கேற்றம் நடைபெற்றது. நாடகத்திற்குப் பெரியார் ஒருவரும் தலைமை வகித்தார். மேற்படி நடிகரும் சரி, தலைமை வகித்தவரும் சரி, வசன கர்த்தாவை வானளாவப் புகழ்ந்தனர். நடிகர் புகழ்ந்துவிட்டு, "நாடக ஆசிரியருக்கு இந்த நாடகத்திற்காக எவ்வளவு கொடுத்தாலும் தகும். ஒரு **சில நூறு ரூபாய்களை** அளிக்கிறேன்" என்று கூறி, பணம் அடங்கிய ஒரு பேழையை நாடகாசிரியரிடம் அளித்தார். பாவம், ஆவலோடு பேழையைத் திறந்து பார்த்த நாடகாசிரியரின் முகம் சிறுத்து விட்டது. அதனுள் இருந்தது ஒரே ஒரு பத்து ரூபாய் நோட்டுதான். "'ஆட்டைக் கடிச்சு மாட்டைக் கடிச்சு' என்ற கதையாக நம்மிடமே அவர் தம் வேலையைக் காட்டி விட்டாரே" என்று பொருமுவதைத் தவிர, வேறு எதுவும் செய்ய முடியாது திண்டாடினார் வசன கர்த்தா. இப்படிப்பட்ட 'குணதிசயங்கள்' கொண்ட நடிகர்தான் இன்று உலகத்தைக் கலை உலகத்தின் மூலம் சீர்திருத்துவதெனப் புறப்பட்டிருக்கிறார்!


இனாம்! இனாம்!! இனாம்!!!



எமது நெ.501 கருப்பு மயிர் தைலத்தை (ரிஜிஸ்டர்டு) உபயோகிப்பதன்மூலம் எல்லாவிதமான மயிரும் மைக் கருப்பாக மாறி, பின்னர் எப்பொழுதுமே கருப்பாக வளரும். இது மயிர்கள் உதிர்ந்து போவதைத் தடுத்து, மிகவும் நீண்டதாகவும், பிரகாசமாகவும், சுருண்டதாகவும் வளரச் செய்கிறது. புட்டி ஒன்றின் விலை ரூ. 1-15-0. 3 புட்டிகள் (பூரா முறை) ரூ. 5-0-0.

இந்த அதிசயத் தைலத்தை எங்கும் பரப்ப, ஒவ்வொரு புட்டியுடனும் அழகிய பான்ஸி ரிஸ்ட் வாட்சும், நியூகோல்டு மோதிரமும் அளிக்க நாங்கள் முடிவு செய்திருக்கிறோம். வாட்சின் அழகும், உறுதியும் 15 வருஷங்களுக்கு உத்தரவாதம். 3 புட்டிகள் வாங்குவோருக்கு 6 பான்ஸி ரிஸ்ட்வாட்சுகளும், 6 நியூ கோல்டு மோதிரங்களும் இனாம். அங்கீகரிக்காமல் போனால் பணம் வாபஸ்.

ஆங்கிலத்தில் கடிதம் எழுதவும் :

**AMRIT PHARMACY (G.M). Nakodar(Pb.)**

# "அம்பி ஷூட்டிங் பார்க்கிறன்"

'சினிமா'—இந்த மூன்று எழுத்துக்கடங்கிய வார்த்தைக்கு உள்ள மோகன சக்தி வேறு எந்த வார்த்தைக்கும் இருக்காது என்று சொல்லலாம் போலிருக்கிறது. சினிமா உலகத்துடன் தொடர்பு கொண்டுள்ள எல்லோருக்கும், அந்த மூன்றெழுத்துக்கு உள்ள மோகன சக்தி—காந்த சக்தியின் சிறிது பங்கு சேர்ந்து விடுகிறது. சினிமா நக்ஷத்திரங்களுக்கு உள்ள வசீகரண சக்தி வாசகர்கள் அறிந்ததே. நக்ஷத்திரங்களைக் காணவும், அவர்களுடன் பேசவும், பழகவும், அவர்களைத் தெரிந்து வைத்துக் கொள்ளவும் எண்ணில் அடங்கா நபர்கள் ஆவலுள்ளவர்களாயிருக்கிறார்கள்.

இதுபோலவே, சினிமா உலகுடன் தொடர்பு கொண்டவருக்கும், கொஞ்சம் வசீகர சக்தி இருக்கத்தான் செய்கிறது. ஒரு சினிமாப் பத்திரிகை ஆசிரியராகவோ, அல்லது சினிமாக் கதாசிரியராகவோ, மற்றும் எந்தவிதத் தொழில் நுட்பக் கலைஞர்களாயிருந்தாலும் சரி, அவர்களுக்கு "அன்பு மிகுந்த வேதனை"கள் பல நேரிடுவது உண்டு. காரணம் அவர்கள் மூலமாக சினிமாவைப் பற்றிய பல விஷயங்களைத் தெரிந்து கொள்ள வேண்டுமென்ற ஆவல் ரஸிகர்களுக்கு அதிகரிப்பதனால் தான். சினிமா ஸ்டுடியோ எப்படி இருக்கும்? தேவேந்திர சபை எப்படி சிருஷ்டிக்கப் பட்டிருக்கும்? நக்ஷத்திரங்கள் எப்படி இருப்பார்கள்? டைரெக்டர் என்றால் கொம்பு முளைத்தவரா? பயங்கரமான பேர்வழியா? பாடலையும் பேச்சையும் எப்படி எடுக்கிறார்கள்? நாரதர் எப்படி அந்தரத்தில், ஆகாயத்தில் உலவி வருகிறார்? என்பதைப் போன்ற அனேக விஷயங்களைக் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற ஆவல் அனேகருக்கு உண்டு. இந்த மாதிரிப் பேர்வழிகளுக்கு பதில் சொல்லி, அவர்களைச் சீக்கிரத்தில் சமாதானம் செய்வது என்பது முடியாத காரியம். இதை எல்லாம் எதற்கு எழுதுகிறேன் என்றால், என் அடுத்த வீட்டு அம்பிப் பயலைப் பற்றிச் சொல்ல வேண்டியிருப்பதனால்! அடுத்த வீட்டு அம்பியைப்பற்றி நீங்கள் சில விஷயங்கள் தெரிந்து கொள்ளத்தான் வேண்டும். சுமார் பதினெரு வயதுள்ள பையன் அவன். பள்ளிக்கூடம் போகும் நேரம் தவிர, தகப்பனருக்குப் பயந்து படிப்பதாக பாவனை செய்யும் நேரம் தவிர, மற்றைய நேரங்களில் அவனது சிந்தனைகள் எல்லாம் சினிமா உலகைப் பற்றித்தான் என்றால் நீங்கள் சரி என்று ஆமோதிப்பீர்கள் என்று எண்ணுகிறேன்.

தினசரிப் பத்திரிகைகளில் வர்ண விளம்பரங்களைப் பார்த்து, அது தரும் தகவல்களைத், தனது ஆருயிர்த் தோழர்களுக்குச் சொல்லாமல் இருக்கமாட்டான். தெருக்களில் தள்ளு வண்டிகளில் கொண்டு செல்லும் தியேட்டர் விளம்பரத்தைப் பார்த்து விமர்சிக்காமல் இருக்க மாட்டான். அத்தியேட்டரில் எத்தனை நாளைக்குப் பிறகு அந்த 'அபூர்வ சிந்தாமணி' மாறும் என்பது அவனுக்குத் தெரியாத ரகசியமல்ல.

இவை மட்டுமல்ல. கோடம்பாக்கத்து ரயில் கேட்டில், ஞாயிற்றுக்கிழமையன்று, அவன் பார்த்த நக்ஷத்திர முக தரிசனங்களின் பட்டியல் வேறு, அவன் தனது சகாக்களுக்குத் தரும் விருந்துச் செய்தி.

இப்படிப்பட்ட "அவதார புருஷனை" அம்பிப் பயல் நான் குடியிருக்கும் வீட்டுக்குப் பக்கத்தில் இருப்பானென்று தெரிந்திருந்தால், நான் வேறு இடமாகப் பார்த்துக் கொண்டிருப்பேன். ஆரம்ப காலத்தில், அவன் என்னுடன் 'பழகிக்'க் கொள்ள ஆவல் உள்ளவனைக் காணப்பட்டாலும், நான் அவனை 'ஒதுக்கி'யே வைத்திருந்தேன். அதாவது என்னை நானே தனியனுக்கிக் கொள்ள முயன்றேன். நான் எந்த வித உத்தியோகத்தில் இருக்கிறேன்

என்று அம்பிப் பயல் வெகு சீக்கிரம் தெரிந்து கொண்டு விட்டான். காரணம் இரண்டொரு நடிக நண்பர்கள் வீட்டுக்கு வந்ததைப் பார்த்ததிலிருந்தும் என் வீட்டாரிடம், வெகு லாவகமாகக் கேட்டுத் தெரிந்து கொண்டதிலிருந்தும்தான். இந்த உண்மையை, நான் வெகு காலத்துக்குப் பிறகு தான் தெரிந்து கொண்டேன்.

நாளடைவில் 'அம்பி'யை நானே தேட வேண்டிய நிர்ப்பந்தம் நேரிட்டது. காரணம், நண்பர்கள் வந்தால் அவர்களை 'உபசரிக்க' எதையாவது வாங்கிவர கடைக்கு ஆள் அனுப்ப வேண்டுமல்லவா? அதற்காக 'சேவை' செய்ய இந்த அம்பி சுறுசுறுப்பாக முன் வந்தான். வெகு சீக்கிரத்தில் காரியங்களைச் செய்து கொண்டு வருவதில் சமர்த்தனாக இருந்தான். காரணம், என்னைப் பார்க்க வருபவர்கள் சினிமா உலகைச் சேர்ந்தவர்களாக இருந்ததனால்தான்.

வந்தவர்கள், என்னுடன் பேசிக் கொண்டிருக்கும் பாணியிலே, அவன் அவர்களை ஓரளவு தெரிந்து வைத்துக் கொண்டு விடுவான். இல்லை என்றால் அவர்கள் சென்ற பிறகு என்னைக் கேட்டுத் தெரிந்து கொள்ளுவான்.

இவ்வளவு 'உபகாரி'யாயிருந்த அம்பி, என்னை ஓரளவு தொந்தரவு செய்ய ஆரம்பித்தான். அதாவது அவனை "ஸ்டுடியோ"வுக்கு அழைத்துக் கொண்டு போய் "படப் பிடிப்பை"க் காட்ட வேண்டுமென்பதுதான் அவன் வேண்டுகோள். 'சரி' என்று ஒப்புக்கொண்டேன். ஆனால், அவனைக் கூட்டிக்கொண்டு போய் வெகு நாள் வரை ஸ்டுடியோவைக் காட்டவில்லை. அவனும் விடாப்பிடியாக இருந்தான். ஏதோ வேலை நிமித்தம் செல்லுகிறோம் வருகிறோம். நிம்மதியாக இருந்து 'ஸ்டுடியோ பற்றி' அவனுக்கு விளக்கம் கூறப் பொறுமையில்லாதிருந்தது எனக்கு.

ஸ்டுடியோவிலிருந்தோ, அல்லது படக் கம்பெனியிலிருந்தோ "வான்" அல்லது சிறிய கார் வருகிறது என்று வைத்துக் கொள்ளுங்கள். வண்டியிலிருக்கும் டிரைவர் 'ஹார்ன்' கொடுப்பதற்கு முன் அம்பியின் 'ஸார்' என்ற 'ஹார்ன்' தான் என்னைத் 'தயாராகும் படி' தூண்டும். ஆனால் அதே சமயத்தில், அம்பியின் ஆவலை இந்தத் தடவையும் தடை செய்யப் போகிறோம் என்ற கவலை உண்டாகும். வண்டி வந்திருக்கிறதைத் தெரிவிப்பதில் அவனுக்கு அளவுகடந்த சந்தோஷம். இதற்கு முக்கிய காரணம் இல்லாமலில்லை "இந்தத் தடவையாவது வா என்று கூப்பிட மாட்டாரா?" என்ற எண்ணம்தான். நான் என்ன செய்ய? மற்றவர்களுக்கு ஆவலுள்ளதாகத் தெரிகிற விஷயம் நமக்கு வேலை என்ற அளவில் இருக்கிறது. சர்க்கஸ் வித்தையைப் பார்ப்பதில் மக்களுக்கு சந்தோஷம்! ஆனால் சர்க்கஸ் தொழிலாளிக்கு அது ஒரு வேலை. இதுபோலத்தான். ஆனால் கலை என்ற போர்வையிலே-பெயரிலே-அவை பரிணமிக்கின்றன.

இப்படிப் பலப்பல நாட்கள் கடந்து சென்றன. அம்பிப் பயலின் ஆவல் தணிவதாக இல்லை. ஒரு நாள் சாயந்தரம், வாசல் திண்ணையில் உட்கார்ந்து கொண்டிருந்தேன். அம்பி அருகில் வந்து நின்றான். அவனை ஒருதரம் உற்றுப் பார்த்தேன். அவன் முகத்தில்


ஸ்த்ரீ ரகஸ்யங்கள்

(ஆண்கள் அறியாதது)

கொக் சாஸ்திரம்-வசீகரணம், ஆண்-பெண் கலர் போட்டோக்கள். இதற்கு முன் நீங்கள் படித்திராத உபயோககரமான கட்டுரைகள் அடங்கியது. இதன் விலை: ரூ. 3. தபால் செலவு ரூ. 1.

படுக்கை அறைப் படங்கள்

நீங்கள் பெண்களைக் கவர்ச்சிகரமான நிலையிலே அழகிய முறையிலே காண விரும்பினால் ஐம்பது படங்கள் உள்ள ஒரு செட் வாங்குங்கள். விலை ரூ. 5. தபால் செலவு ரூ. 1. இரண்டும் சேர்த்து வாங்கினால் ரூ. 8.

H. H. STORES (N. U. N.)

Post Box 51 - - MEERUT

பலப்பல கேள்விக் குறிகள் தோன்றி மறைவதைக் கண்டேன். அவன் நின்று கொண்டிருந்தான். அவனை உட்காரச் சொன்னேன். சட்டையை இழுத்துவிட்டுக்கொண்டு கீழே உட்கார்ந்தான். "என்ன கேட்கப் போகிருய்?" என்றேன். "ஸார்" என்று இழுத்தவாறே பீடிகை போட்டான். ஒருவாறு புரிந்துகொண்டேன், "என்ன ஸ்டுடியோவுக்குத்தானே?" என்றேன் சிரித்துக்கொண்டே. "அது தவிர, வேறே சில சமாசாரங்கள்" என்ருன்.

எனக்குக் கொஞ்சம் திக்கென்றது. காரணம் சில ஹோட்டல் ஸர்வர்கள், நாம் சினிமா உலகுடன் சேர்ந்தவன் என்று தெரிந்து கொண்டு, டிபன் சாப்பிட உட்கார்ந்தவுடன் "நமக்கு நடிக்க ஒரு சான்ஸ் கொடுங்க ஸார்" என்று பீடிகை போடுவார்களே, அது மாதிரி இவனும் ஆரம்பித்து விடடாளுே என்ற பயம் உண்டாகிவிட்டது. ஆனல் அவன், "படம் எப்படி ஸார் பிடிக்கிருங்க" என்று கேட்டதும், கொஞ்சம் தைரியம் பிறந்தது.

"அதுவா. ரொம்ப சுலபமாயிற்றே! பணத்தை செலவழிக்கிருங்க-படம் பிடிக்கிருங்க!" என்றேன். அவன் சிரித்துக் கொண்டே, "வாஸ்தவம்தான் ஸார், 'பணமும் தீர்ந்து போச்சு, படமும் தீர்ந்து போச்சு' ன்னுதான் படம் பிடிக்கிருங்க" என்ருன். பிறகு மீண்டும் என்னை ஆவல் மிக்கவனைப் பார்த்துக்கொண்டே "அது இல்லை ஸார், கொஞ்சம் விவரமா, புரியும்படி சொல்லுங்க ஸார்" என்ருன்.

அவன் ஆவலை மேலும் சோதிக்க விரும்பாதவனுகி, சொல்ல ஆரம்பித்தேன். "இதோ பாரு அம்பி! படம் பிடிக்க வேண்டும் என்று நினைத்து, இந்தத் தொழிலுக்கு வருகிருரே, அவர் தான் முதலாளி. அவர் எந்த விதமான படத்தைத் தயாரிக்கத் தீர்மானித்திருக்கிருர் என்பதை அவர் நிச்சயிக்க வேண்டும்."

அம்பி இடைமறித்து, "எந்த விதம்னு, சோஷியல், புராணம், ஸ்டண்டு, இந்த ரகம் தானே ஸார்" என்ருன்.

"ஆமாம். இந்த ரகத்தில் எந்த விதம் என்று தீர்மானிக்க வேண்டும். பிறகு, ஒரு சினிமாக் கதாசிரியரைப் பார்த்து, அவரை ஒப்பந்தம் பேசி, அவரைக் கொண்டு கதை வசனத்தை எழுதச் செய்ய வேண்டும்" என்று சற்று நிறுத்தினேன். உற்சாகமடைந்த அம்பி, "ஆமாம் ஸார் டயலாக் நல்லா இருந்தாத்தான் ஸார் படம் நல்லா ஓடும், அப்ளாஸ் விழும்" என்ருன். அவன் சொல்லியதை ஆமோதித்தேன். "அப்புறம், டைரெக்டரை ஒப்பந்தம் செய்யணும், நடிக நடிகைகளை காண்டிராக்ட் செய்யணும், டிரஸ் தைக்கணும், சண்டை போடணும்-படம் பிடிக்கணும். படம் முடிஞ்சு போயிடும். அப்புறம் ரிலீஸ்

'துப்பறியும் சிங்கம்' தங்கவேலுவுக்கு ஏதோ புது ஐடியாத் தோன்றி யிருக்கிருப் போலிருக்கிறது!—" மிஸ்ஸி யம்மா "வில்.

இது தானே நீங்க சொல்லப் போறது" என்று மடமட வென அம்பியே சரமாரியாகப் பொழிந்து தள்ளி விட்டான். 'பலே ஆளாக இருக்கிறனே' என்று எனக்குள் நானே எண்ணிக் கொண்டேன்.

"ஆமாம், அம்பி, இதுதான் படம் பிடிக்கிற கதை" என்றேன்.

"இதை எல்லாம் தான் அடிக்கடி சினிமாப் பத்திரிகைகளிலே, படிக்கிறேனே ஸார்-இதைப் பத்தி நான் கேக்கலே. பணம் இருக்கிற முதலாளி, நல்ல கதையாத் தேர்ந்தெடுத்து, வசனம் எழுதி, ஸ்டார்ஸ் எல்லாம் ஒப்பந்தம் ஆகி, டைரெக்டர் இன்னார்னு நிச்சயம் ஆனபிறகு, ஸ்டுடியோவுக்குப் போகப் போறுங்க. அங்கே போறதிலேயிருந்து படம் முடிஞ்சு நாம் பாக்கற வரைக்கும் என்ன என்ன எப்படி நடக்கிறதுன்னு விவரமாச் சொல்லணும். இது தான் நான் கேக்கறது" என்று மூச்சுவிடாமல் கூறி முடித்தான் அம்பி.

"நிச்சயமாக அம்பி பலே ஆள்" தான் என்று முடிவு செய்து கொண்டேன். அவனுடைய சாதுர்யத்தை மெச்சினேன. குழந்தைப் பருவத்தில் ஆசைகள் எப்படி உருவாகி, வருங்கால வாழ்க்கைப் பாதைக்கு அஸ்திவாரம் போடுகின்றன என்பது புலனாகியது. அம்பியின் ஆவலைப் போல் எண்ணற்ற நேயர்களின் ஆவல் எப்படி இருக்கக்கூடும் என்று உணர்ந்தேன். அம்பியின் சாமர்த்தியம் வெளியாகியது. 'ஸ்டுடியோவுக்கு அழைத்துப் போங்கள்' என்ற வழக்கமான பல்லவிக்கு பதில் இப்படி 'அனுபல்லவி' அமைத்திருக்கிறன் அம்பி. வேறு ஒன்றுமல்ல. அம்பியின் எண்ணத்தைப் புரிந்துகொண்டேன். அவனை வேறு ஒரு சமயம், கண்டிப்பாக அழைத்துப் போவதாக ஒப்புக் கொண்டேன். இம்மாதிரியாக, நான் அடிக்கடி சொன்ன பதில், அவனுக்குப் புதிதல்ல. அவன் என்னை ஒரு தரம் ஏறிட்டுப் பார்த்தான். "இல்லை. அம்பி, கண்டிப்பாக நானே அழைத்துப் போகிறேன்" என்று அவனுக்கு சமாதானம் சொன்னேன். சரி என ஒப்புக்கொண்டதற்கு அடையாளமாகத் தலையை ஆட்டினன். பிறகு என்னைப் பார்த்து "ஸார்! ஸ்டுடியோ என்றால் என்ன? எத்தனை பங்களா, எத்தனை அரண்மனை இருக்கும்" என்றான்.

"இல்லை அம்பி, ஸ்டுடியோ என்றால் படம் பிடிக்கப்படும் நிலையம் என்று சொல்லலாம்: தியேட்டர்கள்போல கட்டப்பட்டிருக்கும். இதனுள்ளே தான் மாடமாளிகைகள், கூடகோபுரங்கள், அரண்மனைகள், ஏழைகள் வாழும் குடிசைகள், மேகமண்டலங்கள் முதலியவை சிருஷ்டிக்கப்பட்டு வைக்கப்படும். வெளிச் சப்தம் உள்ளே புகாதவாறும், உள்ளே எழுப்பப்படும் சப்தம்,



"மிஸ்ஸியம்மா"வும், மாஸ்டர் ஐயாவும் சந்தோஷமாக இருப்பதைப் பார்த்து சந்தோஷிக்கிருர் ஜமீன்தார் ரங்க ராவ்,

எதிரொலிக்காத மாதிரியும் இது அமைக்கப்படும்'' என்றேன். அம்பிக்கு சிறிது சந்தேகம் உண்டாகியது என்பது அவன் முகத்தில் தெரிந்தது. "ஏன் ஸார், வெளிச் சப்தம் உள்ளே கேட்காத மாதிரிக் கட்டப்பட்டிருக்கும்னு சொன்னீங்களே! அடிக்கடி ஸைலன்ஸ்னு சொல்லி 'பெல்' அடிக்கிருங்களாமே, "ஏன்?'' என்று கேட்டான்.

"வாஸ்தவம் அம்பி, இதற்கு 'ஸவுண்ட் ப்ரூப் ஸ்டுடியோக்கள்'னு மேல் நாட்டிலே சொல்லுவார்கள். அது மாதிரி இங்கே இல்லே. கூடிய வரைக்கும் வெளிச் சப்தம் கேட்காத வாறு, அமைக்கப்பட்டிருக்கும். அதோடு, உள்ளே எழுப்பப்படும் சப்தம், எதிரொலிக்காமல் இருக்கறதுக்காக கோணிப் பைகளிலே தேங்காய் நார்களை வைத்துத் தைத்து, இலேசாகச் செய்து கொட்டகையின் மேற்பரப்பில் பரப்பி வைப்பார்கள். மற்றும் சுவர் ஓரங்களில் ப்ளைஉட், கம்பளி போன்றவைகளை உபயோகித்து, தொங்க விடுவதுண்டு. மற்றும் பல ஸ்டுடியோக்களில், இவை ஒன்றுமே இராது. கூடியவரைக்கும் வெளிச் சப்தம், படப் பிடிப்பைப் பாதிக்காத வகையில் பார்த்துக் கொள்வார்கள்'' என்றேன்.

அம்பி, மேலும் கேட்டான் "இது சரி ஸார், ஸ்டுடியோ என்றால் இதோட சரியா அரண்மனை, வீடு, எல்லாம்'' என்று ஞாபகப்படுத்தினன். "ஓ, அதுவா, விவரமாகக் கேளு அம்பி. கதை எழுதி, டைரெக்டர் திருப்திப்படி, மாற்றிய பின்னர், கதை நடக்கிற காலத்துக்குத் தகுந்தபடி அமைத்து படம் பிடிக்க, ஸ்டுடியோவுக்குப் போகிறார். ஸ்டுடியோ சொந்தக்காரரும் பட முதலாளியும் ஒப்பந்தம் செய்துகொள்ளுவார்கள். சொந்தக்காரர், படப் பிடிப்புக்கு ஒரு நாளைக்கு இவ்வளவு ரூபாய் என்றும், பாட்டு ரிகார்ட் செய்ய ஒரு நாளைக்கு இவ்வளவு ரூபாய் என்றும் பேசி, ஒரு தொகையை நிர்ணயித்துக் கொள்ளுவார்.'' "எவ்வளவு ரூபாய் இருக்கும்?'' என்று இடைமறித்துக் கேட்டான் அம்பி. "படப் பிடிப்புக்கு முன்பெல்லாம் ஒரு நாளைக்கு சுமார் எண்ணூறு ரூபாயாக இருந்தது. இப்பொழுது நானூறு ரூபாயிலிருந்து அறுநூறு ரூபாய் வரை, உசிதம் போல் கொடுக்கப்படுகிறது. ஒலிப்பதிவுக்கும் இம்மாதிரியே நானூறு ரூபாயிலிருந்து அறுநூறு வரை ஆகும். படத்துக்கு வேண்டிய, வீடு, முதலிய இடங்களை அமைப்பதற்கு "செட்டிங்'' என்று சொல்லப்படும். 'செட்டிங்'குக்கு பிரத்தியேக முறையில் செய்யவேண்டுமென்றால் அதற்கு இவ்வளவு என்று ஒரு தொகை நிர்ணயித்து ஒப்பந்தம் செய்து கொள்ளுவார்கள். படத்துக்கான, சம்பவங்கள் நடைபெறும் இடங்களை சிருஷ்டிக்க ஒருவர் நியமிக்கப்படுவார். அவர் பெயர் ஆர்ட் டைரெக்டர். சில சமயம் ஸ்டுடியோவிலே உள்ள ஆர்ட் டைரெக்டரையே நியமிப்பதுண்டு. இவருக்குக் கதை தெரிந்திருந்தால் நல்லது. அல்லது இவருக்கு, டைரெக்டர், கதைக்கு வேண்டிய இடம் இப்படி இப்படியாக இருக்கவேண்டும் என விளக்கவேண்டும். ஆர்ட் டைரெக்டர், டைரெக்டரின் போக்கைத்தெரிந்துகொண்டும், காமிரா லைட்டிங் என்று சொல்லப்படுகிற வெளிச்ச அமைப்புக்கு ஏற்றவாறும் செட்டிங் அமைத்துத் தர இணங்குவார்.''


படங்களில் நடிக்க

## புது முகங்கள் தேவை

திறமையுள்ள ஆண், பெண்கள் நடிகர்களாகச் சேரலாம் - - -

உங்கள் திறமையை வெளிப்படுத்துங்கள் - - - - -

உங்களுக்கு ஒரு அரிய சந்தர்ப்பம்

**உங்களுக்கு நல்ல எதிர்காலம் காத்திருக்கிறது**

பின்னணிப் பாடகர், பாடகிகளும் தேவை.

சமீபத்தில் எடுத்த போட்டோவுடன் விண்ணப்பிக்கவும் :

ஆங்கிலத்தில் கடிதம் எழுதவும்

**SURENDER FILM SERVICE,**
127, Abdul Rehman St.,
**BOMBAY-3.** *Phone :* **27774.**

அம்பி, உற்சாக மேலிட்டு, "அவர் ஒருத்தரேவா வீடு கட்டிடுவார்?" என்ருன். "இல்லே அம்பி, கதைப்படி எது வேண்டும் என்று தெரிந்து கொண்ட ஆர்ட் டைரெக்டரின் கீழ சில பிரிவுகள உண்டு, தச்சுப் பட்டறை, சிற்பச் சாலே, வர்ணம் அடிப்போர் முதலிய பிரிவைச் சேர்ந்தவர்கள் ஆர்ட் டைரெக்டர் ஸ்டுடியோவுக்குள் 'வீடு' கட்டவேண்டி, ஸ்டுடியோவினுள் எவ்வளவு நீள-அகலத்தில் அமைக்கலாம் என யோசித்து ஒரு பிளான் போடுவார். அந்த 'பிளான்'படி, தச்சர்களும், அவாகளது மேஸ்திரியும், சிற்பச் சாலே சம்பந்தப்பட்டவர்களும் சேர்ந்து வீடு கட்டுவார்கள். பழங்கால முறைப்படி, ஜமீந்தார் வீடாக இருக்கவேண்டுமென்ருல் சிற்பச்சாலே பிரிவினர்கள், சில விசேஷ வேலேப்பாடுகளே சுவர்களிலும், கதவுகளிலும் செய்வார்கள். இவர்கள், காகிதக் குழம்பு உதவியினுலும், களிமண் கொண்டும் அவைகளேச் செய்வார்கள். இவர்களது திறமை, உழைப்பு, சமூகப் படங்களே விட, புராணப் படங்களுக்கும், சரித்திர சம்பந்தமானப் படங்களுக்குப் பெரிதும் பயன் படும்" என்று பிரசங்கம் செய்தேன்.

அம்பி, "அடேயப்பா, இவ்வளவு விஷயம் இருக்கே. அது சரி ஸார், ஸ்டுடியோதான் கொட்டகை மாதிரி இருக்கும் என்றீர்களே, தூர இருந்து பாாக்கும்போது காம்பவுண்ட தெரிகிறது. தோட்டம் தெரிகிறது. இதெல்லாம தானே ஸ்டுடியோ" என்ருன்.

"காம்பவுண்ட் இருப்பது பாதுகாப்புக்காக. தோட்டம் எல்லாம் அழகுக்காக, இவைகள் மட்டும், ஸ்டுடியோக்களல்ல. இது தவிர ஆபீஸ் கட்டடங்கள், அறைகள், காமிரா வைக்க, ஒலிப் பதிவு செய்ய பிரத்தியேக இடங்கள் உண்டு. தச்சுப் பட்டறை, சிறபச்சாலே, வர்ணம தீட்டும இடம, மேக்அப் அறை, ரசாயன அறை, எடிட்டிங் அறை, படம போட்டுப் பார்கக சிறு தியேட்டர்—இப்படிப் பல பிரிவுகளுக்கும் தனித்தனி இடம உண்டு. படம் பிடிக்கபபடும கொட்டகைகளுக்கு இப்பொழுதெல்லாம் 'ப்ளோர்' என்று சொல்லுகிருர்கள். இந்த "ப்ளோர்"கள் இரணடு, மூன்று கூட இருககும். ஏக காலததில, இரண்டு மூனறு பட முதலாளிகளுக்கு, தனித தனி, 'செட்டிங்' அமைககவோ, அல்லது ஒரே பட முதலாளிககு, வெவ்வேறு 'செட்டிங்' அமைக்கவோ உதவுவதறகு இந்த இரண்டு மூன்று "ப்ளோர்"கள் உபயோகமாக இருககின்றன. இவைகள் எல்லாவற்றிறகும் 'ஸ்டுடியோ' என்ற பொதுப் பெயர் உணடு. சில ஸ்டுடியோக்களில "படம் பிடிக்கவும் ஒலிப பதிவு செய்யவும்" மட்டும்தான் வசதி இருக்கும். ரசாயன சாலே இருக்காது. படம் திரையிட்டுப் பார்க்க வசதி இருக்காது. இருந்தாலும் பொதுவாக 'ஸ்டுடியோ' என்று தான் அழைப்பார்கள்."

"நேரிலே பார்த்தால் இன்னும் நன்ருகப் புரியும் ஸார். கண்டிபபாக என்னே அழைத்துப போவீர்களா?" என்று கேட்டான அம்பி.

"ஓ, இன்னும் நன்ருகப் புரியும். நிச்சயமாக அழைத்துபபோகிறேன்" என்று அவனுக்கு வாக்குறுதி கொடுத்தவிட்டு, ஒருவாறு சமாளிததுக் கொணடேன. அமபி நாளே வருவதாகச் சொல்லி விட்டு எழுந்து போனன் புன்னகை ததும்ப.

(தொடரும்)


மாதவிடாய்
நிகராற்ற மருந்து
(தேவி பில்ஸ்) GOVT REGD NO COL 688
எக்காரணத்தினுலும எததனே மாதமானுலும் நின்றுவிட்ட மாதவிடாய் உடனே வெளியாகும. சாதாரண கேஸ்களுககு (Ordinary) விலே ரூ. 8-8-0. மாதங்களான கேஸகளுக்கு (Special) ரூ. 10-8-0 (தபால் சிலவு தனி)

கர்ப்பத்தடை
நிகராற்ற மருந்து
(ஸ்பெக் பில்ஸ்) GOVT REGD NO. 266
12 நாட்கள் சாப்பிட்டால் 6 வருஷத்திறகு சாஸ்வதமாக கருவைத் தடுக்கும். மாதவிடாய் தவறாது. பில்ஸ் விலே ரூ 12-0-0 (த. சி. தனி)

SEENU & CO.,
POST BOX NO. 1638 ( ) MADRAS-1.
C M STORES, 42, Main St. Colombo-11

NW 3211, N40/5 N55-8.5

134159

மாயாவி

என் மனசைப் புதிய கிலி ஒன்று பிடித்துக் கொண்டது. 'சியாம் நல்லவன்; அவளுடைய நோக்கம் தெரிந்து விட்டதால், இனி அந்தப் பக்கமே தலை காட்ட மாட்டான். ஆனால், அந்த விபசாரி, புது ருசி காணத் துணிந்து விட்டாள் போலிருக்கிறதே; சியாம் இல்லாவிட்டால், அவனையொத்த வேறொரு வாலிபன், வேறொரு அழகன் அவளுக்கு அகப்படவா மாட்டான். அப்படி அகப்பட்டு, அவளுடைய கூடா நட்பு திவாகரனுக்குத் தெரிந்துவிட்டால்....?' அதன் விளைவை நினைத்தபோது என் தலை கிறுகிறுத்தது. என் வாழ்க்கை செல்லும் கரடு முரடான பாதை, இறுதிக் காலத்தில் கூட எனக்கு ஒருவித நிம்மதியையும் அளியாமல், மேலும் மேலும் சங்கடங்களையே தோற்றுவித்துக் கொண்டிருக்கும் போலத் தோன்றியது. திவாகரனுக்காக நான் எதையும் செய்தாக வேண்டும். ஆகவே எந்த நிமிஷமும், எதையும் ஏற்க நான் தயாராக இருக்க வேண்டும்.

ஆனால் எந்த நிமிஷமும், எதற்கும் தயாராயிருக்க வேண்டியவர்கள் பந்தமற்று இருக்க வேண்டுமே. இப்போதைக்கு யமுனை எனக்கு ஓர் பந்தமாக வல்லவோ இருக்கிறாள். அவளை யார் கையிலாவது பிடித்துக் கொடுத்தால் தானே, நான் எதற்கும் சித்தமாக இருப்பவ்ள் ஆவேன். ஆகவே, யமுனை திவாகரனையன்றி வேறு யாரையும் கண்ணெடுத்தும் பாரேன் என்ற தீரத்துடன் இருந்தாலும், நான், அவளுக்கு வேறொரு மணாளனைத் தேடிக் கல்யாணத்தை முடித்து விடத் தீர்மானித்தேன். அக்காரியத்தில் இறங்கும் போது எனக்கு ஒரே ஒரு வருத்தந்தான் பெரிதாக எழுந்தது. 'மகளின் கல்யாணப் பிராயத்தில் வந்து விடுகிறேன்' என்று கூறிப் போன அண்ணா, ஒரு கால் உயிரோடிருந்து திரும்பி வந்தால், தன் மகளின் விவாகத்தைக் கூட உடனிருந்து நடத்திவைக்க முடியாது போய் விட்டதேயென வருந்துவானே என்பது தான் அந்த வருத்தம். ஆயினும், அதற்காக எத்தனை காலந்தான் காத்திருப்பது! அவன் எங்கே போனானோ? என்ன ஆனானோ? இல்லாவிட்டால், சம்சார பந்தத்திலிருந்து விடுபட வேண்டி, தன் மகளைக் கோட்ஸே மாமாவிடம் ஒப்படைத்துவிட்டு விடுதலை பெற்றுக் கொண்டு எல்லாவற்றையும் மறந்து விட்டானோ? அப்படி ஏதாவது தான் இருக்கவேண்டும். இல்லாவிட்டால், வாக்களித்தவாறு அவன் இதற்குள் திரும்பி வந்திருக்க வேண்டுமே!

இப்படி மனசை சமாதானப்படுத்திக் கொண்டு கல்யாண யத்தனத்தில் இறங்கினேன். முதல் காரியமாக வக்கீல ஷிண்டேயைச் சந்தித்துப் பேச அவருடைய வீடு தேடிச் சென்றேன்.

கோட்ஸே மாமாவின் மரண சாஸனத்தில் தன் சொத்துக்கள் அனைத்தும் தனக்குப் பின்னர், தனது வளர்ப்புப் பிள்ளையான திவாகரனையே சேர வேண்டும் என்று மாத்திரமே குறிப்பிட்டிருந்தார். யமுனாவை அவனே மணக்கவேண்டும் என்று அவர் கருதியிருந்ததாலும், அவர்கள் திருமணத்தை நிகழ்த்தி வைப்பதாக நான் வாக்களித்திருந்ததாலும், அவளுக்கு வேறிடத்தில் மாப்பிள்ளை தேடிக் கல்யாணம் செய்ய நேரிடுமென்றோ, அதற்குப் பணம் தேவைப்படும் என்றோ, அதன் பொருட்டு ஓர் தொகையை தமது மரண சாஸனத்தில் காட்ட வேண்டுமென்றோ அவருக்குத் தோன்றவில்லை. ஆனால் அன்றொரு நாள் திவாகரன் நல்லவன் போல, அவளுடைய கல்யாணத்தை வேறிடத்தில் முடித்து வைக்கும்படி கூறினான். அதையொட்டி ஷிண்டேயை அவனோடு பேசச்செய்து, கல்யாணச் செலவுகளுக்கான பணத்தைக் கேட்டு வாங்கி வரும்படி அனுப்பலாம் என்றுதான் அவரைத் தேடிச் சென்றேன்.

ஆனால், முதற் கோணல் முற்றும் கோணல் என்றவாறு, கோட்ஸே ஊரிலே இல்லை. கோர்ட்டுக்கு விடுமுறையாக இருந்ததால், அவர் குடும்பத்துடன் டில்லியிலிருந்த தமது மைத்துனரின் வீட்டுக்குப் போயிருந்தார். 'சரிதான், இனி அவர் திரும்பி வரும் நாளை எதிர்பார்த்துக் கொண்டிருக்க வேண்டியதுதான்' என்று சோர்வுடன் வீட்டுக்குக் கிளம்பினேன்.

வழியில் திரிவேணி அம்மாள் எதிர்பட்டாள். தலையில் கறிகாய்க் கூடையுடன் மாலை வியாபாரத்திற்காக மார்க்கெட்டுக்குச் சென்று கொண்டிருந்த அவள் என்னைக் கண்டதும் நின்று க்ஷேமம் விசாரித்தாள். தொடர்ந்து சொன்னாள்:—"கேட்டீர்களா அம்மா, கேலிக்கூத்தை! அந்தத் தடிச் சிறுக்கி, சற்று முன்பு என் மகனைத் தேடிக் கொண்டு வீட்டுக்கே வந்துவிட்டாள்!"

"யார் ஸ்நேகலதாவா?" என்று நான் கேட்டேன்.

"ஆமாம்; அவள் என் பிள்ளைக்குப் பெரிய வேலை ஒன்று கிடைக்கச் சிபாரிசு செய்திருக்கிறாளாம். எடுத்த எடுப்பில் ஐந்நூறு ரூபாய்ச்சம்பளம் கிடைக்குமாம். அவனைக் கூட்டிச் சென்று வேலை கொடுக்கிறேன் என்று வாக்களித்திருப்பவருக்கு அறிமுகம் செய்து வைத்துவிடலாம் என்று வந்தாளாம்."

"சரி; அப்படியானால் வருகிற ஸ்ரீதேவியைக் காலால் உதைக்காதீர்கள். வேலை கிடைக்கிற வரைக்கும் அவள் இஷ்டத்துக்கு இணங்கி வருபவன் போல நடிக்கச் சொல்லி உங்கள் மகனை அனுப்புங்களேன்" என்று சொன்னேன் நான்.

"என்ன சொன்னீர்கள்? அந்தக் தேவடியாளிடம் என் மகனை அனுப்புவதா? அம்மா, நாங்கள் பிச்சை எடுத்தாலும் எடுப்போமேயன்றி, இந்த மாசிரிக் கெட்ட நினைவுடன் இருப்பவளிடம் உதவி கோரிப் போகவே மாட்டோம். மேலும் அவள் சொன்னது உண்மை என்பது தான் என்ன நிச்சயம்? பையன் ஒளிந்து திரிகிறுன் ; இப்படி ஏதாவது ஆசை காட்டி இழுத்து வந்து இச்சைக்குட்படுத்திக் கொள்ளுவோம் என்று கருதியிருந்தாய்? ஆகவே, நான் அவள் மூஞ்சிக்கு நேரே சொல்லி விட்டேன். 'இந்தாம்மா ; உன் சிபாரிசும் வேண்டாம்; வேலையும் வேண்டாம். உன் கெட்ட நினைவுகளுக்கு இணங்கிவரக்கூடியவன் என் மகனல்ல. அதற்கு வேறு யாரை யாவது தேடிப் பிடித்துக் கொள். போய்வா ; இது தான் வழி' என்று கூறி அனுப்பி விட்டேன்."

அமாம் ; திரிவேணி அம்மாள் சொல்வது உண்மையாகவும் இருக்கலாம் என என் மனசும் அப்பொழுது நம்பிற்று. அப்படியிருந்தால் ஸ்நேகலதா சியாம சுந்தரனை அடைய எவ்வளவு தீவிரமாயிருக்கிருள் என்பது விளங்கவில்லையா? என் உடம்பில் ஒவ்வோர் அணுவும் இதை நினைத்து அவமானத்தால் குன்றியது. வாயடைத்துப் பேசாமடந்தையாக நின்று கொண்டிருந்த என்னிடம் திரிவேணி அம்மாள் மேலும் சொன்னுள் : " நான் நாளைக்கே போய், திவாகரனிடம், அவனுடைய அருமை

மனைவியின் அவலக்ஷண நோக்கங்களை வெளியிட்டு விடப் போகிறேன். அவனும் எச்சரிக்கை அடைந்து விடுவான்; நாளைக்கு ஒரு தப்புத் தண்டா நடந்து விட்டாலும் என் பிள்ளை அவன் கண்களில் குற்றவாளியாகப் படமாட்டான்."

"ஆனால் உங்கள் பேச்சைத் திவாகரன் நம்பமாட்டான் என்றே எனக்குத் தோன்றுகிறது அம்மா; அவன் தான் ஒரேயடியாக அவளுடைய மயக்கத்தில் ஆழ்ந்து கிடக்கிறானே !"

"நம்பினால் நம்பட்டும்; நம்பாவிட்டால் போகட்டும். அதற்காக எத்தனை நாட்களுக்கு என் மகன் இவ்வாறு ஒரு பெண் பிள்ளைக்கு ஒளிந்து நடமாட முடியும்?"

"அதுவும் நியாயந்தான்; சொல்லி எச்சரித்து விடுங்கள்" என்று கூறிவிட்டு அவர்களிடம் விடை பெற்றுக் கொண்டேன்.

வீட்டை நெருங்கிய போது, அது பூட்டப்பட்டிருப்பதையும், திண்ணையில் யாரோ ஒரு பைராகி படுத்துக் கிடப்பதையும் கண்டேன். யமுனை சாயங்கால வேளைகளில் அண்டை அயலில் உள்ள தன் தோழிகளுடன் பேசிக்கொண்டிருக்கப் போவதுண்டு. அது போல இன்றும் போயிருப்பாள். ஆனால் அடைத்த வீடு எங்கே யிருக்கிறது என்று தேடித் திரியும் இந்தப் பரதேசிகள்........!

திவாகரன் எங்களோடு வசித்த மட்டும் அவ்வீட்டில் காலடி வைக்க யாரும் சற்றே தயங்குவார்கள். அவன் போன பிறகு வீடு சந்தை மடமாகி விட்டது. அதற்கு முக்கிய காரணம் இதுதான். ரஸ்தாவை ஒட்டி, பூப்பந்தல் போட்டப்பட்ட குளிர்ந்த, சௌகரியமான வெளித் திண்ணையுடன் வீடு இருந்ததால், வெயில்-மழைக்கு வழிப் போக்கர்கள் அங்கே சற்றுத் தங்குவது வழக்கம். 'வீட்டைத் தலையிலா சுமந்து சென்று விடப் போகிறார்கள்; இருந்தால் இருந்து விட்டுப் போகட்டுமே' என்று நான் தயாளம் காட்டப் போனது பிசகாகி விட்டது. ஊர்ச் சோம்பேறிகளெல்லோரும் அங்கே வந்து கூடவும், கும்மாளமடிக்கவும் தொடங்கிவிட்டனர்.

ஒரு நாள் எவனோ ஒரு தடிப்பரதேசி, யமுனை வெளியே போய்விட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்தபோது அவளை நோக்கிப் பல்லை இளித்துக் கண்களைச் சிமிட்டினானாம். அது முதல் முன் பின் தெரியாத எவரையும் வீட்டுத் திண்ணையில் தங்க நான் அனுமதிப்பதில்லை. அதனால் தான் இன்று அங்கு ஒரு பைராகி படுத்திருப்பதைக் கண்டதும், ஆத்திரத்தோடு வந்து, "யாரைய்யா நீங்கள்? இது என்ன சத்திரமா, சாவடியா? பட்டப்பகலில் வந்து படுக்கை போட்டு விட்டீர்களே ! எழுந்திருந்து போங்கள ஐயா! வெளியில்" என்று சப்தமிட்டேன்.

அந்தப் பைராகி திடுக்கிட்டு எழுந்திருந்தான். ஆனால், அவன் வெளியே நடக்காமல் என்னை வெறித்து நோக்கிய போது எனக்கு அவனை எரித்துவிட வேண்டும் போலக் கோபம் வநதது. "என்ன ஐயா விழிக்கிறீர் ? நட ஐயா வெளியே" என்று கத்தினேன்.

"மன்னித்துக் கொள்ளுங்கள் அம்மா; இது பிராபகர் கோட்ஸேயின் வீடு தானே !"

"ஆமாம்; பிராபகர் கோட்ஸேயின் வீடு என்றால் சத்திரமல்ல, போ ஐயா பேசாமல்."

அவன் போகவில்லை. "நீங்கள் அவருடைய மகனின் வளர்ப்புத் தாய்தானே!" என்று கேட்டான்.

"ஆமாம்; அதற்கு என்ன இப்பொழுது?" எனறு வெறுப்புடன் சொன்னேன்.

மறு நிமிஷம் அவன சொன்னான்: "என்னைத் தெரிய வில்லையா அம்மா, பதினைந்து வருஷங்களுக்கு முன்பு ஒரு நாள் இரவு யமுனை என்ற பெண் குழந்தையை......."

இதைக் கேட்டேனோ, இல்லையோ, "அண்ணா நீயா ?" என்று ஆனந்தக் கூச்சலிட்டேன் நான்.

## 8

'ஆண்டவன் செயலை யார் அறிவார்?' என்று ஞானிகள் சொல்வதுண்டு. அவனை அறியும் ஆழ்ந்த சக்தி படைத்த அவர்கள் வாய்மொழியே இதுவானால், கேவலம் அஞ்ஞானப் புழுக்களான நமக்கு அவர் செயலை அறியும் ஆற்றல் உண்டா? இருந்தாலும் ஒன்று மாத்திரம் நமக்கு அனுபவத்தின் மூலம் தெரிந்திருக்கிறது. புற்றீசலைப் பார்த்தி

[தொடர்ச்சி 65-ம் பக்கத்தில்]

# பொதுஜனம் பேசுகிறார்

## ★ சகோதரி சுமதிக்கு !

உங்கள் விளம்பரக் கடிதத்தைப் பத்திரிகைகளில் படித்தேன். "எதிர் பாராதது" படத்தையும் பார்த்தேன். என்னுடைய அபிப்பிராயத்தைத் தெரிவிக்கிறேன். முதலில் உங்களுடைய கதையும் கதைக்கு இடப்பட்டிருக்கும் பெயரும் சொந்தக் கற்பனையல்ல; இரவல் வாங்கியவை. பல வருஷங்களுக்கு முன்னால் டைரெக்டர் சாந்தாராமின் கற்பனைச் சித்திரமாக "எதிர் பாராதது" என்ற படம் திரையிடப்பட்டது. அந்தப் படக் கதையில் பழைய நம்பிக்கைகளில் ஊறிப் போயிருந்த வயோதிகன் ஒருவன் தன்னுடைய சபல புத்தியின் காரணமாகத் தானாகவே ஒரு இளம் பெண்ணை வலிய மணந்து, பிறகு காலப் போக்கில் தன்னுடைய தவறை உணர்ந்து தன்னுடைய இளம் மனைவியின் சுகத்திற்கு இடையூறாக இருக்க விரும்பாமல், மனைவிக்கு மறுமணம் செய்து கொள்ளும் உரிமையை மனப்பூர்வமாக அளித்துவிட்டுத் தன் உயிரை மாய்த்துக் கொள்கிறான். இது உண்மையில் "எதிர்பாராதது". ஆனால், உங்கள் கதையில் **நீங்கள் செய்த முடிவை** எதிர்பாராதது என்று கூறியிருக்கிறீர்கள். உங்கள் கடிதத்தின் இறுதியில் நீங்கள் கேட்டிருக்கும் கேள்விகளுக்கு "ஆம்" என்ற பதில்தான் பொருந்தும். உங்களுடைய முடிவு பாரதத்தின் பண்புக்கு, கற்புக்கரசி கண்ணகியின் பரம்பரைக்குப் பொருந்துவதுதான். ஆகவே, உங்கள் முடிவை எப்படி "எதிர்பாராதது." என்று கூறமுடியும்? உங்கள் முடிவு இந்தியப் பண்பாட்டை உணர்ந்தவர்கள் எதிர்பார்ப்பதுதான். உங்களுடைய கணவரின் செயல்தான் "எதிர்பாராதது." இதை விளக்கவே சாந்தாராம் அவருடைய கதையை அற்புதமாகப் புனைந்திருந்தார். உங்களுடைய கதையில் வரும் உங்கள் கணவரை ஒரு அப்பாவியாக வர்ணித்திருக்கிறார்கள். ஆகவே, அவருடைய முடிவையும் எதிர்பாராதது என்று சொல்வதற்கில்லை. ஆகவே, உங்கள் கதைக்கு இடப்பட்டிருக்கும் பெயர் சிறிதும் பொருந்தாதது. உங்கள் கதையில் எதிர்பாராத அம்சங்கள் எதுவுமே இல்லை. தமிழ்ப் படங்களில் சாதாரணமாக எதிர்பார்க்கும் குறைகளெல்லாம் படத்தில் பூரணப் பொலிவுடன் விளங்குகின்றன. மகன் தகப்பனிடம் தன்னுடைய விரகதாபத்தைத் தெரிவித்துப் புலம்புவதும், தகப்பன் நள்ளிரவில் இடி மழையையும் பொருட்படுத்தாது மகனை அவனுடைய காதலியிடம் சேர்ப்பிக்க முயற்சிப்பதும் வேறு எந்தப் படத்திலும் எதிர்பார்க்கக் கூடியவையல்ல! கடைசியில் ஒரு வார்த்தை. உங்களுடைய படத்தில் கதையிலும், வசனங்களிலும், டைரெக்ஷனிலும் குற்றம் காண முடிகிறதேயன்றி உங்கள் நடிப்பில் எத்தகைய குறைவுமில்லை என்பதைச் சந்தோஷத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

**ஜே. ராஜலக்ஷ்மி**, சென்னை-1.

## கலையா வளர்க்கிறார்கள்?

மக்களால் மக்களுக்காக நடத்தப்படுகிற நம் மக்கள் அரசாங்கம் சில சமயங்களில் செய்யும் காரியங்கள் மக்களின் எண்ணத்தைப் பிரதிபலிப்பதாகவோ அல்லது அவர்களால் ஆதரிக்கக் கூடியதாகவோ இருப்பதில்லை. இதற்கெல்லாம் காரணம் சம்பந்தப்பட்ட துறைகளிலுள்ள ஒரு சில நபர்களின் பொறுப்பற்ற தன்மையும், குறுகிய சுயநலம் படைத்த மனோபாவமும் தான். அண்மையில் தில்லியில் நடைபெற்ற தேசிய விழாவை நினைத்துப் பார்க்கும்போது மேற்கண்ட முடிவுக்குத்

☆ பரிசு பெற்ற கடிதம்

எழுதியவர் :

**ஜே. ராஜலக்ஷ்மி,**

**50, தம்பு செட்டித் தெரு,**

**சென்னை-1**

தான் வரவேண்டி யிருக்கிறது. தேசிய நாடக விழாவிற்கு சிறந்த நாடகங்களைப் பொறுக்கி யெடுக்கும் அதிகாரம் பெற்றிருந்த சென்னைக் கிளைக் கழகத்தார் செய்த சில செயல்கள் மிகவும் தான் தோன்றித் தனமாக இருக்கின்றன என்று சொல்வதில் தவறு இருக்க முடியாது. கலை வளர்ச்சியைக் கருத்திற் கொண்டு செயலாற்ற வேண்டிய இவர்கள் குறுகிய நோக்கத்துடன் நடந்து கொண்ட முறையானது கண்டிக்கத் தக்கது. "குண்டூசி" டிசம்பர் இதழில் 'நுனிப்புல்' பகுதியில் "வெட்டுக்கிளி" யார் எழுதியிருப்பதைப் படிக்கும்போது, இதுவரை வெளிக்கு வராத பல புதிய ஊழல்கள் அம்பலமாகின்றன. தங்களுக்கு வேண்டியவர்களின் நாடகங்களை முதலில் தேர்ந்தெடுத்து வைத்துக் கொண்டு, பின்னர் 'கண் துடைப்பு நாடகம்' நடத்தியிருக்கிறார்கள் என்பது வெளியாகிறது. இதுவா கலை வளர்க்கும அழகு? நாடகத் துறையிலேயே தம் வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணித்த—அக் கலையின மேன்மைக்காகப் பாடுபடுகிற—எத்தனையோ உண்மைக் கலைஞர்களை ஒதுக்கிவிட்டனர். எவ்வளவோ பணத்தை விரயம் செய்து நடத்தப்பட்ட இவ்விழாவில் தமிழ் நாடகக் கலைஞர்களுக்கு தக்க கௌரவம் அளிக்கப்படவில்லை. தேசியப் பற்று, நாட்டு உணர்ச்சி, மொழியின் சிறப்பு, பழந் தமிழர்களின் வீரம் இவற்றையெல்லாம் அடிப்படையாகக் கொண்ட உயரிய நாடகங்களை நடித்து மக்கள் அபிமானம் பெற்ற டி. கே. எஸ். சகோதரர்கள் போன்ற கலைஞர்களுக்கும் விழாவில் இடமில்லை யென்றால் இவர்கள் 'கலையா வளர்க்கிறார்கள்?' என்றே கேட்கத் தோன்றுகிறது.

முத்து, கல்கத்தா–26.

## கதம்பம்

"குடும்பம்" படம் பார்க்கும்பொழுது நமக்கு "சம்சாரம்" "அன்பு" இவற்றின் ஞாபகம் வருகிறது. "சம்சார"த்தில் வருவதுபோல் இதிலும் நடுத்தர மனிதனின் குடும்பம் படும் தொல்லையும், அவன் வீட்டாரிடமிருந்து பிரிக்கப்பட்டு அவன் கல்லுடைப்பதும், ரிக்ஷா இழுப்பதும், கூலி வேலை செய்வதும் போன்ற சம்பவங்கள் வருகின்றன. முதல் சந்திப்பின் போது ராஜாவும், சாரதாவும், தங்கள் பொட்டலங்களை மாற்றிக் கொள்வது ஏற்கெனவே "அன்பு" படத்தில் வந்த காட்சி. "சம்சார"த்திற்கும், "குடும்ப"த்திற்கும் உள்ள ஒரே வித்யாசம் "சம்சார"த்தில், நாத்தனார் மதனியை கொடுமைப்படுத்துகிறாள்; "குடும்ப"த்தில் மதனி, நாத்தனாரைக் கொடுமைபடுத்துகிறாள். இதேபோல், "நண்பன்" "நல்லகாலம்" இரண்டும் ஒரே கதை. இந்த காப்பி அடிக்கும் தொழில் இன்னும் எத்தனை நாளைக்கு? நாட்டில் எவ்வளவோ சிறந்த எழுத்தாளர்கள் இருக்கக் கதைக்கா பஞ்சம்? இனியாவது பட முதலாளிகள் இது குறித்து சிந்திக்கட்டும்!

டி. என். லக்ஷ்மி, சென்னை–1.

## மறக்க வேண்டாம்

கடந்த ஆண்டு பம்பாயில் திலிப் குமார், அசோக்குமார், ராஜ்கபூர், பிரேம்நாத், தேவ் ஆனந்த், நர்கீஸ், சுரய்யா முதலிய எண்ணற்ற பெரும் புகழ் படைத்த நக்ஷத்திரங்களும், பட முதலாளிகளும், டைரெக்டர்களும் அஸ்ஸாம் வெள்ள நிவாரண நிதிக்குப் பணம் திரட்ட மாபெரும் ஊர்வலம் ஒன்று நடத்தினர். மிக ஆடம்பரமாகவும் விளம்பரமாகவும் விழா நடத்தி ஒரு லக்ஷ ரூபாய் திரட்டி நேருவை வரவழைத்து பல்லாயிரக்கணக்கானவர் கொண்ட கூட்டத்தின் முன் நேருவிடம் நிதியை சமர்ப்பித்தனர். மகிழ்வுக்கு உரிய விஷயம் தான்; போற்றவேண்டியதுதான். மூன்று ஆண்டுகளுக்கு முன் கோதாவரியில் வெள்ளம் ஏற்பட்டு மக்கள் தவித்த போது என். டி. ராமராவ், ஜி. வரலக்ஷ்மி இருவரும் ஊர் ஊராக, தெருத் தெருவாகச் சென்று நாட்கணக்கில் உழைத்து, நாடகங்கள் நடத்தி—அகில இந்தியப் பிரதான நக்ஷத்திரங்கள் அனைவரும் சேர்ந்து திரட்டி அளித்த அதே தொகையை (ஆம் ஒரு லக்ஷத்தை)—ஆடம்பரமின்றி, விளம்பரமின்றி கவர்னரிடம் சமர்ப்பித்த பெருமைப்படத் தக்க சிறு உண்மையையும் ரஸிகர்கள் மறக்க வேண்டாம்.

வி. விஸ்வநாதன், கொல்லம்.

## பாராட்டுகிறேன்

'லலிதா-பத்மினி-ராகினி ஆகிய மூவரும் சினிமா உலகிலிருந்து விலகப்

போகிறார்கள்' என்ற செய்தி என் காதுகளுக்கு எட்டியதும் நான் அடைந்த ஆனந்தத்திற்கு எல்லையே கிடையாது. இவர்கள் மூவரும் சினிமா உலகிலிருந்து விலகுவது, ஓயவெடுக்கவோ அல்லது ரஸிகர்களுக்கு அலுப்புத் தட்டுகிற வரைக்கும இருக்காமல் இப்போதே புகழோடு விலகி விடுவது நல்லது என்ற காரணத்தினலோ, அதைப் பற்றி எனக்குத் தெரியாது. ஆனல், "திரை உலகில் புது முகம் வேண்டும்" என்று சதா புலம்பிக் கொண்டிருக்கும் என் போன்ற ரஸிகர்களுக்கு ஆதரவளித்து அவர்களுக்குக் கீழ் இருக்கும் உப பாத்திர நடிகைகளுக்கும் சந்தர்ப்பம் அளித்துவிட்ட அவர்களின் கண்யமான செயகையைக் கண்டு பாராட்டுகிறேன். மேலும், பார்த்துப் பார்த்து அலுத்துப் போன பின்பும் நடிக்கும் பிரபல நடிக, நடிகைகளும் புது முகத்திற்குச் சந்தர்ப்பம் அளிக்கும் வண ணம் இவர்களைப்போன்று நடந்து கொள்வார்களேயாஞல் சினிமா உலகம் முன்னேறுவது திண்ணம்.

எம். ஐ. எம். ஹனிபா,
கொழும்பு-14.

## கர்நாடகம் வேண்டும்

கற்பனைக்கு எட்டாத கர்நாடகப் படங்கள் வேண்டாம். கர்நாடகப் படங்கள் வேண்டாமென்ற காரணத்தால் கர்நாடக சங்கீதத்தைக் கைவிடக் கூடாது. கர்நாடக மெட்டில் உள்ள பாட்டுகளை சினிமாப் பிரியர்கள் ரஸிக்க மாட்டார்கள் எனப் பட முதலாளிகள் நினைப்பது தவறு. "ஔவையார்" பாடல்கள் அனைத்தும் நன்கு சோபித்துள்ளன. "மனோகரா", "மாமியார்" இன்னும் பல படங்களில் கர்நாடக மெட்டுகளில் சங்கீதத்தைப் புகுத்தியுள்ளனர். அதை ரஸிகர்கள் மிகவும் விரும்பி படத்தில் கேட்கும்பொழுதே அவர்களின் வாயும் முணுமுணுக்கத் தொடங்கி, கால் ஆட்டமும கொடுத்துவிடுகிறது என்பதைப் படமுதலாளிகள் அறியவேண்டும். பல படங்களிலும், ஓரிரு பாடல்களையாவது புகுத்தினல் மக்களுக்கு உற்சாகம் அளிப்பதுடன், நல்ல ஆதரவும் கிடைக்கும்.

பி. நடராஜன்,
தலவாக்கொல்லை.


புத்தி தன் சுய நிலையிலிருந்து தவறிவிட்டால் **பைத்தியம்** என்கிறோம்.

அவ்வித நிலையிலிருந்து குணமடைய

**நவரத்ன கல்பம்**

ஓர் இன்றியமையாத சஞ்சீவி.

★ உடை, பழக்கவழக்கங்களில் புதுமை
★ வெற்றுப் பார்வை
★ கவலையும் பீதியும் கொண்ட தோற்றம்
★ ஞாபகச் சக்தியின்மை
★ எதையும் புரிந்துகொள்ள முடியாமை
★ தன்னடக்க மின்மை
★ மாயை, ஒரே காரியத்தை திரும்ப திரும்ப செய்வது, பிரமை.

இவைகளே **சித்தசுவாதீனம்** தவறிவிட்டதற்கான அறிகுறிகளாகும்

இவைகளை முளையிலேயே கிள்ளிவிட

**வைரம், கெம்பு, நீலம், மரகதம், புஷ்பராகம் முத்து, பவழம், கோமேதகம், வைடூரியம்**

முதலிய ஒன்பது உயர்ந்த கற்களின் சேர்க்கை கொண்ட

**நவரத்ன கல்பம்**

எனும் உலகப் பிரசித்தமான மருந்தை உட்கொள்ளுங்கள்

கவிராஜ் பண்டிட்
துர்க்காதத்த சர்மா
வைத்தியவாசஸ்பதி
அவர்களால்
கண்டு பிடிக்கப்பட்டது.

இலவசப் பிரசுரங்களுக்கு எழுதவும்:

**THE MANAGER:**

**NAVRATNA KALPA PHARMACY**

**JULLUNDUR CITY (India)**

Grams: 'NAVRATNA' Phone: 402

நல்ல சாரீரம் பெற்ற இளம் பாடகர் கே. ஸி. சுப்ரமண்யம் மேடைக் கச்சேரிகள் மூலமும், ரேடியோ சங்கீதத்தின் மூலமும் துரிதமாய் பிரபலம் அடைந்து வருகிறார்.

## தகுதியில்லையா ?

மிகச்சிறந்த சில சலனப் படங்களுக்குத் தக்க பரிசை அளிக்கத் தீர்மானித்த மத்திய அரசாங்கம் அதற்காகச் சில படங்களைத் தேர்ந்தெடுத்து ஜனாதிபதி ராஜேந்திர பிரஸாத்தின் மூலமாகப் பரிசுகளை வழங்கியது. ஒரு ஹிந்திப் படத்திற்கும், வங்காளி படம் ஒன்றிற்கும், மராத்திப் படம் ஒன்றுக்கும் பரிசுகள் கிடைத்தன. ஆனால் என்ன காரணமோ தெரியவில்லை, நம் தமிழ்ப் படங்கள் ஒன்றுக்கேனும் பரிசு கிடைக்கவில்லை. பரிசு கிடைக்காதது, நம் தமிழ் நாட்டிற்கே, அதிலும் மிகவும் முக்கியமாக நம் தென்னாட்டு திரை உலகிற்கே ஒரு மாபெரும் குறையாகும். ஏன், பரிசைப் பெறுவதற்குரிய தகுதி நம் தமிழ்ப் படங்களுக்குஇல்லையென்ற காரணத்தினாலா பரிசை அளிக்கவில்லை? தமிழ் நாட்டின் நாகரீகத்திற்கும், பண்பாட்டிற்கும், பழக்க வழக்கத்திற்கும் எடுத்துக் காட்டாக விளங்கும் "ஔவையார்" போன்ற படமும், தாயின் அன்பை, பொறுமையின் எல்லையை, வெகு அழகாகச் சித்தரித்துக் காட்டுவதும், கல்நெஞ்சையும் கரைய வைக்கும் காட்சிகளைக்கொண்டதுமான "மனோஹர்" போன்ற படமும் எந்த வகையில், எந்த முறையில், எந்த அம்சத்தில் பரிசைப் பெற்ற படங்களினின்றும் தாழ்ந்து போய்விட்டன, தகுதியில்லாமல் போய் விட்டன என்பது விளங்கவில்லை. பரிசை அடைந்த படங்களைப் போல் எல்லா விதங்களிலும், சகல அம்சங்களிலும் மேற்கூறிய படங்கள் உயர்வானவையேயன்றி, அதனின்று சற்றும் தாழ்ந்தவை அன்று. அரசாங்கம் மேற்கூறிய படங்களில் ஒன்றுக்கேனும் பரிசை அளித்திருக்கலாம். சுருங்கக் கூறின் மத்திய அரசாங்கம் வேண்டும் என்றே நம் தமிழ்ப் படங்களைப் புறக்கணித்ததோ என்றே எண்ணச் செய்கிறது.

"பம்பாய்த் தமிழன்."
பம்பாய்-22.

## நடனம் அவசியமா ?

சமீபத்தில் நான் பார்த்த ஒரு படத்தில் நடனமாடத் தெரியாத, அதற்கேற்ற உடலமைப்பும் பெறாத ஒரு நக்ஷத்திரத்தை நடனமாடச் செய்து ஆட்டி வைத்திருப்பதைப் பார்த்த பிறகுதான் என் மனதில் 'நடனம் அவசியமா?' என்கிற கேள்வி பிறந்தது. ஒரு கதாநாயகிக்கு நடிப்பும், நல்ல முகவெட்டும் தான் அவசியமென்பது என் அபிப்பிராயம். அவருடைய பாட்டுக்கள் செவிக்கு இனிமையாக இருந்தன. ஆனால் அவரைப் பாடச்சொன்ன உடனே எழுந்து நடனமாட ஆரம்பித்து விடுவதுதான் அவ்வளவு நன்றாக இருக்கவில்லை. கதையில் கதாநாயகிக்கு அவசியம் நடனமாடத் தெரிய வேண்டும் என்ற நிர்ப்பந்தம் இல்லாமலிருக்கும்போது எதற்காக அவர்களை நடனமாடச் செய்யவேண்டும்? இது நல்ல படத்திற்குக் கூட களங்கமாக இருக்கிறது.

மைதிலி ஸ்ரீனிவாஸன்,
செங்கல்பட்டு.

## நினைத்ததும் நடந்ததும்

'குரங்காய்ப் பிடிக்கப் பிள்ளையாராய் முடிந்தது' என்ற புதுமொழிக்கிணங்க, நாஸ்திகப் பிரசாரமும் குறிப்

பிட்ட இனத்தாக்குதலும் அதிகமாக நிறைந்திருக்கும் எனஎண்ணிக் காணச் சென்ற பலருக்கு பெருத்த ஏமாற்றத்தையே அளித்துவிட்டார் எம். ஆர். ராதா நேஷனல் பிக்சர்ஸ் "ரத்தக் கண்ணீர்" மூலம். முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும், வினைவிதைத்தவன் வினை யறுப்பான் போன்ற நீதிகளை போதிக்கும் உயர்ந்த கருத்துகள் அடங்கிய சிறந்த படமாகவே வெளி வந்திருக்கிறது "ரத்தக் கண்ணீர்." கடவுள் இல்லை என்ற நிரீசுவர வாதம் புரிய மனம் விரும்பியிருந்த போதிலும் செய்கையளவிலே அதை சாதிக்க முடியாமல் 'தெய்வம் என ஒன்று இருக்கிறது, நாம் செய்யும் பாபங்களுக்கு அது சாக்ஷியாக உள்ளது, தகுந்த பலனையும் நம்மை அனுபவிக்கச் செய்து உணர வைக்கும்,' என்று எடுத்துக் கூறும் வகையில் படாடோபமாக வாழ்ந்தவன், குஷ்டரோகத்திலை பீடிக்கப்பட்டு, கண்களையும் மின்னலுக்கு பலி கொடுத்து பலவிதமாகவும் அவதியுறும் பரிதாபக் காட்சியை நம்மைக் காணவைத்து, நல்லதொரு பாடத்தை போதித்ததோடு, நாட்டுக்கே சிறந்ததொரு செவை செய்து விட்டார் அவர். புத்தகத்தில் படித்தாலும், பலர் சொல்லக் கேட்டாலும் மனதிலே பதியாததுகூட படமாகப் பார்த்தால் மனதைவிட்டகலாது என்பதலை, இம்மாதிரி நல்லதொரு நீதியை போதிக்கும் படங்கள், நாட்டிலே விபசாரத்தை ஒழிக்க அரசாங்கம் பலவிதமாகவும் நடவடிக்கை எடுத்துவரும் இந்த சமயத்தில் பெரிதும் உதவி

அசோகா புரடக்ஷன்ஸாரின் "பத்மினி" தமிழ்ப் படத்தில் எம். எஸ். திரௌபதி.

புரியும் எனத் திண்ணமாய் நம்புகிறேன்.

கே. ரகுபதி, கும்பகோணம்.

## தவருனது

'சேலை கட்டிய மாதரை நம்பினல் தெருவில் நின்று தியங்கித் தவிப்பரே !'—என்று அநேக படங்களில் பாடி அதைக்கேலிசெய்து வருகிருர்கள். இதைக் கேட்கும்போது சினிமா சம்பந்தப்பட்ட எல்லோர் பேரிலும் ஆத்திரமும் அனுதாபமும்தான் உண்டாகின்றன. ஏனென்ருல், ஞானி பட்டினத்தாரின் பாடலைச் சரியாகப் புரிந்து கொள்ளாததுமல்லாமல் அதை கேலி செய்திருப்பதைக் காணத்தான் வருந்த வேண்டி வருகிறது. உண்மையில் பாடலில் **சேலகட்டிய மாதரை** என்றிருப்பதன் கருத்து சேல்-என்பது கண்களையும் (வர்ணனையில் சேல் விழி என்பதைப் போல) அகட்டிய—என்ருல் பரவவிட்ட, மாதரை-பெண்களை அதாவது: பல புருஷரை தேடக்கூடிய பெண்களை நம்பினல் தெருவில் நின்று தியங்கித் தவிப்பரே என்று ஞானி பட்டினத்தடிகள் பாடி இருப்பது எவ்வளவு உண்மையானது. அதை சேலை கட்டிய மாதர் என்று தவருக எடுத்தெழுதி பாடலுக்கு உண்டாக்கி இருக்கும் இழுக்கை இனியாகிலும் மாற்றிக் கொள்வார்களா பார்ப்போம்!

டி. ஜூகுல்ஸ், காரைக்கால்.

## இலாகாவுக்கு இழுக்கு

சமீபத்தில் வெளி வந்த "சுகம் எங்கே" என்ற படத்தில் பூபதி என்னும் போஸ்ட் மாஸ்டர் பல அநியாயங்களைச் செய்கிருர். மணியார்டரைக் களவாடியும், பிறர் கடிதங்களை ரகசிய மாகப் படித்தும், மாற்ருன் ஒருவனின் சதிகளுக்கு உடந்தையாகவும் இருக்கிருர். இவ்வாறு மக்களை ஏமாற்றும் இவர், பலகாலம் போலீஸாரிடமிருந்து மறைந்து வாழ்கிருர். அளவுக்கு மீறிய கற்பனை; தவிர, தபால் இலாகாவுக்கே ஒரு இழுக்கு. முன்பு வந்த "மலைக்கள்ள"னில் இப்படித்தான் போலீஸ் இலாகாவையே கிண்டல் செய்தார்கள். படத்தொழில் பிரமுகர்கள் இனியும் இவ்வாறு யாரையும் இகழாதிருப்பார்களா?

எஸ். வெங்கடேசன், கரூர்.

## வியப்புத்தான்

'பகுத்தறிவுப் பாசறையிலே பயிற்சி பெற்றவர்கள் நாங்கள்' என்று பெருமை பேசிக் கொள்ளும் சிலர் "ரத்தக் கண்ணீர்" படத்தைப் பார்த்துவிட்டு அறியதோர் கருத்தைத் தெரிந்து விட்டோம் என்ற எண்ணங் கொண்டு திருநீறு அணிந்துள்ள சைவ அன்பர்களைப் பார்த்து, "வாட்டபட்டை"என்று கேலி செய்து வருகிருர்கள். ஆனல் ஒன்றை மட்டும் மறந்து விட்டார்கள். அயல்நாடு சென்று படித்துப் பட்டம் பெற்று விட்டோம் என்ற ஆணவத்தாலும், நாகரீகம் என்ற பெயராலும் செயயப்பட்ட தீய செயல்களுக்கு இறைவனல் கொடுக்கப்பட்ட தண்டனைதான்—பெரு வியாதியால் பீடிக்கப்பட்டு, காவிலே ஒட்டிக்கொள்ளக் கூட பஞ்சு இன்றி 'ராமா! ராமா!' என்று கடவுளை நினைந்து அலறி, கண்ணை யிழந்து இறுதியிலே தன் தவறை உணர்ந்து நொந்து சாகிருன் என்பதை இவர்கள் ஏன் எண்ணுவதில்லை? நாத்திகம் பரவ வேண்டும் என்று எண்ணி இவர்களால் எடுக்கப்படும் படங்களில் இவர்களை அறியாமலே கடவுள் தன்மை புகுந்து விடுவதை இவர்கள் உணர முடியாதது வியப்புத்தான்!

**எம்.எஸ். பழநி, கல்லிடைக்குறிச்சி.**

"வெண்மையான, சுத்தமான

# லக்ஸ் டாய்லட் சோப்பின்

## நுரை மிகவும் மிருதுவானது, நறுமணம் கமழ்வது."

என்கிறார் எம்.வி.ராஜம்மா

இந்தியாவில் தயாரித்தது.

இந்த வெண்மையான, சுத்தமான சோப்பின் பாதுகாப்பை உங்கள் சருமத்திற்கு அளித்து யௌவன காந்தியைப் பெறுங்கள். எம். வி. ராஜம்மா கூறுவதாவது: "சருமத்தை பட்டுப்போல் மிருதுவாகவும், அழகாகவும் வைத்துக்கொள்ள லக்ஸ் டாய்லட் சோப்பின் மிக மிருதுவான, நறுமணம் கமழும் நுரையைப் போல் வேறெதுவுமில்லை. அது உங்கள் இயற்கை எழிலை மலரச் செய்கிறது. அன்றியும் அதன் நீடித்திருக்கும் நறுமணத்தையும் நீங்கள் மிகவும் விரும்புவீர்கள்."

"... அதனால்தான் என் வதனத்தை அழகாக வைத்துக்கொள்ள லக்ஸ் டாய்லட் சோப்பையே நம்பியிருக்கிறேன்."

**முக்கிய செய்தி!**

தலைமுதல் கால்வரை கவர்ச்சி அளிக்க

**புதிய பெரிய சைஸிலும்**

இப்பொழுது கிடைக்கிறது. இன்றே வாங்குங்கள்!

**சினிமா நட்சத்திரங்களின் அழகுதரும் சோப் ★**

LTS. 420-50 TM

# புஸ்தகப் பொழுது

## உயிர்ச் சித்திரம்

[ஆசிரியர் : தி. சு. வாசுதேவன், கிடைக்குமிடம் : பைந்தமிழ்ப் பண்ணை, 180, பெரிய கம்மாளத் தெரு, திருச்சிராப்பள்ளி ; விலை : எட்டு அணா.]

ஆசிரியரால் எழுதப்பட்ட ஐந்து சிறு கதைகளின் தொகுப்பாகும் இப்புத்தகம். புத்தகத்தின் தலைப்பாக அமைந்துள்ள 'உயிர்ச் சித்திரம்' என்ற சிறு கதை சிறப்பாக இருக்கிறது. மற்ற கதைகளும் விறுவிறுப்பான நடையிலே அமைந்துள்ளன.

## இசைத் தேன்

[ஆசிரியர் : கி. மு. நல்லதம்பிப் பாவலர் ; கிடைக்குமிடம் : பாவலர் பதிப்பகம், சென்னை-1 ; விலை : 1-4-0]

ஆசிரியரால் இயற்றப்பட்ட 81 பாட்டுகள் இப்புத்தகத்தில் இருக்கின்றன. அவை பொதுப் பகுதி, இஸ்லாமியப் பகுதி, செய்யுட் பகுதி என மூன்று பகுதிகளாகப் பிரித்துக் கொடுக்கப்பட்டுள்ளன. புத்தகத்தின் முன் பகுதியில் ஆசிரியரின் வாழ்க்கை வரலாற்றை ஒரு அன்பர் எழுதயுள்ளார். வண்டு ஒன்று தேனை நாடி மலர் ஒன்றை அணுகுவது போன்ற அட்டைப்படம் நன்றாக இருக்கிறது.

## சிந்தனையாளர் ரூஸோ

[எழுதியவர் : எம். கே. கோமேதகவேலு ; கிடைக்குமிடம் : பிரேமா பிரசுரம், சென்னை-24 ; விலை : ரூ. 1-4-0.]

பிரேமா பிரசுராலயத்தார் வெளியிட்டு வரும் சிந்தனையாளர்கள் பற்றிய புத்தகங்களில் இது நானகாவது புத்தகமாகும். 'எப்படிப்பட்ட சமுதாயத்திலே மனிதன் சுதந்திரமாக வாழமுடியும்' என்று சிந்தித்தவர் ஸ்விட்ஸர்லாந்து தேசத்தைச் சேர்ந்த ரூஸோ என்பவர். அவருடைய வாழ்க்கைக் குறிப்பு, அவருடைய சிந்தனைகள் ஆகியவை இப்புத்தகத்தில் கொடுக்கப்பட்டுள்ளன. இவை தவிர, ரூஸோ எழுதிய 'ஜூலி' என்ற நாவலின் சுருக்கத்தையும் கொடுத்திருக்கிறார்கள்.

## வீரபாண்டியக் கட்டபொம்மன்

[ஆசிரியர் : சா. சண்முகவேலு ; கிடைக்குமிடம்: ரதி பதிப்பகம், தெற்கு ஆவணி, மதுரை ; விலை : ரூ. 1-4-0]

காமாக்ஷி கலாமண்டலி நாடக சபையினர் நாடகமாக நடித்து வரும் வீரபாண்டிய கட்டபொம்மன் கதையை அப்படியே புஸ்தக வாயிலாக வெளியிட்டிருக்கின்றனர் ரதி பதிப்பகத்தினர். வீர நாடகத்திற்கு ஏற்ற விறுவிறுப்பான நடையில் வசனம் அமைந்திருக்கிறது. 'என்னால் முடிந்தது' என்று குறிப்பிட்டு மகுடமிட்டு எழுதியுள்ள பகுதியில் ஆசிரியர் தம்மைத் தாமே அவ்வளவு புகழ்ந்து கொண்டிருக்க வேண்டியதில்லை!

## அணைந்த விளக்கு

[ஆசிரியர் : வே. துரைராஜு (காதலழகன்) ; கிடைக்குமிடம் : ஔவைப் பதிப்பகம், தெப்பக்குளம், திருச்சிராப்பள்ளி.]

இது ஒரு குறுநாவலாகும். காதலி கனிமொழியும் காதலன் மணிமொழியுமே கதையைச் சொல்வது போன்று நாவலை எழுதியிருக்கிறார் ஆசிரியர். படிக்க விறுவிறுப்பாகவும் ரஸமாகவும் இருக்கிறது.

## ரத்தப் பசி

[ஆசிரியர் : "சிரஞ்சீவி"; கிடைக்குமிடம் : பிரேமா பிரசுரம் ; விலை ; ரூ. 1-4-0.]

பயங்கரமான நிகழ்ச்சிகளை அட்டைப் படமாகக் கொண்ட இப்புத்தகம் உண்மையிலேயே படிக்கவும் ஒரு பயங்கர நாவலாகவே இருக்கிறது. 'ராவணன் முடி' என்ற ஒரு மாணிக்கக் கல்லின் ரத்தப் பசிக்கு எப்படிப் பலரும் பலியாகிறார்கள் என்பதைச் சித்தரிக்கிறது நாவல். சம்பவங்கள் அடுத்தடுத்து ஆவலைத் தூண்டும் வகையில் அமைந்துள்ளன. சிறைச்சாலையில பரந்தாமன் என்ற பொது உடைமைக் கட்சிக்காரர், ஹிந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் பங்கெடுத்துக் கொண்ட தோழியர் கிளிமொழி, புரட்சி எழுத்தாளர் ரஸமட்டம் இம் மூவர்களைக் கொண்டு மோதவிட்டிருப்பதும் நன்றாக இருக்கிறது. எழுத்தாளருக்கு மட்டும் வேறுபெயர் ஏதாவது கொடுத்திருக்கலாம்!

விஜயா புரடக்ஷன்ஸார்
வெளியிட்டுள்ள "மிஸ்ஸி
அம்மா" படத்தில் ஜமுனா.

பானுமதி

# சங்கமம்

[54-ம் பக்கத் தொடர்ச்சி]

ருக்கிறீர்கள் அல்லவா? அவை கிளம்பும் போது ஒன்றன் பின் ஒன்றாய்க் கிளம்பிக்கொண்டே யிருக்கும்; மடியும் போதும் அப்படித்தான்; ஒன்றைப் பின் பற்றி மற்றொன்றாய்ச் செத்து மடியும். ஆண்டவன் இந்தப் பற்றீசலின் வாழ்வைப் பின்பற்றித்தான் மானிடராகிய நமக்கு இன்ப-துன்பங்களை அளிக்கிறார் என்பதை மாத்திரம் நாம் அறிவோம். பாருங்களேன்; துன்பங்கள் வந்தபோது ஒன்றன் பின் ஒன்றாக வந்த எனக்கு, இன்பங்கள் வந்தபோதும் அதைப் போலவே வந்தன.

யாரோ சோம்பேறிப் பைராகி ஒருவன் வீட்டுத் திண்ணையில் படுத்திருக்கிறான் என்று விரட்டியடிக்கப் போன நான், அவன் என் சகோதரன் காசிநாத் என்பதை அறிந்ததும் எத்தனை களிப்படைந்தேனோ, அதை விடக் களிப்பை ஊட்டுவதாக இருந்தன, அன்று அவன் அறிவித்த அற்புதச் செய்திகள்!

"அண்ணா" என்று தன் மீது சாய்ந்து விட்ட என்னை அவன் சட்டென்று விலக்கி விட்டு, ஒன்றும் புரியாதவன் போல விழித்த போது நான் ஒரு கணம் திகைத்துப் போனேன். பிறகு தான் அவனுடைய திகைப்பின் காரணம் எனக்கு விளங்கிற்று. ஆமாம்; தன் சகோதரி நர்மதா தான், கோட்ஸே மாமாவின் வீட்டில் குழந்தைகளை வளர்ப்பவளாகப் பணியாற்றி வருகிறாள் என்பது அவனுக்குத் தான் தெரியாதே!

"என்ன இப்படி விழிக்கிறாய், அண்ணா? உன் இளைய சகோதரி நர்மதாவை அடியோடு மறந்துவிட்டாயா?" என்று நான் அசைவற்று நின்ற அவனைக் கேட்டேன்.

"அம்மா, கிட்டத்தட்ட உங்கள் உருவில் எனக்கு ஓர் சகோதரி இருக்க வேண்டும். ஆனால், முதலில், அவள் பார்வையை இழந்தவள்; இரண்டாவதாக, அவள் கடல் விபத்தில் மடிந்து விட்டாள் என்று நம்பும்படி எனக்குச் செய்தி கிடைத்திருக்கிறது."

"நான்தான் அந்த துரதிர்ஷ்டசாலி அண்ணா; கடலில் விழுந்தவள் செத்து மடியாமல் பிழைத்து விட்டேன். கடவுள் என் வாழ்வுக் கண்களைப் பிடுங்கிக் கொண்டு, இந்தப் பாழும் கண்களைத் தந்து விட்டார்."

"இது உண்மை தானா, அம்மா?"

"இன்னும் என்ன, 'அம்மா—அம்மா', என்று அழையாதே அண்ணா; நீ அப்படி அழைப்பது என் நெஞ்சையே பிழிந்தெடுக்கிறது."

"அப்படியானால், நர்மதா, நீ பாக்கியசாலி!" என்றான் அண்ணா.

இப்படி நாங்கள் பேசிக்கொண்டிருக்கையில், தோழியின் வீட்டுக்குப் போயிருந்த யமுனா வந்து சேர்ந்தாள். பைராகி ஒருவனுடன் நான் வாக்காடிக் கொண்டிருப்பதைக் கண்டதும், "இவர்கள் கொஞ்ச காலமாக இங்கே வராதிருந்தார்களே, இப்பொழுது மறுபடியும் நம் வீட்டுத் திண்ணையைச் சோம்பேறி மடமாக்கத் தலைப்பட்டு விட்டார்களா?" என்று என்னைக் கேட்டாள். பாவம், அறியாப் பிராயத்தில் தன்னை விட்டுப் பிரிந்த தந்தை தான் அந்தப் பைராகி என்பதை அந்தச் சிறுமி எப்படி அறிவாள்!

ஆனால், அண்ணா யமுனாவை அடையாளம் கண்டு கொண்டான். அவன் கைகள் ஆவலுடன் மகளை வாரி அணைக்கத் துடித்தன. நான் ஜாடை செய்து அவனை நிறுத்திவிட்டு, "ஆமாம் யமுனா; அதோடு இந்தப் பைராகி என்ன கேட்கிறான், தெரியுமா?" என்று இழுத்தேன், அவளைச் சீண்டும் பொருட்டு.

"இருக்க இடம் கொடுத்தால் மடத்தையே கேட்பார்கள்; அது அவர்கள் வழக்கம்தானே!" என்றாள் யமுனா.

"ஆமாம், யமுனா; அப்படித்தான். அதோடு இவன் மடத்தைக் கேட்டால் கூடப் பரவாயில்லையே! ஒரு மங்கையை அல்லவா கேட்கிறான்! நீ அவன் பொருளாம்; உன்னை அவனிடம் ஒப்படைத்து விட வேண்டுமாம்."

"ஆமாம் குழந்தாய்; நீ என் பொருள் இல்லையா?" என்று அண்ணாவும் அவளைக் கிளப்பினான்.

யமுனா சூட்டிகையான பெண் இல்லையா? அவளுக்கு இதில் ஏதோ விஷயம் இருக்கிறது என்பது புரிந்து விட்டது. வேறு பெண்களாக இருந்தால் முன்பின் தெரியாத அந்தப் பைராகி இப்படிப் பேசியதற்கு, "சீ! வெளியே

போ, பிச்சைக்காரப் பயலே!'' என்று விரட்டியிருப்பார்கள். ஆனால் என்னால் வளர்க்கப்பட்டவள் சற்று நேரம் சிந்தித்தாள். பிறகு, ''அப்படியானால், சிறு வயதில் என்னை உன்னிடம் விட்டுப் போனார் என்று சொல்வாயே அந்த அப்பாவாகத்தான் இவர் இருக்க வேண்டும்'' என்று ஜோஸ்யம் சொல்வது போல் சொல்லிவிட்டாள்.

அண்ணாவால் இதன் பிறகு ஆவலை அடக்கிக் கொண்டிருக்க முடியவில்லை. ''ஆமாம் என் கண்ணே; உன் அப்பாவேதான் நான்'' என்று அவளைத் தன் மார்போடு அணைத்துக் கொண்டான். நான் சிரித்தேன்.

''சரி; வா அண்ணா, உள்ளே போய்ப் பேசிக்கொண்டிருக்கலாம்'' என்று கூறி வீட்டைத் திறந்தேன். மூவரும் உள்ளே சென்றோம்.

வீட்டினுள் நுழையும்போது அண்ணா, ''வீட்டைப் பூட்டிக்கொண்டு எல்லோரும் ஒருமிக்க எங்கே போயிருந்தீர்கள்? கோட்ஸே எங்கே? அவர் க்ஷேமந்தானே!'' என்று கேட்டான்.

''மாமா இறந்து பல வருஷங்கள் ஆகிவிட்டன அண்ணா.''

''என்ன? அந்த உத்தமர் இறந்துவிட்டாரா?'' என்று அலறினான் அண்ணா. அவன் கண்களில் நீர் சுரந்தது.

''ஆமாம்; அண்டியவர்களைச் சாகடிக்கும் இந்த அபாக்கியவதி அவரை அண்டினேன் இல்லையோ; காலன் அவரையும் கொண்டு போய் விட்டான்'' என்று கூறி நானும் கண்ணீர் விட்டேன்.

''உன்னை எதற்காகப் பழித்துக்கொள்கிறாய், நர்மதா? நீ ஒரு விதத்திலும் அபாக்கியவதி இல்லை. பார்க்கப் போனால், ஆண்டவன் உன்னிடம் அதீதமாகக் கருணை காட்டியிருக்கிறார் என்றே சொல்ல வேண்டும். அது சரி; திவாகரன் எங்கே?''

''அத்தான் எங்களை வெறுத்து வெளியேறித் தனியாக வசிக்கிறார், அப்பா'' என்று யமுனா பதில் சொன்னாள்.

''ஏன் நர்மதா?''

''எல்லாம் விதி அண்ணா; அவன் முகத்தைக் கண்டு என் வருத்தங்களை மறக்கடித்து, அவன் இன்பமே என் இன்பமாக வளர்த்தேன். பெரியவர் அவன் குழந்தையாக இருக்கையிலே, என்னிடம் ஒப்படைத்து விட்டுக் கண்களை மூடிவிட்டார். ஆனால் அவனோ வளர,வளர, தறுதலையாகத் தலையெடுக்க ஆரம்பித்துவிட்டான். என்னை மதிப்பதே யில்லை. ஏதாவது நல்லது - பொல்லாததை எடுத்துச் சொன்னால், 'நீ யார் எனக்குப் புத்தி சொல்ல;பேசாமல் உன் வேலையைப் பார்த்துக்கொண்டு கிட' என்று பேசத் தலைப்பட்டு விட்டான்.''

''ஓ! அப்படியா? பிறகு........?''

''பிறகு என்ன? இப்படியே அவன் மனசில் ஏற்பட்ட வேற்றுமை உணர்ச்சி வளர்ந்து வந்தது. 'யமுனா வயதடைந்ததும், திவாகரனுக்கே அவளைக் கட்டி வைத்துவிட வேண்டும்' என்று கோட்ஸே மாமா சாகுமுன்பு என்னிடம் வாக்குறுதி பெற்றுக் கொண்டிருந்தார். அதையொட்டி, சில மாதங்களுக்கு முன்பு ஒரு நாள் அவனிடம் கல்யாண விஷயமாகப் பேசினேன். அது வினையாக முடிந்தது. யமுனாவைத் தான் மணக்க முடியாது என்று கூறியதோடு நில்லாமல், எங்களுடன் தங்கியிருந்தால் நான் எங்கே அவளைத் தலையில் வைத்துக் கட்டி விடுவேனோ என்று பயந்து கொண்டு, தனியாகப் பிரிந்து போய் விட்டான்.''

''இவ்வளவு மோசமாகத் தலையெடுத்து விட்டானா, திவாகரன்! சரி; அவன் உன்னை வேலைக்காரியாக மதித்துவிட்டான் என்றல்லவா சொன்னாய். இப்பொழுது அவனிடம் போய், 'அப்பனே நான் உன் வேலைக்காரியல்ல; உன்னைப் பெற்ற தாய்' என்று சொல்லி விட்டு வா; பிறகு அவன் எப்படி ஒடுங்கி விடுகிறான் பார்.''

''சரிதான், போ, அண்ணா; அவனுக்கு நல்லதைச் சொன்னதற்கே, சமீபத்தில் என்னை ஒரு தடவை வெளியே பிடித்துத் தள்ளிக் காயப்படுத்தி விட்டான். இப்படி ஒரு பொய்யைச் சொல்லிவிட்டால், பிறகு கேட்கவே வேண்டாம்; என்னை அங்கேயே கொன்று போட்டு விடுவான்.''

''பொய்யில்லை நர்மதா; இது நிஜம். நூற்றுக்கு நூறு உண்மை!''

''நீ என்ன பேசுகிறாய், அண்ணா? என் திவாகரனைத்தான் கடலுக்கு இரை கொடுத்து விட்டேனே, பாவி! இவன் கோட்ஸே மாமாவால் சுவீகாரம் எடுத்துக் கொண்டு வரப்பட்டவனல்லவா?''

சென்னை ஸ்டாகிஸ்ட் : ஸ்கூல்வியூ ஸ்டோர்ஸ், 96, தம்புசெட்டி தெருவு, சென்னை-1.


"சுவீகாரம் எடுத்துக் கொண்டு வரப் பட்டவஞ? உனக்கு அப்படி யார் சொன்ஞர்கள்?"

"கோட்ஸே மாமாவே சொல்லியிருக்கிருர்; மேலும் அது இந்த நகரம் முழுவதும் தெரிந்த செய்தி ஆயிற்றே!"

"ஆனல், அவர் என்னிடம் அவ்வாறு சொல்லவில்லையே!"

"பின் என்ன சொன்ஞர் உன்னிடம்?"

"சரிதான்; இதில் ஏதோ மர்மம் இருக்கிறது. நடந்ததை விவரமாகச் சொல்லுகிறேன், கேள். நான் எந்த நிலையில் யமுனுவுடன் பம்பாய்க்கு வந்தேன் என்பதாவது உனக்குத் தெரியுமா?"

"தெரியும்; கோட்ஸே மாமா, நீ தேசாந்தரம் போன பின்பு அதை எனக்குச் சொன்ஞர். அதைக் கேட்ட பின் நான்தான் அப்படித் துடித்தேன். என் உடன் பிறந்தவனை நீ தான் இங்கு வந்து போனவன்; என்னிடம ஒப்படைக்கப்பட்டிருக்கும் குழந்தை எனது சொந்த மருமாள் என்பனவெல்லாம் எனக்குத் தெரிய வந்தன."

"ஆமாம்; ஞாபகம் வருகிறது. அன்று எனக்குக் கூட, உன்னைப் பார்த்ததும், 'நம்முடைய நர்மதாவின் ஜாடையாக இருக்கிறதே' என்ற சந்தேகம் ஏற்பட்டது. ஆனல் 'நர்மதா தான் பார்வையற்றவளாயிற்றே! இல்லை; இது அர்த்தமற்ற சந்தேகம்; இவள் நம் தங்கையாக இருக்க முடியாது' என்று எண்ணிக் கொண்டு பேசாதிருந்து விட்டேன். அதிருக்கட்டும்; இப்பொழுது நான் சொல்ல வந்ததைச் சொல்கிறேன், கேள் :—

உன்னையும் ரங்காராமையும் சந்தித்து யமுனுவை ஒப்படைக்கலாம் என்று வந்த நான், உங்கள் இருப்பிடத்தைக் கண்டு பிடிக்க முடியாது போகவே, யாரோ ஒருவர் சொன்ஞர் என்று அவளை இங்கிருந்த ஓர் அநாதைக் குழந்தைகளின் ஆசிரமத்தில் ஏற்றுக் கொள்ளச் செய்ய அங்கே போனேன். ஆசிரமத்தில் இடமில்லாத காரணத்தால் அவளை ஏற்றுக் கொள்ள இயலாதென்று தலைவி கூறிவிட்டாள். நான்

ஏமாற்றத்துடன் திரும்பலானேன். கொஞ்ச தூரம் வந்ததும், வேலைக்கா ரன் ஒருவன் ஓடி வந்து, ஆசிரமத்துத் தலைவி அழைப்பதாக அறிவித்தான். 'யமுனையை ஏற்றுக்கொள்ள மனம் இர ங்கி விட்டாள் போலிருக்கிறது' என்று திரும்பிப் போனேன். அப்பொழுதுதான் அவள் கோட்ஸேயைப் பற்றிக் கூறி, 'அவர் ஏற்கெனவே ஓர் ஆண் குழந்தை யை வளர்த்து வருகிறார். இருந்தாலும் பெண் குழந்தை ஒன்றையும் வளர்க்க வேண்டுமென்ற ஆவல் அவருக்கு உண்டு. என் ஆசிரமத்திலிருந்தே ஓர் குழந்தையைத் தருவதாகச் சொன் னேன்; ஆனால் இங்குள்ள குழந்தைகள் பெரும்பாலும், தாய் - தந்தையர் யார் என்று அறியாத நிலையில் வந்தவை கள் ஆதலால், உயர் குடும்பத்தவராகிய அவர், என்னுடைய கோரிக்கையை ஏற் றுக் கொள்ள வில்லை. நானும் இதனை உணர்ந்து அவரை வற்புறுத்தவில்லை. நல்ல வேளையாக இப்பொழுது அவர் நினைவு எனக்கு ஏற்பட்டது. ஐயா, அவர் பரந்த நோக்கங்கள் உடையவர். தாராள மனப்பான்மை படைத்தவர். அவரிடம் போங்கள்; உங்கள் வரலாற் றைச் சொல்லுங்கள். நிச்சயமாக உங் கள் மகளை ஏற்றுக்கொள்ளுவார். இந்த அனாதை விடுதியில் ஆயிரத்தில் ஒன் றாக வாழாமல், கோடீசுவரர் ஒருவரின் செல்லப் பெண்ணாக வளரும் பாக்கியம் உங்கள் மகளுக்குக் கிட்டட்டும் என்று ஆசி கூறுகிறேன்; போய் வாருங்கள்' என்று கூறி அவருடைய வியாபார ஸ்த லத்தின் விலாஸத்தையும் கொடுத்து அனுப்பினாள்.

''நான் கோட்ஸேயைச் சந்தித்து, எல் லா விவரங்களையும் கூறி, யமுனையை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கெஞ் சினேன். அவர் மனம் இரங்கி அதற்குச் சம்மதித்தார். பிறகு நாங்கள் வீட்டுக் குப் புறப்பட்டோம். காரில் வந்து கொண்டிருந்தபோது கோட்ஸே சொன் னார்: 'எல்லாம் கடவுள் சித்தம்; நம் இச்சைப்படி எது தான் நடக்கிறது? அன்று ஒரு ஆண் குழந்தைக்காக அலை யாதவாறு அலைந்தேன். எனக்குப் பிடித் தமான குழந்தை கிடைக்கவில்லை. நமக் குப் பாக்கியமில்லை என்று திரும்பிய போது அவர் எங்கிருந்தோ, எதிர்பாராத படி என் விருப்பத்துக்கேற்ற ஆண் குழந்தையைக் கொண்டு வந்து என் கையில் திணித்தார். அது போலவே இப்பொழுதும் நடந்திருக்கிறது. இற ந்து போன என் மனைவியின் நிறைவே றாத ஆசையை நிறைவேற்றி அவளு டைய ஆத்மாவைச் சாந்தி பெறச் செய்ய வேண்டி, போன வருஷமே, ஏற் கெனவே வளர்த்து வரும் ஆண் குழந் தையோடு ஓர் பெண் குழந்தையையும் வளர்த்து மகிழ வேண்டும் என்று விரும் பினேன். அதற்கு வழி யிருந்தும் வசதி யில்லாது போய்விட்டது. இப்பொழுது பாருங்கள்; முடியாது என்று மறுக்க முடியாதபடி ஆண்டவன் என் மனதைக் கவரும் வண்ணம் ஓர் பெண் குழந்தை யுடன் உங்களை என்னிடம் அனுப்பி விட்டதை.'

'ஆமாம் ஐயா; நீங்கள் ஏற்கெனவே ஓர் ஆண் குழந்தையை சுவீகாரம் எடு த்து வளர்த்து வருவதாக ஆசிரமத்தில் கேள்விப்பட்டேன்' என்றேன் நான்.

'சுவீகாரமா? இல்லை ஐயா; நான் வளர்த்து வரும் ஆண் குழந்தை மனி தர் தந்து, நான் பெற்றுக்கொண்ட தல்ல; இவனை ஆண்டவனே எனக்குத் தந்தருளினார். அது ஒரு அதிசயம் ஐயா; சொல்கிறேன், கேளுங்கள்' என்று பெரி யவர் கோட்ஸே ஆரம்பித்தார்.

'கடவுள் எனக்கு சகல பாக்கியங்களை யும் அளித்திருந்தார் ஐயா; மளிகைக் கடையில் மிகக் குறைந்த சம்பளத்தில் சாமான்கள் எடுத்துக் கொடுக்கும் பைய னாக வேலை செய்து வந்த என்னை அவர் தான் இந்த நிலைக்கு உயர்த்தி யிருக்கி றார். ஆனால் அவர் எனக்கு மக்கட் செல் வத்தை அளிக்க மாத்திரம் மறந்து விட் டார். கிடைத்ததைக் கொண்டு திருப்தி அடைவது. கிட்டாத பொருளுக்கு ஆசை கொள்வது கிடையாது. இது தான் என்னுடைய பிறவி சுபாவம். ஆகவே நான் மக்கள் இல்லாக் குறை யை அவ்வளவாக உணரவில்லை. ஆனால் என் மனைவியை இக்குறை அதி கமாகப் பாதித்தது. அவள் நோற்காத நோன்பில்லை; வேண்டிக்கொள்ளாத தெய்வம் இல்லை; போகாத கோயில் குளங்கள் இல்லை; பண்ணாத தான-தரு மங்கள் இல்லை. ஆனாலும் அவள் வயிறு திறக்கவேயில்லை. வயிறு திறக்கும் பிரா யத்தைக் கடக்கும் வரையில், கடவுள் கண் திறப்பார் என அவள் காத்திருந் தாள். அதன் பின்னர், தான் மலடி என் பதை உறுதி செய்துகொண்டு அதனையே

உலகத்தின் அதி நேர்த்தியான
பைசிகிள் வகைகள்
THE RALEIGH
ராலே
ராபின் ஹூட்
ROBIN HOOD
RUDGE
ரட்ஜ்
ஹம்பர்
THE HUMBER
SRX-14A TM
ஸென்-ராலே இண்டஸ்ட்ரீஸ் ஆப் இந்தியா லிட்.

வாடிக் கொண்டிருந்தாள். அவளுடைய பெண் உள்ளம், மக்களைப் பெறும் பேற்றை அடையாவிட்டாலும், ஒன்றை வளர்த்தாவது ஆறுதல் கொள்ள விரும்பியது. ஆசார சீலர்களான நாங்கள் கண்ட குடும்பத்தில் குழந்தையெடுத்து வளர்க்க விரும்பவில்லை. ஆகவே, எங்களது பூர்வீகமான கொங்கணத்துக்குச் சென்று எங்கள் சுற்றத்தாருக்குள்ளே யாரிடமாவது இருந்து ஓர் சின்னஞ் சிறு ஆண் குழந்தையை சுவீகாரம் பெற்று வருவதாக அவளைச் சமாதானப் படுத்திவிட்டு நான் கொங்கணத்துக்குப் போனேன். ஆனால், சோதனை போல், நாங்கள் விரும்பியது போன்ற ஆண் குழந்தை எவரிடமும் சுவீகாரம் அளிக்கும்படி இருக்கவில்லை. ஒன்று, ஆண் குழந்தைகள் நிறைய உள்ள குடும்பத்தில் அவை வயது முதிர்ந்தவைகளாக இருந்தன; அல்லது சின்னஞ் சிறு குழந்தைகள் உள்ள இடத்தில் அவை ஒரு தாய்க்கு ஒரு மகவாய் இருந்தன. ஆகவே, நான் வெறுங் கையுடனே பம்பாய்க்குத் திரும்ப வேண்டியதாயிற்று.

நான் கொங்கணத்துக்குப் போன போதும், அங்கிருந்து திரும்பியபோதும் கப்பல் பிரயாணத்தையே மேற்கொண்டேன். ரெயில் பிரயாணத்தை விட, கப்பல் பிரயாணத்துக்கு ஒரு நாள் அதிகமானாலும், சௌகரியமாகப் பிரயாணம் செய்யலாம் என்பதற்காகவே அதைத் தேர்ந்தெடுத்தேன். சமுத்திர ராணி என்கிற கப்பலில் நான் பம்பாய்க்குத் திரும்பிக் கொண்டிருந்தேன்.''

''ஆமாம் அண்ணா; நாங்கள் ஊரில் இருந்து வந்தது கூட அந்தப் பாழும் கப்பலில் தான்'' என்று நான் இடைமறித்துச் சொன்னேன்.

''எனக்குத் தெரியும் நர்மதா; அதிருக்கட்டும்; இந்தக் கதையைக் குறையும் கேள். கோட்ஸே சமுத்திர ராணியில் பம்பாய்க்குத் திரும்பிக் கொண்டிருந்தார் இல்லையா? வசதிகள் நிறைந்த முதல் வகுப்பில் பிரயாணம் செய்து வந்தும், அவருக்கு அப்பிரயாணம் அலுப்பையே தந்தது. காரணம்—அவர் மேற்கொண்டு வந்த காரியம் வெற்றி பெறாதது தான். ' இது என்ன சோதனை! ஒவ்வொருவர் குசேலரைப் போல் குழந்தைகளைப் பெற்றுவிட்டு தர்ம சங்கடப் படுகிறார்கள். நமக்கு என்னடா என்றால் சுவீகாரம் செய்து கொள்ள மனதிற்கேற்ற குழந்தை ஒன்று கிடைக்கவில்லையே! இதைச் சொன்னால் அவள் (அவர் மனைவி) நம்பக் கூட மாட்டாளே. உங்களுக்கு இஷ்டமில்லை; அதற்காகப் போவது போலப் போய்விட்டு, கையை விரித்துக் கொண்டு திரும்பியிருக்கிறீர்கள் என்றல்லவா குற்றம் சாட்டுவாள்! போனால் போகட்டும் என்று சுற்றத்தை விட்டு அயலிடத்திலிருந்தாவது நம் மனசுக்கேற்ற குழந்தை ஒன்றை வாங்கிவராது போனேமே; இல்லாவிட்டால், 'நீ-நான்' என்று போட்டி போட்டுக்கொண்டு வண்ணக் கிளிகளான பெண் குழந்தைகளைத் தருகிறோம் என்று சுற்றத்தார்கள் கெஞ்சினார்களே; அவற்றுள் ஒரு குழந்தையையாவது பெற்றுக் கொள்ளாதிருந்து விட்டோமே! இனி என்ன செய்வது?' என்று பலவாறு சஞ்சலப்பட்டுக் கொண்டே வந்து கொண்டிருந்தார் அவர்.

''முதல் நாள் பிரயாணம் முடிந்து, இரண்டாவது நாளன்று மாலையில் திடீரெனப் புயலின் அறிகுறிகள் தோன்றினவாம்........''

''அதெல்லாம் எனக்குத் தெரிந்தது தான் அண்ணா; கப்பலில் இருந்தவர்களைப் படகுகளில் ஏற்றி, கரை சேர்க்க முயன்றார்கள். அதற்குள் புயல் நெருங்கி விட்டது. படகுகளில் பல கரை சேர முடியாமல் கடலில் மூழ்கின. அப்புறம்...........?'' என்று நான் அவனை முடுக்கினேன்.

''ஆமாம்; கோட்ஸே ஏறி வந்த படகும் புயலின் வேகத்தில் கூட வந்து கொண்டிருந்த படகின் மீது மோதிற்று. இரண்டு படகுகளும் கவிழ்ந்தன. கோட்ஸேக்கு நன்றாக நீந்தத் தெரியும். அதோடு முன்னெச்சரிக்கையாக முதல் வகுப்புப் பிரயாணிகளின் 'காபி'னிலிருந்த 'மிதக்கும் பெல்ட்' (Life Belt)டையும் எடுத்து வந்திருந்தார். கரையோ அருகாமையில் தான் இருந்தது. ஆகவே அவர் அதிக சிரமமின்றி நீந்தி வந்து கொண்டிருந்தார். இந்தச் சமயத்தில முன்னால் சென்று கொண்டிருந்த இன்னொரு படகு கவிழ்ந்தது. 'குய்யோ – முறையோ!' என்ற ஓலத்தினிடையே, கோட்ஸேயின் செவியில் ஒரு 'குவா'க் குரலும் விழுந்தது. அக் குரல் அவரை

அத்தனை ஆபத்தின் இடையிலும் ஆகர்ஷித்து இழுத்தது. குரல் கேட்ட திசையில் பார்வையைத் திருப்புகையில் பச்சைக் குழந்தை யொன்று கைக்கு எட்டும்படியான தூரத்தில் ஓர் அலையினுள் மறைவதைக் கண்டார். மறு நிமிஷம் உள்ளே பாய்ந்து அக் குழந்தையைப் பிடித்துக்கொண்டார். அதை மார்போடு அணைத்துக் கொண்டு பெல்ட்டின் உதவியால் மிதந்தவாறே கரை வந்து சேர்ந்து விட்டார். கரையேறிய பிறகுதான், தாம் காப்பாற்றியது அழகே உருவான ஓர் ஆண் குழந்தை என்பதை அவர் கண்டார். 'ஆண்டவனே இது போன்ற ஓர் குழந்தை மாத்திரம் கிடைத்திருந்தால் என் மனைவி எத்தனை ஆனந்தம் அடைந்திருப்பாள்' என்று அவர் நினைத்தார். தொடர்ந்து, 'நாம் ஏன் இந்தக் குழந்தையையே எடுத்துச் சென்றுவிடக் கூடாது;' என்ற எண்ணமும் அவருக்கு உதித்தது.

கோட்ஸே மாமா இந்த சந்தர்ப்பத்தில் என்ன சொன்னார் தெரியுமா, நர்மதா? 'ஆமாம்! தெய்வம்தான் நமது நிலைக்கு இரங்கி, இப்படி ஓர் புயலை ஏவி, கப்பலையும், படகுகளையும் கவிழ்த்து, நம் கையில் இந்தக் குழந்தையை அளித்திருக்கிறது' என்று தான் அச்சமயத்தில் என்னால் நினைக்க முடிந்தது, ஐயா; அது யார் குழந்தையாக வேண்டுமானாலும் இருக்கட்டும்; நான் அதை அன்பைச் சொரிந்து வளர்க்க எடுத்துச் செல்லுகிறேனே யன்றி, கொல்வதற்கல்ல. பின்னல் எப்பொழுதாவது இக்குழந்தைக்கு உரியவர்கள் வந்து கேட்டால், அப்பொழுது உசிதம் போல் செய்து கொள்ளலாம் என்று குழந்தையைத் தோளில் சாய்த்துக் கொண்டு சமுத்திரக் கரை ஓரமாகவே நடந்தேன். நல்ல வேளையாக, கப்பல் கவிழ்ந்து விடலாம் என்று அறிவிக்கப்பட்டதால், பணத்தை எல்லாம் கப்பலில் விட்டு வந்த பெட்டியிலிருந்து எடுத்து, இடுப்பில் கட்டிக் கொண்டிருந்த தோல் பெல்டின் உட்பையில் பத்திரப்படுத்திக் கொண்டிருந்தேன். மூன்று நான்கு மைல்கள் நடந்த பிறகு ஒரு கிராமம் தென்பட்டது. அக்கிராமத்திலிருந்து ஏழு மைல்களுக்கு அப்பால், பரோடா - பம்பாய் ரெயில் பாதையிலுள்ள ஒரு ஸ்டேஷன் இருக்கிறது என்று சொன்னார்கள். மாட்டு வண்டி ஒன்றை வாடகைக்கு அமர்த்திக் கொண்டு அந்த ஸ்டேஷனுக்கு வந்தேன். அன்றிரவு ரெயிலையே பிடித்து, மறு நாள் காலையில் பம்பாயை வந்து அடைந்தேன்.

இந்தக் கதையை எதற்காகச் சொல்ல வந்தேன் என்றால், நான் ஏற்கெனவே வளர்த்து வரும் குழந்தையை, வெளியில் உள்ளோர், சுவீகரித்து வந்தது என்று நினைத்திருந்தாலும், உண்மை அதுவல்ல; நாளைக்கு அதன் பெற்றோர்கள் எப்படியேனும் விவரம் அறிந்து வந்து கேட்டால், கொடுத்து அனுப்பி விட வேண்டியது தான். அது போலவே, இன்று நீங்களும் ஏதோ ஒரு வித மன வெறுப்பினால் இக்குழந்தை

சிரஞ்சீவி பாலகிருஷ்ணன், சௌபாக்கியவதி காசிரத்தினம்மாள் திருமணம் சென்னையில் சமீபத்தில் சிறப்பாக நடந்தது. மணமகன் எஸ். ஆர். பெருங்காயக் கம்பெனி ஸ்ரீ. எம். பி. எஸ். ரத்தினசாமி நாடாரின் சகோதரர் ஆவார்.

யை எனக்குத் தந்து விட்டுப் போகிறீர்கள். கொஞ்ச காலத்தில் இந்த வெறுப்பு மாறிவிடக் கூடும். பிறகு உங்கள் குழந்தையைக் கேட்டுக்கொண்டு வரத்தான் போகிறீர்கள்.

ஆனால் ஒரு காரியத்தை நான் இப்பொழுதே உங்களுக்குச் சொல்லிவிட விரும்புகிறேன். நான் வளர்த்து வரும் ஆண் குழந்தையை அதன் பெற்றோர் வந்து கேட்டு, வாங்கிச் சென்று விட்டாலும், உங்கள் குழந்தையாவது, என் உயிருள்ள வரையில், என் மகளாகவே இருக்க வேண்டும். ஆகவே நீங்கள் தேசாந்தரத்தின் மூலம் மனப் பாரம் நீங்கித் திரும்பினாலும், என்னுடன், என் மகனை-என் தம்பியாக-வசித்து வர வேண்டுமே ஒழிய, குழந்தையை வாங்கிக் கொண்டு கம்பி நீட்டிவிடக் கூடாது.'

"நர்மதா, இவ்வளவு விவரமாக என்னிடம், திவாகரன் சுவீகாரம் எடுத்துக் கொள்ளப்பட்டவன் அலல என்று விளக்கிய கோட்லே, உன்னிடம் அதைக் கூறவேயில்லை என்பதைக் கேட்க எனக்கு ஆச்சரியமாயிருக்கிறதே" என்று கூறி முடித்தான் அண்ணா.

எனக்கும் அது ஆச்சரியமாகத்தான் இருந்தது. ஆனால், கப்பலில் என்னைப் போல் எத்தனையோ பேர் குழந்தைகளுடன் வந்திருப்பார்கள். அவர்களுள் யாரேனும் ஒருவர் குழந்தையாக, திவாகரன் இருந்திருக்கலாம் அல்லவா? அண்ணா என்ன நிச்சயத்தின் பேரில் அவனை என் மகன்தான் என்று சொல்லுகிறான்? இதைக் கேட்டபோது அவன் சொன்னான்: "நான் ஆதாரமின்றிப் பேசவில்லை, நர்மதா; திவாகரனின் வளர்ப்புத் தாயாக இருந்து வருபவள் என் சகோதரியே என்பது எனக்கு இன்றுதான் தெரிய வந்தது; என்றாலும், கோட்லேயின் வளர்ப்புப் பிள்ளை என் மருமான் திவாகரனே என்பதை நான் முன்பே அறிந்துகொண்டு விட்டேன்."

"அதுதான் எப்படி என்று கேட்கிறேன்?" என்று நான் மிக ஆவலுடன் கேட்டேன். (தொடரும்)


## ரொக்கப் பரிசு ரூ. 1,000 (ஒரு அபூர்வ சக்தியுடையது)

# மாயமோதிரம்



இந்த மோதிரம் மாயா ஜாலத்தாலும், மெஸ்மரிஸ சக்தியாலும் தயாரிக்கப்பட்டது. யாராவதொருவர் இம் மோதிரத்தை அணிந்து கொள்ளுங்கள்: உங்கள் காரியங்களில் வெற்றியோ, அல்லது உங்களிடம் பணிவோ ஏற்படச் செய்யும். உங்களை எல்லாவித ஆபத்துக்களிலிருந்தும் இது காப்பாற்றும். துர்த்தேவதைகள் உங்களிடம் அணுகாது. இந்த மாய மோதிரத்தை அணிந்து கொண்டவர்களிடம் ஆண், பெண் அடங்கி நடப்பார்கள். இவர் பெயரைக் கேட்டாலே நடுங்குவர். காணாமற் போனவர்களைக் கண்டறியலாம். நீங்கள் காதலில் வெற்றியும், கோர்ட்டு வழககுகளிலும், உத்தியோக உயர்விலும், அதிகப் பணம் சம்பாதிப்பதிலும் வெற்றி அடைவீர்கள். சுருங்கச் சொன்னால் இம்மோதிரம் ஒரு பாதுகாப்பாளனைப் போன்றது. ஒருமுறை பரீக்ஷியுங்கள். முதல் இரவிலேயே பலன் காண்பீர்கள். இதன் விலை: ரூ. 1-15-0. ஸ்பெஷல் ரூ. 3-0-0. ஸ்பெஷல் அதிக சக்தி வாய்ந்தது ரூ. 3-15-0. தபால் செலவு தனி. பலன் இல்லையென்றால் பணம் வாபஸ் செய்யப்படும்.

*Principal:* **The Bengal Mesmerism House**

(G. M.) HOSHIARPUR, (P. C.)

தது. பணம் ஒன்றுதான் உலகில் மனிதனை வாழவைக்கும் மாய மந்திரம் என்பதை அவன் உள்ளம் அனுபவ பூர்வமாக உணர்ந்திருந்தது. ஆதலால் அவன் காலணுப் பெறுமான விஷயத்தில்கூட சர்வஜாக்கிரதையாக, கடும் சிக்கனமாக இருந்து வந்தான்.

முதலாளியின் குழந்தையோ அவருக்கு அருமையாகப் பிறந்த முதல் குழந்தை. அதன் ஆண்டு நிறைவை ஒரு பெரிய கல்யாணம் போல கொண்டாட திட்டம் போட்டு, அதன்படி ஆபீஸ் சிப்பந்திகளுக்கெல்லாம், அழைப்பிதழ் கொடுத்து, நேரிலும் ஆயுஷ்ய ஹோமத்திற்கும் சாப்பாட்டுக்கும் வரச் சொல்லியிருந்தார்,

கிருஷ்ணனும் அவனைச் சார்ந்த குமாஸ்தாக்களும் வெறும் கையுடன் குழந்தையைப் பார்க்கப் போகக்கூடாது என்பதை உத்தேசித்து, சம்பளத்திலிருந்து தலைக்கு ஐந்து ரூபாயையும் கொடுத்துவிட்டு, மதிப்புக் குறைவாகப் போகாமலிருந்து விட அவன் விரும்பவில்லை. எதிலும் கணக்குப் பார்க்கும் அவனது சிக்கன உள்ளம் தான் கொடுத்த ஐந்து ரூபாய்க்கும், தன் குடும்பத்தின் ஒரு நாள் உணவு பிரச்னைக்கும் ஈடு செய்து கொண்டது. அந்த வாய்ப்பைக் கேவலம் மனைவியின் அற்ப ஆசைக்காக அவன் இழக்கத் துணியவில்லை. ராஜமும் கிருஷ்ணனும், ஒரு பஸ்ஸில் ஏறி, 'டீ.ஸ்'ஸில் வந்து இறங்கினர். அங்கிருந்து சொற்ப தூரமேயுள்ள தன் முதலாளி பங்களாவுக்குள் அந்தக் கூட்டத்தினிடையில் மனைவியுடன் எப்படியோ பூனைபோல் புகுந்துவிட்டான் கிருஷ்ணன்.

*   *   *

பெண்களுக்கென்று ஒழித்துவிடப்பட்டிருக்கும் பகுதியில் ஒரு தூண் மறைவில் அமர்ந்து கொண்டாள் ராஜம். அவளென்ன அந்தக் குடும்பத்தின் பிரதான மனுஷியா? அல்லது பிரபலஸ்தர் ஒருவரின் மனைவியா, "வந்தாயா வா!" என்று உபசரிக்க?

சமையல்காரம்மாளும், வேலைக்காரர்களும் கூடத் திரும்பிப் பார்க்காத ஒரு அலட்சிய நிலையில் மௌனமே துணையெனக் கொண்டு உட்கார்ந்திருந்தாள் ராஜம்.

அச்சமயம், அங்கே தன் தோழிகள் புடைசூழ இடுப்பில் குழந்தையுடன் பிரசன்னமானாள் புவனா. அழகே அவதாரமான அந்தக் குழந்தை செயற்கை அலங்காரத்தினால் மேலும் சோபித்தது. புவனாவுடனும் குழந்தையுடனும் அந்தத் தோழிகள்

எவ்வளவு சரளமாகவும், சகஜமாகவும் சல்லாபித்தார்கள் !

'பணம் அல்லவா இவர்களை ஒன்று சேர்க்கிறது!' என்று ஆச்சரியத்துடன் நிமிர்ந்து, முதலாளி மனைவியான புவனாவை ஒரு முறை ஏறிட்டுப் பார்த்தாள் ராஜம். ஒரு விநாடி புவனாவின் கண்களும் ராஜத்தின கண்களும் சந்தித்தன. இருவர் முகத்திலும் ஆச்சரியக் குறி சுழியிட்டது.

தன் முகபாவத்தை ஒரு நொடியில் மாற்றிக்கொண்ட புவனா ராஜத்தை நோக்கி "யாரம்மா நீ! என்ன வேண்டும்? எதற்காக இங்கேயே உட்கார்ந்திருக்கிறாய்?" என்று வினவினாள்.

அந்தக் கேள்வி ராஜத்தை என்னமோ செய்தது. பேசவே நாவெழவில்லை துணிந்து அவள் ஏதோ சொல்ல வாயெடுப்பதற்குள், புவனாவின் தோழிகளில் ஒருத்தி, "என்ன அசட்டுக் கேள்வி இது? புவனா! ஆளைப் பார்த்தாலே தெரியவில்லையா? பித்தளை வளையலும் கண்ணாடிக் கம்மலும்! இவளைப் போய் பிரமாதமாக விசாரிக்கிறாயே! ஒரு வேளை சாப்பாடு என்றால் லாபந்தானே என்றெண்ணி வந்திருப்பாள்! சீ! உனக்குக் கொஞ்சம்கூட புத்தியில்லை! இந்த மாதிரி தரித்திரங்களை உள்ளே விட்டதே பெரும் பிசகு! போதும் அவமானம்! குழந்தையை வேறு எதிரில் வைத்துக் கொண்டு நிற்காதே! திருஷ்டி விழுந்துவிடப் போகிறது!" என்றவாறே ராஜத்தை வெறுப்பு, அருவருப்பு, அலட்சியம், எல்லாம் கலந்த நிஷ்டூரப் பார்வையால் ஒரு தாக்குத் தாக்கிவிட்டு புவனாவைத் தோளில் கையை வைத்து அணைத்திழுத்தவாறே அப்புறம் சென்றுவிட்டாள். மற்றவர்களும் ஜாடைமாடையாக ராஜத்தைப் பார்ப்பதும் தங்களுக்குள்ளேயே எதோ ஆங்கிலத்தில் சொல்லிச் சிரிப்பதுமாக இருந்தனர்.

ராஜத்தை யாரோ அப்படியே அலாக்காகத் தூக்கி, வெடிக்கும் எரிமலை வாய்க்குள் தள்ளிவிட்டது போல இருந்தது, அவர்களுடைய அந்தச் செய்கை. அவமானப் புழுக்கள் அவளது இதயத்தை வெகு வேகமாக அரித்தன, கண்களில் ததும்பிய கண்ணீர் அருவியை மன அடக்கத்தினால் தடுத்து நிறுத்தினாள். கல்யாண வீட்டில் அபசகுனம் போல கண்ணீர் விடலாமா? உணர்ச்சிகளின் கொந்தளிப்பைப் பொறுத்துக் கொண்டாள். பொறுமை என்பது அனுபவத்தின் பேரில் ஏற்படும் ஓர் அபூர்வ சாதனையல்லா!

ஆடம்பரமாக ஆயுஷ்ய ஹோமம், மாமன் தோள் எடுத்தல், காது குத்தல். ஊர்கோலம், எல்லாம் சம்பிரதாயம் தவறாமல் ஒழுங்காக நடைபெற்றன.

காலையில் ஒரு டம்ளர் 'காப்பி' என்ற பெயருடைய ஜலதிராவகத்தை மட்டும் அருந்திவிட்டுப் புறப்பட்டிருந்த ராஜத்திற்கு மத்தியானம் மணி ஒன்றரைக்கு இலையில், காரம்-ஸ்வீட்டுகளுடனும், கதம்ப அன்னங்களுடனும் வந்து விழுந்த அமிருத போஜனம் விஷமெனக் கசந்தது. ஒரு கவளம் கூட உள்ளே செல்ல மறுத்தது. அது மட்டுமல்லாமல் புவனாவின் தோற்றம் வேறு அவளை அரித்துப் பிடுங்கியது. "இவள் யார்? எங்கேயோ பார்த்த ஞாபகமாக இருக்கிறதே!" என்று தன் மனக் குகையை ஓயாமல் நினைவு உளியால் செதுக்கியபடியே இருந்தாள் ராஜம்.

* * *

புரிந்துவிட்டது அவளுக்கு! புவனா அவளுடைய அத்தியந்தத் தோழி! ஆம்! ஆனால் இன்றல்ல, அன்று!

அன்றைய புவனா கிழிசல் பாவாடையுடனும், சளி ஒழுகும் மூக்குடனும், கால் ஒடிந்த மரப்பாச்சி ஒன்றை இடுப்பில் ஏந்திய வண்ணம் காட்சியளித்தாள். அப்பொழுது ராஜத்தின் தகப்பனார் தர்மலிங்கம் நல்ல நிலையில் இருந்தார். பங்களா கார் முதலிய வாழ்க்கை வசதிகள் எல்லாம் நிறைந்திருந்தன.

ஒரு நாள் இரவில்........நல்ல மழையும் காற்றுமாக படையெடுத்து கொஞ் நேரத்தில் அதுவே பெரும் புயலாக மாறி அப் பிரதேசத்தை ஆட்டிவைத்தது. மரங்கள் வேருடன் பெயர்ந்தன. குடிசைகள் காற்றாடியைப் போல் பறந்து, பம்பரம்போல சுழன்றன. அந்தப் பயங்கர இரவில், ஒரு கையினால், பூரண கர்ப்பிணியான மனைவியை அணைத்துப் பிடித்துக்கொண்டும், மற்றொரு கையில் சிறுமி ஒருத்தியைப் பிடித்துக் கொண்டும், ராஜத்தின் தகப்பனார், தர்மலிங்கம் அவர்களின் பங்களா வாசலைத் தட்டினார் ஓர் துர்ப்பாக்கியம் மிக்க மனிதர்.

தர்மலிங்கம் என்ற பெயருக்கேற்ப தர்மசிந்தையும் இரக்க சுபாவமும் உடைய ராஜத்தின் தகப்பனர் நள்ளிரவில தம்மை வந்து அண்டிய அந்த மனிதருக்கு இதய பூர்வமாக ஆதரவு அளித்தார். உலர்ந்த உடைகளும், வயிருரச் சாப்பாடும், படுக்க வசதியும் அவர்களுக்குக் கிடைத்தன.

இயற்கையின் கோப இரவின் ருத்ர தாண்டவத்தைக் காண ஆவல்கொண்ட ஆதவன் மறுநாள் காலையில் குண திசையில் உதயமானன். தர்மலிங்கம், தன்னை வந்து அண்டிய விசுவநாதனின் சோக சரிதையையும், வறுமை நிலையையும் கேட்டு மனம் வெதும்பினர். அவருக்கு ஆதரவு அளிக்கும் நோக்கத்துடன், சமையல் கலையில் வல்லவரான விசுவநாதத்தைத் தம் பங்களாவிலேயே ஸ்திரமான சமையல்காரராக வைத்துக் கொண்டார். விசுவநாதம் குடும்பத்திற்கென,'அவுட் ஹவுஸ்' ஒழிததுவிடப்பட்டது மாதம் சாப்பாடு போக முப்பது ரூபாய் சம்பளத்துடன், வருஷத்திற்கு இரு முறை புது ஜவுளிகளும் எடுத்துக் கொடுத்து அக் குடும்பத்தைப் பொறுப்பாக ஆதரித்து வந்தார் தர்மலிங்கம்.

புவனவும் ராஜமும் ஒரே பள்ளியில் படித்து வந்தார்கள். ஏழை–பணக்கார பேதமின்றி, இருவர் உள்ளத்திலும் நட்புச் செடி வேரூன்றித் தழைத்தது. இந்த சினேகம் ராஜத்திற்குப் பதினன்கு வயது நிரம்பும் வரையிலதான் நீடிக்க முடிந்தது.

வாழ்க்கை யென்பதை ஒரு உருளும் சக்கரத்திற்கு ஒப்பிடலாம். உயர்வும் தாழவும் மாறிமாறி அதில் ஏற்பட்டுக் கொண்டே தானிருக்கும்! உயர்ந்த பகுதி தரையில் பதிவதும், ஏற்கெனவே தரையைத் தொட்ட பகுதி உயரக் கிளம்புவதும் சகஜம்தானே !

திடீரென்று பிரபல பாங்க் ஒன்று முறிந்துபோனதில் தர்மலிங்கத்தின் கை சளைத்து விட்டது, அவரது செல்வம் கோடைக்காலதது வறண்ட சிற்ருறுகி விட்டது. தகிக்கும் வறுமை மணலின் கொதிப்பை அவர் உணர ஆரம்பித்தார். இந்த நிலையில் சமையல்காரர் வைத்துக் கொள்ள சௌகரியப்படுமா ? விசுவநாதத்திற்குச் சீட்டுக் கிழித்து விட்டு, எஞ்சியிருந்த தமது ஒரே பங்களாவையும் விற்றுவிட்டு, கையில் கிடைத்த ரொக்கத்துடன் சொந்த கிராமத்திற்கே வந்துவிட்டார் தர்மலிங்கம்.

அன்று பிரிந்த புவனவை இன்று குபேர நிலையில் கண்ட ராஜம் ஒரு வகையில் சந்தோஷம் அடைந்தாலும் புவன செய்த அலட்சியம் நெஞ்சின் ஒரு மூலையில் முள்ளெனத் தைக்காமலில்லை. 'நம் வீட்டில் ஒரு காலத்தில் சமையல்காரனக இருந்தவரின் பெண்ணுக்கா இத்தனை கௌரவம், ராங்கி, அகம்பாவம் எல்லாம் ' என்று எண்ணி எண்ணிப் புண்ணுகியது அவளது உள்ளம்.

திரும்பி வரும் வழியில், தன் எஜமான் வீட்டுப் பிரதாபங்களை யெல்லாம் வாய் ஓயாமல் கிருஷ்ணன் அளந்து வந்ததொன்றும் அவள் காதில் ஏறவேயில்லை. "புவனவா என்னைப் பார்த்து 'யார் நீ ?' என்று கேட்டாள் ! அவளா என்னிடம் இப்படி நடந்து கொண்டாள் !" என்று ஓயாமல் அலறியபடியே இருந்தது அவள் உள்ளம்.

வீடு வந்து சேர்ந்ததும் அதுவரையிலும் அடக்கி வைத்திருந்த கண்ணீரெல்லாம் வெள்ளமாக வெளிப்பட்டது. தன் மனச்சுமை தீரும் வரையிலும் அழுது தீர்த்தாள் ராஜம்.

மறுநாள் காலையில் ஒரு வெந்தியக் குழம்பையும், பருப்புத் துவையலையும் சீக்கிரமாகச்செய்து கணவனுக்குப் போட்டு ஆபீஸுக்கு அனுப்பி விட்டு, தானும் இலையில் சாதத்தைப் போட்டு, குழம்பில் கலந்து இரண்டொரு வாய் சாப்பிட்டாள் ராஜம். நேற்றைய் விருந்தை விட இந்த சாப்பாடு அவள் வாய்க்கும் மனதிற்கும் இனித்தது.

சாப்பிட்டுவிட்டு, மற்ற வேலைகளையும் முடித்துக் கொண்டு, ராஜம் வெளியில் வருவதற்கும், வாசலில ஆபீஸ் பியூன் ஒருவன் வந்து நிற்பதற்கும் சரியாக இருந்தது பியூனைக் கண்டதும் 'ஆபீஸ் விஷயமாக கணவனுக்கு என்னவோ ஏதோ ?' என்று பயந்து கலங்கிய ராஜத்திடம் அவன், "ஒன்றுமில்லை அம்மா ! புவன அம்மா உங்களிடம் இந்தக் கடுதாசியையும், இநத சாமான்களையும் கொடுத்துவிட்டு வரச் சொன்னுங்கோ!" என்றவாறே இரண்டு கூடை நிறைய கற்கண்டு, பக்ஷண வகைகள், மற்ருெரு தாம்பாளத்தில் வெற்றிலை பாக்கு, மஞ்சள் சகிதம், ஒரு

நல்ல பட்டுப் புடவை, ரவிக்கைத் துண்டு, எல்லாவற்றையும் உள்ளே கொண்டுவந்து வைத்துச் சென்றான்.

அவன் கொடுத்த கவரை ஆச்சரியத்துடன் வாங்கிப் பிரித்து படிக்கலானாள் ராஜம் :

"என் அன்பு சோதரி ராஜத்திற்கு,

"நான் இந்தக் கடிதத்தை எழுத ஆரம்பிக்கும் முன்னமே, முதலில் உன்னிடம் பல முறைகள் மன்னிப்பைக் கேட்டுக் கொண்டு விடுகிறேன். உன் அருமையான குணம் அவசியம் என்னை மன்னித்து விடும் என்ற நம்பிக்கை எனக்குண்டு. நேற்று உன்னிடம் நான் அவ்வாறு நடந்து கொண்டதற்குக் காரணம், நானோ என் உள்ளமோ அல்ல! வெகு நாளைக்குப் பின் உன்னைக் கண்டதும் ஓடியே வந்து கட்டிக்கொள்ள வேண்டும் போல இருந்தது எனக்கு. ஆனால், என் புக்கத்தில் என்னால் முக்கியமாகக் காப்பாற்றப் படவேண்டியது ஒன்று உண்டு. அதுதான் கௌரவம். நான் ஒரு ஏழைப் பெண் என்பதோ, அல்லது என்னைச் சார்ந்தவர்கள் ஏழைகள் என்பதோ எக்காலத்திலும் வெளியில் தெரியாமல் நடந்து கொள்ள வேண்டும் என்பது அவர்களின் கண்டிப்பான உத்தரவு. ஏழைகள் என்றால் மனிதர்களிடையே ஒரு நீசமான பிறவிகள்—பணக்காரர்களின் உழைப்புக்கு மட்டும் உபயோகப்பட வேண்டியவர்கள்—மற்ற சமயங்களில் ஒதுக்கப்பட வேண்டியவர்கள்—என்பதே என் புக்ககத்தவர்களுடைய அசைக்க முடியாத தீர்மானம்.

"நேற்று உன்னை அவமதித்துப் பேசியவள் என் கடைசி நாத்தனார். அந்த சூழ்நிலையில் நான் உன்னை என் சிநேகிதி யென்றால் அவ்வளவு தான்! உடனே வீட்டிலேயே ஒரு 'கொரியா போரை' சிருஷ்டித்திருப்பாள் அந்த அகம்பாவக்காரி. என் கண்களில் கண்ணீரைக் காண்பதில் அவளுக்குள்ள ஆனந்தம் அளவிட முடியாதது.

"வெகுநாளைக்குப் பிறகு பிறந்த என் அருமைக் குழந்தையின் சுதினத்தன்று ஒரு கலவரத்தையும் கண்ணீரையும் உண்டு பண்ண நான் விரும்பவில்லை. என் குழந்தையின் க்ஷேமத்தை உத்தேசித்து, நான் மனம் அறிந்து செய்த இந்தத் தவறை நீ மன்னித்துத்தானாக வேண்டும். என் நெஞ்சில் என்றும் உன் அன்பு ஒன்று போலவே நிலவியிருக்கும். நான் போட்டுக்கொண்ட வேஷத்திற்குத் தகுந்தவாறு நேற்று நடிக்க வேண்டியிருந்தது; அவ்வளவுதான்.

"இத்துடன் அனுப்பி யிருக்கும் மங்கலப் பொருள்களை என் அன்பின் அடையாளமாக நீ ஏற்றுக் கொள்ள வேண்டும். என் கணவர் ஒரு விதத்தில் அவர்களைவிட நல்லவர் என்று தான் சொல்ல வேண்டும். அவருடைய சமயம் அனுசரித்து, உன் கணவருக்கு நல்ல பதவி உயர்வும், சம்பள உயர்வும் ஏற்பட வழி செய்கிறேன். உன் குடும்ப நிலை பூராவும் பியூன் கந்தசாமி சொல்லி அறிந்து கொண்டேன்! இனி உனக்குக் கவலை வேண்டாம்! இந்த அபலை புவனாவை மன்னிப்பாயா?

உன் அன்புள்ள
புவனா"

கண்களில் நீர் சுரக்க, கடிதத்தை மார்புடன் அணைத்துக் கொண்டாள் ராஜம். 'உண்மை அன்பிற்கு அணை போடும் போலி கௌரவம், ரொம்ப நல்ல கௌரவம் தான்!' என்று அவள் உள்ளம் நினைத்தது.


அதியற்புதமான

ஸ்டுடியோ போர்ட்ரெய்ட்
பிளாஷ் போட்டோக்கள்
ஸ்டில் போட்டோக்கள்
குரூப் போட்டோக்கள்
டெவலப்பிங், பிரின்டிங்,
என்லார்ஜ்மென்ட்

இவைகளுக்கு
விஜயம் செய்யுங்கள்

தேவன் ஸ்டுடியோ

151 பிராட்வே :: சென்னை-1
தபால் பெட்டி நெ. 1363
போன்: 8607 தந்தி: FOTODYES

# பிரம்ம லோகம்

வாஹினி ஸ்டுடியோவில் பெருமளவு படமாகி விட்டதாம் விண்ட்ஸர் புரொடக்ஷன்ஸின் "நம் குழந்தை" தமிழ்ப் படம். படத்தின் டைரெக்டரான கே. எஸ். கோபாலகிருஷ்ணனே படத்தின் கதையை எழுதியுள்ளார். வசனமும் பாட்டுகளும் தஞ்சை ராமய்யா தாஸால் எழுதப் பட்டுள்ளன. ஜெமினியில் இருந்த எம். டி. பார்த்தஸாரதி படத்தின் சங்கீத டைரெக்ஷனைக் கவனித்து வருகிறார். நாகய்யா, மனோஹரா, ஏ. பி. நாகராஜன், டி. பாலசுப்ரமண்யம், வி.எம்.ஏழுமலை, எஸ். வரலக்ஷ்மி, குமாரி லக்ஷ்மி, லக்ஷ்மிபிரபா, தனம் இவர்கள் தவிர கிருஷ்ணன்-மதுரம் ஹாஸ்ய ஜோடியும் இப்படத்தில் நடிக்கிறார்கள்.

## சதி பகுளா

ஸ்ரீ ராஜ ராஜேஸ்வரி பிலிம் கம்பெனியார் தாங்கள் ஜெமினி ஸ்டுடியோவில் தயாரித்து வரும் தமிழ்—தெலுங்கு இரு பாஷைப் படத்திற்கு "சதி பகுளா" என்று பெயர் கொடுத்திருக்கின்றனர். கண்ணாம்பாவும் அஞ்சலியும் பிரதம நடிகைகளாக உள்ள இப்படத்தை கே.பி. நாகபூஷணம் டைரெக்ட் செய்து வருகிறார்.

## ஜெய கோபி

விக்ரம் புரொடக்ஷன்ஸின் "ஜெய கோபி" மின்னல் வேகத்தில் தமிழ்ப் படமாக்கப்பட்டு வருகிறது ரேவதி ஸ்டுடியோவில். நாகய்யா, ஜி. வரலக்ஷ்மி, ஜமுனா, மாஸ்டர் வெங்கடேஸ்வரன் ஆகியோர் நடிக்கும் இப்படத்தை பி. எஸ். ரங்கா டைரெக்ட் செய்து வருகிறார். இப்படத்தின் பூரண உரிமைகளையும் அசோகா பிக்சர்ஸார் பெற்றிருக்கின்றனர்.

## டாக்டர் சாவித்திரி

அருணா பிலிம்ஸாரின் "டாக்டர் சாவித்திரி" ரேவதியிலும்-பிலிம்சென்டரிலுமாகப் படமாகத் தொடங்கி விறுவிறுப்பாக முன்னேறிவருகிறது ஆர். எம். கிருஷ்ணசாமி டைரெக்ஷனில் தயாராகிவரும் இப்படத்தில் "டாக்டர் சாவித்திரி"யாக அஞ்சலி தேவி நடித்து வருகிறார். மற்றும் இப்படத்தில் எம். என். ராஜம், எஸ். பாலச்சந்தர், எம். என் நம்பியார், டி. பாலசுப்ரமண்யம், ஆகியோரும்—கிருஷ்ணன்—மதுரம் ஹாஸ்ய ஜோடியும் நடித்து வருகின்றனர். படத்தின் திரைக் கதை, வசனம் ஆச்சாரியாவால் எழுதப் பட்டுள்ளன.

## செல்லப் பிள்ளை

மார்ச் மாதம் திரைக்கு வந்து விடுமாம் ஏவி எம். மின் "செல்லப் பிள்ளை" ஏற்கெனவே நடித்து வந்த நடிகர்கள் தவிர டி. எஸ். பாலய்யா ஒரு முக்கிய கதாபாத்திரமாக இப்படத்தில் நடித்துவருகிறார். ஏற்கெனவே ஒரு நடிகர் நடித்துவந்த ஒரு கதா பாத்திரத்திற்குத் தங்கவேலு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளார். ஜாவர் சீதாராமன் பற்பல புதிய மாறுதல்களுடன் திரைக் கதையை திருத்தி அமைத்து, வசனங்களை எழுதியுள்ளார். படம் எம். வி. ராமன் டைரெக்ஷனில் தயாராகி வருகிறது. பி. ஆர். பந்துலு கே. ஆர். ராமசாமி, முஸ்தாபா, சாவித்திரி, பண்டரிபாய், கண்ணாம்பா ஆகியோர் படத்தில் நடித்து வருகின்றனர். இதே படம் "வதின" என்ற பெயரில் தெலுங்கிலும் படமாகி வருகிறது.

## ஏழையின் ஆஸ்தி

இம் மாதம் திரைக்கு வரக்கூடிய படங்களில் ஒன்றாக இருக்கும் "ஏழையின் ஆஸ்தி" தமிழ்ப் படம். இப்படத்தின் வசனங்களை உதயகுமார் எழுதியிருக்கிறார். ரோகிணி ஸ்டுடியோவில் தயாராகியுள்ள ரோகிணி பிக்சர்ஸின் படமாகும் இது. படத்தில் ஜக்கய்யாவும்-சௌகார் ஜானகியும் காதல் ஜோடிகளாக நடிக்கின்றனர். வில்லனாக ராஜ் நளாவும், அவன் தாயாக சூர்ய காந்தமும் நடித்து வருகின்றனர். இவர்களைத் தவிர சந்திர குமாரி என்ற புதுமுகமும் நடித்து வருகிறார். படத்தை எச். எம். ரெட்டி மேற்பார்வையில் டி. எல். ராமச்சந்தர் டைரெக்ட் செய்து வருகிறார்.

## எல்லாம் இன்பமயம்!

நியூடோன் ஸ்டுடியோவில் தயாராகி வரும் "எல்லாம் இன்பமயம்" தமிழ்ப் படம் முக்கால் பகுதிக்கு மேல் படமாகி விட்டிருக்கிறது. படத்தின் திரைக் கதையை ஆர். பத்மநாபனும், வசனங்களை என். கே. பத்மநாபனும் எழுதியுள்ளனர். படத்திற்கான சில பாடல்களை வி. சீதாராமன் எழுதியிருக்கிறார். ஆர். பத்மநாபனின் சூபர்விஷனில் ஜிதன் பானர்ஜி படத்தை டைரெக்ட செய்து வருகிறார். படத்தின் சங்கீத டைரெக்ஷனை கண்டசாலா கவனித்து வருகிறார். ராஜம் சுலோசனா, ராகினி, டி. ஆர். ராமச்சந்திரன், டி. கே ராமச்சந்திரன், தங்கவேலு, ஆகியோர் படத்தின் முக்கிய கதாபாத்திரங்களாக நடித்து வருகின்றனர்.

## முதல் தேதி

படப் பிடிப்பு அநேகமாக முடிவடைந்துவிட்டது என்ற நிலையை அடைந்துவிட்டிருக்கிறது பத்மினி பிக்சர்ஸின் "முதல் தேதி". இது தமிழ், கன்னடம் ஆகிய இரு பாஷைகளில் தயாராகும் படமாகும். பிரபல மராத்தியக் கதை ஒன்றை திரைக் கதையாக்கியிருக்கும் ப. நீலகண்டன் தமிழ்ப்படத்தின் வசனங்களை எழுதியிருப்பதுடன்—இரு பாஷைப் படங்களையும் டைரெக்ட் செய்து வருகிறார். ரேவதி ஸ்டுடியோவில் தயாராகி வரும் இப்படத்தின் விநியோக உரிமைகளை மதராஸ் பிக்சர்ஸார் பெற்றுள்ளனர். அஞ்சலிதேவி, சிவாஜி கணேசன் பிரதம பாகங்களில் நடிக்கும் இப்படத்தில் கிருஷ்ணன், மதுரம் ஹாஸ்ய ஜோடியும் நடித்து வருகின்றனர். பி. ஆர். பந்துலுவும் முக்கியமான ஒரு கதா பாத்திரமாக நடித்து வருகிறார். இப்படத்தில் 'எமலோக—சொர்க்கக் காட்சிகள்' கனவுக் காட்சிகளாக சேர்க்கப்பட்டுள்ளனவாம்.


எமது புது வருட
பரிசுகள்

செல்வம் 1 பலம் பெருங்காய பாக்கெட்டுகள் ஒவ்வொன்றிலும் அதிர்ஷ்ட நெம்பர்கள் உள்ளன. பிப்பரவரி மாதம் 50 பரிசுகள் வழங்கப்படும்.

நாட்டுக்கு வேண்டியது செல்வம்
வீட்டுக்கு வேண்டியது

விபரங்களுக்கு:

செல்வம் இண்டஸ்டிரியல்ஸ்,
சென்னை—21.

எங்கள் செல்வம் & S. G. ஜவ்வாது வத்திகள் மார்க்கெட்டில் சிறந்தவை.

# வாழ்க்கை வர்ணனை

[12-ம் பக்கத் தொடர்ச்சி]

இந்தப் பாத்திரமொன்றும் சொல்லிக் கொள்ளக்கூடிய தான பெரிய பாத்திரமல்ல; எனினும், பணம் கிடைத்தது. இவர் வேண்டியதும் அதுதானே!

இதன்பிறகு, அவர் "டிங்கு ரங்கா" "பாதாள பைரவி" "பெண்லி சேஸி சூடு" "மல்லீஸ்வரி" ஆகிய படங்களில் நடித்திருக்கிறார்.

சுபத்திரம்மா படங்களில் நடிக்கத் தொடங்கியதுமே தீர்மானம் செய்து விட்டார்—தம் புத்திரியைச் சினிமாவில் நடிக்கச் செய்தால் நிறையப் புகழும் பணமும் கிடைக்கும் என்று. அவர் அதற்கான தீவிர முயற்சிகளிலும் ஈடுபட்டார். "மணமகள்" படத்தில் கோஷ்டி நடனத்தில் சூர்யகலாவுக்குப் பங்கு கிடைத்தது இதுதான் அவரது முதல் படம். இதைத் தொடர்ந்து நாகய்யா தயாரித்து வெளியிட்ட "என் வீடு" படத்திலும் சூர்யகலா கோஷ்டி நடனம் ஆடியிருக்கிறார்.

நடனப் பயிற்சி முடிந்தவுடன், சூர்யகலாவின் எண்ணமெல்லாம் "நடன உலகில் ஒரு நக்ஷத்திரமாக விளங்க வேண்டும்" என்பதே. ஆதலால், அவர் முதலில் "சினிமாவில் நடிக்க முடியாது" என்று கூறிவிட்டார். ஆனால், பிறகு அருமைத் தாயாரின் விருப்பத்தை அவரால் தள்ள முடியவில்லை. வேண்டா வெறுப்புடனேயே சினிமா உலகில் பிரவேசித்தார். ஆனால் சினிமாவில் ஆடத் தொடங்கிய பின்னரோ சூர்யகலாவின் அபிப்பிராயம் தலைகுப்புற மாறிவிட்டது. "இனி சினிமா உலகை விட்டு வெளியேறவே கூடாது" என்று அவர் தீர்மானித்துக் கொண்டார்.

தாயாரும பெண்ணுமாக ஒரு நாள் ஆந்திர டைரெக்டர் ஸி. எச். நாராயண மூர்த்தியின் வீட்டிற்குச் சென்று அவரைச் சந்தித்தனர். தம் பெண்ணுக்கு ஒரு சந்தர்ப்பம் அளித்து உதவ வேண்டுமென்று தாயார் அந்த டைரெக்டரிடம் கேட்டார். ஆனால், பெண்ணோ ஒரு படி அதிகம் சென்றுவிட்டார். 'நாராயண மூர்த்தி அவரது படத்தில் நடிக்க ஒரு சந்தர்ப்பம் அளிக்கா விட்டால் அங்கேயே தாம் உண்ணாவிரதம் தொடங்கிவிடப் போவதாக' சூர்யகலா கூறினாராம்!

சூர்யகலாவும், அவரது தாயாரும்

இந்தப் பேச்சு டைரெக்டரின் மனதைக் கவர்ந்தன. உண்ணாவிரதம் இருக்க முன்வந்த அவரை, நல்லவேளையாக ஆந்திர பிரிவினைப் பிரச்னை பககம் திருப்பி விடாமல், ஆந்திர தமிழ் ஒற்றுமை நிறைந்த சினிமா உலகத்திற்குள் டைரெக்டர் திருப்பிவிட்டது நம பாக்கியம்தான்.

நாராயணமூர்த்தி தாம் தயாரிக்கத் தொடங்கியிருந்த அசோகா பிக்சர்ஸாரின் "நா செல்லலு" தெலுங்குப் படத்தின் கதாநாயகி வேஷத்தையே தைரியமாக சூர்யகலாவுக்கு அளித்து, நடிக்கச் செய்தார். நல்ல வெற்றி பெற்ற இப்படத்தில் சூர்யகலா குருட்டுப் பெண் மீனாவாக நடித்திருக்கிறார். அவரது நடிப்பு பாராட்டக் கூடியபடி அமைந்துவிட்டதனால் இளம் நக்ஷத்திரமான அவருக்கு பட்டவுலகில் திடீரென மதிப்பும் அதிர்ஷ்டமும் ஏற்படத் தொடங்கிவிட்டது.

"நா செல்லலு" படத்தில் ஒரு பகுதியை அது தயாராகிக் கொண்டிருந்த போதே ஏவி. எம். பார்த்தார். பிறகு சூர்யகலாவை நேரிலும் பார்த்தார். 'சூர்யகலா வெகு விரைவில் முன்னணி

யில் பிரகாசிக்கப் போகும் நக்ஷத்திரம்' என்பதை அவர் ஒரு நொடியில் எடை போட்டு விட்டார். உடனே மெய்யப்பன் அவரை மூன்று வருஷ காலத்திற்கு ஒப்பந்தம் செய்து கொண்டார்.

அந்த சமயத்தில் ஏவி. எம். மும், ஆர். என். ஆர் பிக்சர்ஸும் கூட்டுத் தயாரிப்பாக "ஜாதகம்" படத்தை தமிழ் கன்னடம் ஆகிய பாஷைகளில் தயாரிக்க ஏற்பாடாகி யிருந்தது. இப்படங்களில் சூர்யகலாவுக்கு கதாநாயகியாக நடிக்கும் வாய்ப்பு அளிக்கப்பட்டது. இந்த வாய்ப்பை சூர்யகலா சரியாகப் பயன்படுத்திக் கொண்டார்.

"ஜாதகம்" தமிழ், கன்னடப் படங்கள் சிறந்த வெற்றியாக அமைந்துவிட்டன. சூர்யகலாவின் நடிப்பு இப்படங்களில் மிகப் பாராட்டத் தக்க முறையில் அமைந்திருந்ததை நேயர்களறிவர். இவை மூலமே அவர் ஒரு முன்னணி நக்ஷத்திரத்தின் ஸ்தானத்திற்கு திடீரென உயர்ந்து விட்டார். இப்படங்கள் அடைந்த வெற்றியின் விளைவாக இப்படத்தை பிறகு தெலுங்கு பாஷையிலும் தயாரித்து வெளியிட்டனர். அதிலும் சூர்யகலா நன்கு நடித்திருக்கிருர்.

"ஜாதகம்" படம் முடிந்ததும் ஏவி. எம். நூதனமான முறையில் தயாரித்து வெளியிட்ட "அந்த நாள்" படத்தில் சூர்யகலா நடித்தார். இப்படம் பண வசூலில் சாதாரண வெற்றியாகவே முடிந்ததென்ருலும், சூர்யகலா தம் பாகத்தை நன்ருகவே நடித்திருக்கிருர்.

சூர்யகலா ஏவி. எம். முடன் செய்து கொண்டிருக்கும் ஒப்பந்தம் இன்னும் எட்டு மாதங்களுக்குப் பிறகே முடிவடையும். இருந்த போதிலும் ஏவி. எம். தாராள மனதுடன் சூர்யகலாவுக்கு வெளிப் படங்களில் நடிக்க அநுமதியளித்திருக்கிருர். சூர்யகலா தற்போது "பெண்ணரசி", "டௌன் பஸ்" ஆகிய தமிழ்ப் படங்களில் நடித்துக் கொண்டிருக்கிருர்.

சூர்யகலாவின் தாய்பாஷைதெலுங்கு. சென்னையில் வந்து தங்கிய சென்ற ஆறு வருஷங்களுக்குள் அவர் தமிழ் பாஷையை பேசமட்டுமன்றி எழுதப் படிக்கவும் கற்றுக்கொண்டு விட்டார். கன்னட பாஷையில் அவருக்குப் பேச மட்டும வரும். தற்போது ஹிந்தி, ஆங்கிலம் இவைகளைக் கற்று வருகிருர்.

சூர்யகலாவுக்கு நடனத்தைப் போலவே சங்கீதத்திலும் மிக இஷ்டம். சிறு வயதில் அவர் ராஜா ராவ் என்ற ஒருவரிடம் சிக்ஷை சொல்லிக் கொண்டார். அவரால் பாடவும் முடியுமாம்.

சூர்யகலாவை நேரிலோ, சினிமாவிலோ, போட்டோவிலோ பார்ப்பவர்கள், "இவருக்கு வயது பதினெட்டுக்கு மேல்தானிருக்கும்" என்று நிச்சயமாக் கூறுவார்கள். ஆனல், சூர்யகலாவோ, "எனக்கு நிச்சயமாக பதினன்கு வருஷங்களும், எட்டு மாதங்களுமே முடிந்திருக்கின்றன" என்று கூறுகிருர். சூர்யகலாவுக்கு சோகம் உள்பட எல்லா ரஸ பாவங்களையும் நடிக்க வேண்டும் என்பது அவா. 'விரைவில் ஒரு அகில இந்திய நக்ஷத்திரமாக' ஆகிவிட வேணடும் என்பது அவரது லக்ஷியங்களில் ஒன்ரும்.

"இதற்கான திறமைகளும், சூசனைகளும் உங்களிடம் உள்ளன. ஆனல், உடல் தோற்றத்தை ஒரே சீராக வைத்துக்கொள்ள நீங்கள் பெரிதும் முயல வேண்டும்"—என்று நான் உபதேசம் செய்து விட்டு வந்தேன்!

. . .


ரூ. 5க்கு 15 ஜ்வெல் கைக் கடிகாரம்

ரூ. 5-க்கு ஒரு பவுண்டன் பேனவும், 15 ஜ்வெல் கைக் கடிகாரமும் அடையலாம். அழகுக்கும், உறுதிக்கும் 15 வருஷ உத்தரவாதம்.

தபால் செலவு ரூ. 1—8—0.

SWISS WATCH SUPPLIER
(G.M.) Shahdara (DELHI)

காமிரா இனம்



பல்வேறு நகரங்களிலுள்ள பத்து பேர்களின் விலாஸம் கொடுக்கும் 1,000 பேர்களுக்கு புதிய மாடல் காமிரா இனமாக அளிக்கத் தீர்மானித்திருக்கிறோம்.

General Supply Store
(G.M.) Shahdara (DELHI)

பிப்ரவரி 19உ முதல்

தமிழ் நாடெங்கும்

ஹாஸ்யம் நிறைந்த சமூக சித்திரம்

மாடர்ன் தியேட்டர்ஸ்

# கதாநாயகி

டைரக்ஷன் K.ராம்நாத்

பத்மினி T.R.ராமச்சந்திரன்

ராகினி.... K.A.தங்கவேலு

M.N.ராஜம் நடித்தது ...

கதை, வசனம்:
T.K.கோவிந்தன்

இப் படத்தில் ஏ. எம். ராஜா, பி. லீலா, சுசிலா ஆகியோர் பின்னணி பாடியிருக்கின்றனர். "முடியுமென்றால் படியாது", "தெரிந்துகொள்ளணும் பெண்ணே", "பழகத் தெரியணும்", "பிருந்தாவனமும்", "மாயமே நானறியேன்" ஆகிய பாட்டுகள் இனிமையிலும், அர்த்தபுஷ்டியிலும் சிறந்து விளங்குகின்றன. படத்தின் பாடல்களும்,வசனமும் தஞ்சை ராமய்யா தாஸால் எழுதப்பட்டவை. வசனங்களும் பொருத்தமாக அமைந்துள்ளன.

இப்படத்தில் வரும் நடனம் ஒன்றுவது திருப்திகரமாயில்லை. மேரியின் கனவுக் காட்சி அனாவசியமான பகுதி. இதற்காக ஏராளப் பணத்தைச் செலவழித்து பிரம்மாண்டமானஸெட்டிங்ஸ்களை அமைத்திருக்கவேண்டியதில்லை.

மேலே கூறியுள்ளதுபோல் சில குறைகள் இருந்தபோதிலும், "மிஸ்ஸியம்மா" ஒரு நல்ல பொழுதுபோக்குப் படம். சிரிக்காதவர்களைக்கூட சிரிக்க வைத்துவிடக்கூடிய படம். சிறியோர், பெரியோர், பெண்மணிகள் யாவரும் பார்க்கக்கூடிய ஒரு தூய்மையான படம் "மிஸ்ஸியம்மா". —பி. ஆர். எஸ்.

### சஷ்டியப்த பூர்த்தி விழா

கோவை பிரபல நகைவியாபாரியான வைஸ்யபூஷணம் ஸ்ரீ. பி. ஏ. ராஜு செட்டியாரின் சஷ்டியப்த பூர்த்தியை அவரது புத்திரர்களான ஆர். கிருஷ்ணன், ஆர். தாமோதரன், சகோதரரின் புத்திரர்களான ஆர். விஸ்வநாதன், ஆர். ரகுநாதன் ஆகியோர் வெகு சிறப்பாகக் கொண்டாடினார்கள். சென்ற மாதம் 26ம் தேதியன்று கோவையில் இந்த விழா சாஸ்திரோக்தமான முறையில் நடைபெற்றது. இதை யொட்டி, இக் குடும்பத்தினரின் வரலாறுகள் அடங்கிய ஒரு மலரை "கோவை முரசு" ஆசிரியர் எஸ். ஏ. மாணிக்கம் வெளியிட்டிருக்கிறார்.

### தியேட்டரில் பிரசவம்

சென்ற மாதம் 23ம் தேதி சென்னை ராக்ஸி தியேட்டரில் ஒரு அபூர்வமான சம்பவம் நிகழ்ந்தது. பூரண கர்ப்பிணியான முனியம்மா என்ற ஸ்திரீ "மிஸ்ஸியம்மா" படம் பார்க்க வந்தவர், படத்தின் ஹாஸ்யத்தை ரஸித்துச் சிரித்து சிரித்து, அதன் விளைவாக தியேட்டரிலேயே பிரசவம் ஏற்பட்டுவிட்டது!

தேனாம்பேட்டை காங்கிரஸ் பொருட்காட்சி புதிய மைதானத்திலுள்ள எங்கள் ஸ்பெஷல் ஸ்டாலுக்கு விஜயம் செய்யுங்கள்

உங்கள் தேவைக்கு ஏற்றவாறு நூதன முறையில் அழகிய வேலைப்பாடுகளுடன் கூடிய

**ஈவர்ஸில்வர் பாத்திரங்கள்**

எங்களிடம் கிடைக்கும்

**M. A. எத்திராஜுலு நாயுடு**

7/4, ஈவினிங் பஜார் ரோடு :: மதராஸ்—3.

134159 NW 3721, NW1.19 N55.8.5

Edited and Published by P. R. S. Gopal (Gundoosi) at 36, Godown St., Madras—1 Printed by S. Sriraman at the Commercial Printing and Publishing House, 46, Armenian Street, Madras—1.


இந்தியாவின்
இணையற்ற பட்டணம் பொடி தொழிற்சாலை
N.V.S
MADRAS
Rajan C.V.
N.V. ஷண்முகம் கம்பெனியார்
பட்டணம்பொடி தொழிற்சாலை
த.பெ.555. மதராஸ்-21.

GUNDOOSI Regd. No. M. [illegible]024 February 1955
Registered as a News Paper in Ceylon.

G. Palani News Mart
MADRAS-1